# பிழைக்கும் வழி

## PRACTICAL LIFE.

ஜி. எ. வைத்தியராமன், பி. எ., பத்திராதிபர்

G. A. VaidyaRaman, B. A. EDITOR.

புஸ்தகம் 4. Vol. 4. — பரீதாபிஷு ஆவணிமீ, AUGUST 1912. — ஸஞ்சிகை 8. No. 8.

## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. | | | | | Foreign. | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Rs. | A. | P. | | | Rs. | A. | P. |
| Per annum ... | 4 | 0 | 0 | ... | ... | 6 | 0 | 0 |
| Single copy ... | 0 | 6 | 0 | ... | ... | 0 | 8 | 0 |
| Sample copy ... | 0 | 2 | 0 | ... | ... | 0 | 3 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 Page | ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do | ... | 2 | 8 | 0 | do |
| ¼ do | ... | 1 | 4 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | | | அந்நிய நாடு. | | |
|---|---|---|---|---|---|---|---|
| வருஷம் 1 க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| தனிப்பிரதி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 2 | 0 | ... | 0 | 3 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் | ஒன்றுக்கு | 5 | 0 | 0 |
| ½ பக்கத்திற்கு | ,, | ,, | 2 | 8 | 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, | ,, | 1 | 4 | 0 |

**வியாஸம்எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக கிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில், அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பேனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, ஜார்ஜ்டவுன், மதராஸ்.

## SEEDLINGS AND PLANTING.

BY

M. VAIDYANATHAN.

### நாற்றும் நடுகையும்.

நாற்று நன்றாய் வளர்ந்து கூடிய சீக்கிரத்தில் கைக்கெட்டவேண்டும் என்பது எல்லாரின் கருத்து. ஸாதாரணமாய் பத்து ஏக்கரா நிலத்துக்கு ஒரு ஏக்கரா நாற்றங்கால் தேவை. திருநெல்வேலி ஜில்லாவில் பதினரில் ஒருபங்கு தேவையா யிருக்கிறது. இ.துமிகக் கேவலம். கோதாவரியில் விதையைக் கலக்கத்தெளிப்பதால் நாற்று பட்டை கட்டுகிறது. நாற்று பட்டை கட்டும்படி செய்வதே முதல்வேலையும் முக்கியமுமானது. அதற்கு பக்குவங்கள் அவசியம்.

ஒற்றை நாற்று நடுகையைப்பற்றி பழக்கமில்லாதவர்கள் வாதமுறையென நினைக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவில் இப்போது புது முறையை அநுஸரிக்கிறார்கள் என்றாலும், நூற்றுக்கு எழுபதுபேர் பழைய முறையைக் கைவிடுவதில்லை. அவர்கள் சொல்லும் ஆக்ஷேபம் விநோதமாய் இருக்கிறது. "நாற்றங்கால் மேடு பள்ளமில்லாமல் இருக்கவேண்டும். செய்நேர்த்தி அதிகமாகவேண்டும். நடுகைக்கு நடவாள் அதிகமாகவேண்டும்" என்கிறார்கள். செய்நேர்த்தியும் மேடு பள்ள மில்லாதிருத்தலும் பழைய முறைக்கும் வேண்டியதென்பதை மறந்துவிடுகிறார்கள். தவிர, நடவாள் அதிகமாக வேண்டுமென்பது ஒப்புகொள்ளக் கூடியதல்ல. விதையைக்கலக்க தெளிப்போமானால், நாற்று நன்றாய் பட்டைகட்டி ஒவ்வொரு அலகும் மூன்றுக்கு மேற்பட்ட கிளைகள் உள்ளதாயிருக்கிறது. ஆகவே, கிளைகளைப் பிரிக்காமல் தூரத்தில் நடவேண்டும். அப்போது ஏக்கர் ஒன்றுக்கு 5 முதல் 7-க்குமேல் நடவாள் வேண்டியதில்லை.

மேல்கண்ட விதமாய் நாற்று கிளைகள் உள்ளதாய்ச் செய்வதற்கு மண்ணை நன்றாய் ஏழுதரம் உழுது மடக்குவதுடன், குழையும் மிதக்கப் போட்டு சேறு கறுக்க வைப்பது அவசியம். குழையில் ஆடா தொடை விசேஷம். சீக்கிரம் அழுகுவதுடன் சேறு கறுக்க வைக்கிறது. கருவேலங்கிளைகளைப் பரப்பி தழை உதிர்ந்தவுடன் எடுத்து விடலாம். இது துவர்ப்பானதால், நெல் மணிப் பிடிப்பதில்லையென்று சிலர் சொல்லுகிறார்கள். பயிருக்குக் கூடாதென்றாலும், நாற்று வளருவதற்கு இதை உபயோகப்படுத்தினல் பாதக படவில்லை.

முளைக்கட்டிய விதையைத் தெளிப்பதுவழக்கம். இதை இரண்டாங்கொம்பில் தெளிப்பதே விசேஷம். மூன்றாங் கொம்பு முளைமுறிந்து போய்விடும். இரண்டாங் கொம்புக் கேற்றபடி விதையை நன்றாய்க் காயவைத்திருக்கவேண்டும். விதை தெளிப்பதற்கு முந்தி, பரம்பு உபயோகப்படுத்தி, உடனே விதையைத் தெளிக்கவேண்டும். தெளித்த விதை சேற்றில் புதைவது முக்கியம். தஞ்சை ஜில்லாவில் சில விடங்களில் முதல்நாள் பரம்படித்து மூன்றாங் கொம்பு விதையைத் தெளிக்கிறார்கள். இது முற்றிலும் பிசகு. ஏனெனில் சேறு உறைந்துவிடும். விதை ஆழத்தில் அழுந்தாது. அதனால் நாற்றுபட்டை கட்டுவது குறையும். ஆழத்தில் விழுமானால், நன்றாய் வேர் ஊன்றி பட்டை கட்டி கிளைவெடிக்கும். சேறு படிந்தால் விதை சேதமாகாது. மேனாடுகளில், முக்கியமாய் அமெரிக்காவில், மண்குழம்பை விதைமேல் விட்டு மூடுவார்கள்.

ஸமமாய் இருக்கும்படி பரம்பு அடித்திருப்பதுடன் நீர் வடிந்துபோக வாய்க்கால்கள் இருப்பது அவசியம். ஜலம்கட்டும் போது, மண் மறையவேண்டுமே ஒழிய, முளையின்பேரில் நிற்கக்கூடாது. ஒருவாரம் வரையில் கட்டிய நீரை காலையில் வாங்கி மாலையில் கட்டிக்கொண்டே

யிருக்கவேண்டும். காலையில் வடிய வைப்பதால் ஸூரிய வெப்பத்தால் நிலம் உறுதிப்படுவதுடன் வேர் நன்றாய் மண்ணில் ஊன்றும். ஒரு வாரத்துக்குமேல் இவ்வாறு வடிய விடக்கூடாது. நாற்று முதிர முதிர ஜலம் சற்று அதிகமாக்கலாம். எந்தக் காரணத்தைக் கொண்டும் இரண்டு அங்குலத்திற்குமேல் ஜலம் நிற்க கூடாது. நின்றால் நாற்று பட்டை கட்டாது.

சில விடங்களில் வரள்விதையாக விதைக்கப்படுகிறது. இதற்கு புழுதி சிலாக்கியம். நன்றாய் மலரும்படி உழுது கல்லுக் கட்டியில்லாமல் நொறுக்கியும், சாம்பல் எவ்வளவு கிடைக்குமோ அவ்வளவும் சேர்த்தும், உரம் ஏற்றுவ தவசியம். விதைத்தவுடன் உழவோ, பரம்போ, அடிப்பது வழக்கம். இவ்விடத்தில் பரம் பென்றது திருநெல்வேலி ஜில்லாவில் அனுஷ்டிக்கிற மரம். இது விதைகளை மூடுவது மன்றி ஈரம் தங்கும்படி மேல்மண்ணை கெட்டிப்படுத்தும். புழுதியில் சேற்று நாற்றைப்போல பட்டை கட்டாது. மேலும், விதையும் அதிகமாக வேண்டும். பொதுவாய் ஜலாதாரத்துக்குத் தகுந்தபடி, புழுதியிலேயோ சேற்றிலேயோ விடவேண்டியதென்பதை நிச்சயிக்கவேண்டும். ஜலம் தாராளமாய் வருமென்று நம்பிக்கையில்லாத இடங்களில் புழுதியில் நாற்று விடுவதை அனுஸரிக்கலாம். புழுதியில் குருவை நாற்றைத் தவிர சம்பா நாற்று விடுவது மேன்மையல்ல, என்றாலும் பாசனக் குறைவு ஏற்படு மிடங்களில் புழுதியை அனுஸரிக்கிறார்கள்.

நாற்றுப்பாவும் விதையளவு விதைக்குத் தக்கவாறு வித்தியாஸப் படுகிறது. மேற்சொன்ன விதமாய் சேறு கறுத்து, செய்நேர்த்தியுடன் இருந்தால், ஒரு ஏக்கர் நாற்றங்காலில் நடுத்தரமான நெல் விதையானால் அதாவது ஒரு ரூபா எடையில் ஸுமார் 600-முதல் 700-வரையில் நெல் இருக்கக்கூடிய சிவப்புச்சம்பா, கொத்து மல்லிச் சம்பா, இவைகள் இரண்டு கலம் (பட்டணம் படி 48) விட வேண்டியது. நெல் பெரியதா யிருக்குமானால், விதையை ஜாஸ்திப் படுத்தி கொள்ளவும். சிறியதாயிருந்தால் குறைத்துக் கொள்ளவும், வேண்டும். ஆகாரத்திற்கு உதவக்கூடிய நெல்லில் கூடியவரையில் எவ்வளவு குறைத்து விதைத்து அதிக மாஸூலை அடையமுடியுமோ அவ்வளவுக்கும் ஒவ்வொரு மிராசுதாரும் கூடியவரையில் பிரயத்தினப்படவேண்டும். நாற்றங்கால் ஜலம், வெப்பம், முதலியவைகளை தகுந்த அளவாகப் பிரயோஜனப்படுத்தி, ஒவ்வொரு விதையும் ஒரு மதர்த்த செடியாயுண்டாகும்படி செய்ய வேண்டியது தேசாபிமானகாரியம். தனித் தனி நாற்றுக்கால் இருப்பதால் பூண்டுகள் இடைகளில் உண்டாகாதபடி முன்னாடி சுத்தம் செய்து விடவேண்டும். ஆனால் சில பூண்டுகளின்விதைகள் நாற்றுப்பரவிய பிறகு முளைக்க ஆரம்பிக்கின்றன. அதனால் நாற்று பட்டை கட்டுவது குறையும். அல்லாமலும் நாற்றைப் பறிக்கும் போதும் நடும்போதும் பூண்டுகள் ஊடே சேர்ந்துவிடும். இவைகள் முளைக்காத விதமாய்ச் செய்வதற்கு பிரயத்தனம் செய்ய வேண்டிய தவசியம். நாற்றுகளின் ஊடே பூண்டுகள் பூக்காததற்கு முன்னம் களைந்தெரிந்து விடவேண்டும். பின்னும் முளைக்குமானால் நாற்றுப்பறித்து பிறகு களைகளை ஜாடாவாய்எடுத்து விடவேண்டும். மேலும் உழுது சிலநாட்கள் வரையில் நடாமல் வைத்திருந்து, பூண்டுகள் முளைக்குந்தோறும் பிடிங்கி எடுத்து விடுவோமானால் அடுத்த பஸலிக்கு அநேகமாய் முளைக்காதென்று நம்பலாம்.

இனி நடுகையைப்பற்றி கவனிப்போம். நடுகையில் புதிய மூன்று விதங்கள் குறிப்பிடத்தக்கன. முதலாவது, ஸாதாரணமாய் எல்லாராலும் அனுஷ்டிக்கப்படுகிற ஒற்றை நாற்று நடுகை. இரண்டாவது, பத்தி நடவென்று சொல்லப்படுவது. மூன்றாவது கெஜ

நடவு. இரண்டாவது, மூன்ருவது, முறைகளை எல்லாராலும் அநுஷ்டிக்க ஸாத்யப்படமாட்டாது என்ருலும் கொஞ்ச நிலத்திலாவது ஒவ்வொருவரும் செய்துபார்க்க வேண்டியதவசியம்.

ஸாதாரணமாய் அனுஷ்டிக்கிற ஒற்றை நாற்று நடுகை ஒவ்வொரு கிராமத்திலும் செய்யக்கூடிய அவ்வளவு சுலபமாயிருந்தும், 100க்கு 70 பேர் வரையில் ஆரம்பமே செய்யவில்லை. மேற்சொன்ன விதமாய் நாற்றுகள் விடப்பட்டு பிடுங்கப்போதுமான வயது வந்தவுடன் பிடுங்கிவிடவேண்டும். நெல்வகையின் வயதுக்குத் தகுந்தவாறு நாற்றில் இருக்கவேண்டிய வயதை நிதானிக்கவேண்டும். $5\frac{1}{2}$ மாதம் விளையக்கூடிய சிவப்புச் சம்பா, கொத்துமல்லிச் சம்பா முதலிய நெல்களை 35, 40, நாளுக்குள் பிடுங்கியும், மூன்று மாதத்தில் விளையக்கூடிய குருவை வகைகளை 20, 25, நாளைக்குள் பிடிங்கியும் நடுவதால் நெல்லில் ஸுமார் நாலில் ஒரு பாகம் வயது நாற்றங்காலில் இருக்கவேண்டும். கலக்கத் தெளிக்கும் நாற்ருனது வேர் ஆழத்தில் இறங்கு மாதலால் இரண்டுதின முந்தியே பிடுங்கவேண்டும்.

நடுகையின் வயலானது நான்குஸாலுக்குக் குறையாமலடிக்கப்பெற்று, மேடு பள்ள மின்றி இருக்கவேண்டியதுடன், ஜலம் ஒருவாரம் வரையில் ஒரு அங்குலத்துக்கு மேலாகக் கூடாது இல்லையானல் "வெள்ளத்தில் நட்டவன், வேசிக்கி அழுதவன்" போல நஷ்டமடைவான்.

தழை எரு என்பது தஞ்சை ஜில்லாவில் கிடைப்பதரிதானதால் கொழுஞ்சி, அவிரி, சணப்பு, தக்கை முதலிய பசுந்தாள் எருவை வயலிலேயே மார்கழிமாதத்தில் ஈரம் இருக்கும்போது பயறு, உளுந்து விதைகளுடன் விதை விதைத்துவிடவேண்டும். மேல்கண்ட விதைகள் விவஸாய டிபார்ட்மெண்டாரால் முக்கிய ஸ்டேஷன்களில் விற்கபடுகின்றன.

நாற்றுகள் கிளை வெடித்திருப்பதை பிரிக்காமல் பூமியின் தன்மைக்குத் தகுந்த விதமாய் தூரத்தை அநுஸரித்து நடுகைபோடவேண்டும். ஸாதாரணமாய் 9 அங்குலத்துக்கு ஒருமுதல் புதைக்கவேண்டியது. இந்த நடவுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 7 நடவாள் வேண்டியதாயிருக்கிறது. நாற்றை கொத்துக்கொத்தாய் நடுவது உத்தமமோ, தனித்தனியாய் நடுவது உத்தமமோ, என்று நான்கு வருஷத்தில் பரீக்ஷைசெய்த அநுபவம் பின்வருமாறு.

ஜாதி, தேசம், சீதோஷ்ணம், எருவின் குணம், உழவு, தகுந்த நிலைமை, நிலவாட்டம், வெப்பம், ஜலம், முதலிய பலவித காரணங்களை அநுஸரித்து நெல் பயிர் கிளைக்கிறது. ஒரு அலகு நட கிளைகளும், இரண்டு அலகுநட 12 கிளைகளும், மூன்றலகுநட 14 கிளைகளும், ஐந்து அலகுநட 16 கிளைகளும், எட்டலகுநட 19 கிளைகளும், பத்து அலகுநட 20 கிளைகளும் ஒவ்வொரு முதலிலும் உண்டாயின. இதனுல் ஒரு அலகு நடப்பட்ட இடத்தில் பதினேரு கதிர்களும், பத்து அலகு நடப்பட்ட யிடத்தில் 20 கதிர்களும் கிடைத்தன. நடவில் அலகுகள் அதிமாகயிருந்தால் கிளைத்துத் தூருகட்டுவது குறைந்துகொண்டே போகிறது. நமது கோரிக்கை கொஞ்ச சிரமத்துக்கு அதிகவிளைவுகிடைக்க வேண்டுமென்பதே. நான் பார்வை யிட்டசில இடங்களில் ஒவ்வொரு முதலில் 20-க்கு மேல்பட்ட அலகுகள் உள்ளதாய் நடப்பட்டிருப்பதைப் பார்த்து குடியானவர்களை ஏன் இப்படி நடவேண்டும் என்றதற்கு "பள்ளவயல் அழுகிவிடும், நண்டு நத்தைகளால் வெட்டப்படும்" என்ருர்கள். விதையைக் குறைத்து விதைப்பதால் உண்டாகும் நாற்ருனது மேற்கண்ட உபாதைக்குள்ளாகமாட்டா என்பது தோன்றுவதில்லை. மேலும், சிலர் ஒற்றை நாற்று நடுகையென்பதை தப்பாய் நினைத்துக்கொண்டு கிளைத்தி

ருக்கும் கிளைகளை ஒவ்வொன்ருய்ப் பிரித்து ஊன்றுகிருர்கள். பிரிப்பதால் சில வேர்கள் அறுந்து விடுகின்றன. கிளைகட்டும் குணமும் போய்விடுகிறது. ஒரு நெல்லில் உண்டாகும் செடியே ஓர் அலகு என்பதை மரக்கக்கூடாது.

மேலும், கீழ்கண்ட பழமொழியால் நடும்பட்டம் விளங்குகிறது. "ஆடிப்பட்டம் தேடி விதை", 'ஆடி விதைப்பு ஆவணி நடவு', "தைப்புழுதி ஆவணிச் சேறு", "ஆவணி விதைப்பு பூஷணிப்பூ'', "புரட்டாசி விதை ஆகாது, அர்ப்பிசி நடவாகாது,' "ஆடி முதல் பத்து ஆவணி நடுபத்து புரட்டாசிக் கடை பத்து," "அர்ப்பிசி விதை அவுலுக்கும் ஆகாது," "கார்த்திகை பிறந்தால் கைநாற்றை யெறி," "தைக்குருவைப் பொய்க்குருவை," பங்குனியில் பறையனும் பயிரிடான்,' இவை தமிழ் நாட்டில் வழங்கிவருவன.

இரண்டாவதாய்ச் சொன்ன பத்தி நடவை சிறிது நிலங்களில் செய்து பார்க்கலாம். ஏக்கர் இரண்டுக்கு ஒரு ஜதை மாடும் ஒரு ஆளும் இருந்தால் இந்த நடவு முழுமையும் செய்துவிடலாம். நூல் பிடித்துக்கொண்டு எங்கும் ஒரே ஒழுங்காய்ப் பனிரெண்டு அங்குலத்திற்கு ஒரு அலகாக நடுகைப் போடவேண்டியது. இதனுல் வேர்கள் அகன்று பரவி, ஒவ்வொரு முதலும் பெருத்து, மதர்த்த செடியாகிறது. களைகள் எடுப்பதற்கும், புங்கம் தழை முதலிய பசுந்தாள் எருவை செடியின் வேர்களில் வைப்பதற்கும் லகுவாயிருக்கும்.

மூன்ருவது கெஜநடவு. கோடையில் நடுகை வயலை அரைகெஜ தூரத்திற்கு ஒவ்வொரு குழியாக கட்டிகளைப் பெயர்த்து சாம்பல் சாணமுதலிய உரங்களை அந்தக் குழியில் வைத்து விடுகிறது. நாற்றுப் பிடுங்கிவைத்துக் கொண்டு நடுகை வயிலில் ஜலம் விடுகிறது. ஜலம் பாய்ந்துகொண்டு போகும்போது ஒவ்வொரு குழியிலும் ஒவ்வொரு நெற்செடியாக ஊன்றிவிடுகிறது. இந்தச் செடி நாற்றங்காலிலேயே மூன்று கிளைகளுள்ளதா யிருக்கவேண்டும். நடுகை முடிந்த ஒரு வாரத்தில் ஜலத்தை வடியவைத்து, அண்டைவெட்டிக் களைகொத்தி புல் முதலிய பூண்டுகளைக் களைந்துவிட வேண்டும். மறு இரண்டுதினம் வயலைக் காயவைத்து நீர் பாய்ச்சவேண்டும். இதனுல் பயிர்கள் ஒரு மாதத்திற்குள்ள கிளைகள் உள்ளனவாய் தூர் அடர்ந்து, எங்கும் பச்சை பீதாம்பரம் பிரித்தாற்போல் கண்ணுக்கு வெகு அழகாக இருக்கும். மேலும், உரமானது வயலுக்கிடாமல் செடிகளுக்கு நேரில் ஊட்டியது போலாகும். இம்முறையையும் அனுஷ்டிக்க 2 ஏக்கருக்கு ஒரு ஆளும் ஒரு ஜதைமாடும் தேவையாயிருக்கும். ஸாதாரணமாய் திருநெல்வேலி ஜில்லா அம்பா ஸமுத்திரம் தாலுகா தாம்பரபரணி பாசனங்களில் இருபோக நிலங்களுக்கு ஒரு ஜதை மாட்டுக்கு இரண்டு ஏக்கர் நிலம் ஸாதாரணமாய் போதுமானதாயிருக்கிறது.

தென்னையைக் கமுகைப்போலவும், கமுகை மூங்கிலைப்போலவும், மூங்கிலை கரும்பைப்போலவும்,பார்க்ககூடிய தஞ்சை ஜில்லாவின் முறை கண்காக்ஷிக்குரித்தானது. மேல்கண்ட பத்தி நடவு, ஜெகநடவு இவைகளை கனவான்களும் ஏழைகளும் சிலபாகமாகவாவது பரீக்ஷை செய்து பார்பார்களாக.

எம். வைத்னுதன்.

---

## THE MAKING OF A NEWSPAPER.

BY

G. TATACHARI, B. A.

### வர்த்தமானப் பத்திரிகை உண்டாகும் விதம்.

பத்திரிகைகளை வரவழைக்கும் அபிமானிகள் ஒவ்வொருநாளும் தபால் வந்தவுடன் பத்திரிகைகளின் மீது சுற்றப்பட்டிருக்கும் துண்டுக் கடிதத்தை அலட்சியமாகக் கிழித் தெறிந்துவிட்டு பத்திரிகையைப் பிரித்துப்

படிப்பது வழக்கம். இப்படிப் படிப்பவர்களில் வெகு சிலர்தான். அப்பத்திரிகையானது அன்று அவரிடம் வந்து சேருவதற்கு முன் அவ்விஷயமாக ஆகவேண்டிய காரியங்கள் இன்னின்னவை யென்று தெரிந்துகொண்டிருப்பார்கள். நூற்றுக்கணக்காகவும், சிற்சில வேளைகளில் ஆயிரக் கணக்காகவும், ஜனங்கள் வேலைசெய்து அப்பத்திரிகையை வெளியிட்டிருப்பார்கள். புத்திமான்கள் பலர்கூடி உழைத்து ஸமாசாரங்களையும் அபிப்பிராயங்களையும் எழுதியிருப்பார்கள். அச்சடிப்பதற்கு வேண்டிய யந்திரங்களையும், மற்ற ஸாதனங்களையும் நிருமிப்பதற்கும், வேலையாளர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கும், அநேகமாயிரம் ரூபா மூலதனம் வைத்திருக்கவேண்டும். படிப்போரின் அபிலாஷையைத் திருப்திசெய்ய, காடுகளில் வளரும் மரங்களெல்லாம் கடுதாசுகளாக ஆக்கப்படுகின்றன. இந்தப் "பிழைக்கும் வழி"ப் பத்திரிகையின் கடுதாசுகூட ஒரு காலத்தில் ஒரு மரத்தின் பகுதியாக இருந்திருக்கலாம்! பத்திரிகாபிமானிகள் செழித்திருக்கும் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் காலையில் காட்டில் வளர்ந்த மரமானது மாலையில் பத்திரிகை யாபீஸில் கடுதாசாக மாறியிருப்பதில் ஆச்சரியமில்லை.

நம்முடைய வாழ்நாளில் நாம் எவ்வளவோ பேரம் செய்திருக்கிறோம். ஆயினும் நாம் தினந்தோறும் பெறும் பத்திரிகையைக் காட்டிலும் லாபகரமான பேரம் வேறொன்றிருக்க மாட்டாது. தந்தி ஸமாசாரம், பத்திரிகாசிரியரின் சம்பளம், யந்திரஸ்தாபனம், கடுதாசுக் கிரயம், அச்சுக்கூலி முதலியவைகளுக்காக வாரமொன்றுக்கு அநேக மாயிரம் ரூபா செலவழிகிற பத்திரிகை யொன்றை நாம் ஒரு அணாவுக்கோ இரண்டணாவுக்கோ பெறுகிறோம். பலர் சேர்ந்து ஒத்து உழைப்பதற்கு இதைக் காட்டிலும் வேறொரு உதாரணமும் சிறந்ததாகாது. தோட்டிக்கும் தொண்டைமானுக்கும் செல்வ விஷயத்தில் வேற்றுமை யுண்டாயினும் பத்திரிகை விஷயத்தில் மட்டும் பேதம் காண்பதில்லை. தோட்டியின் பத்திரிகை தொண்டைமானின் பத்திரிகைக்குத் தோற்பது கிடையாது.

இனி பத்திரிகையின் உள் வியாபாரங்களை கவனிப்போம். பத்திரிகை யாபீஸ்களில் பகல் முழுவதும் வேலை செய்யவேண்டும். மேற்றிசை நாடுகளில் உள்ள ஆபீஸ்களில் இரவும் பகலும் வேலை செய்கிறார்கள். விடியற்காலையில் பத்திரிகை பிரசுரமாக வேண்டுமானால் இராமுழுவதும் வேலை செய்தாகவேண்டும்.

பத்திரிகையின் எடிட்டருடைய பொறுப்பு ஸாமானியமானதன்று. வெகு கவலைக்கிடமானது. கிடைக்கும் ஸமாசாரம் வாஸ்தவமா அல்லவா என்பதை விசாரிக்கப் போதுமான ஸாவகாசம் இராது. அவ்விஷயத்தைப் பற்றி உடனே எழுதவேண்டியிருந்தால் பொறுப்பையெல்லாம் தம் மேலேற்றிக்கொண்டு எடிட்டர் எழுதுவார். உதாரணமாக, ருஷிய கவுண்டு லியோடால்ஸ்டாய் மரணத்தருவாயிலிருக்கும்போதே அவர் இறந்து விட்டனரென்று கேட்டு சரம சுலோகம் நமது நாட்டுப் பத்திரிகைகளில் வெளிவந்தது நமக்கு ஞாபகமிருக்கிறது. எழுதும் விஷயங்கள் சட்ட விரோதமில்லாமலும், பிறருக்கு மனஸ்தாபத்தைக் கொடாமலும், இருக்கும்படி எடிட்டர் கவனம் செலுத்தவேண்டும். ஒவ்வொரு பத்திரிகைக்கும் ஏற்பட்ட கொள்கை மாறாமலிருக்கும்படி பார்ப்பது எடிட்டருடைய பிரதான நோக்கமாகும். பிரஸங்கங்கள் நடக்கும் இடங்களிலும், குற்றவிசாரணை நடக்கும் நியாயஸ்தலங்களிலும், தீ முதலிய விபத்துக்கள் நேரிடுமிடத்திலும், ரயில் வண்டி மோதுண்ட ஸ்தலங்களிலும், ரிபோர்ட்டர்கள் போய் ரூபரூபில் விஷயங்களைக் கேட்டெழுதி யனுப்பு

வார்கள். பெரிய மனிதர்களைக்கண்டு பேசி அவருடைய அபிப்பிராயங்களைக் கேட்டு எழுதுவதில் ரிபோர்ட்டர்கள் வெகு ஜாக்கிரதையாக விருக்கவேண்டும். ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றி அப்பெரிய மனிதர் தாம் சொன்னதற்கு மாருக இருப்பதாகத் தெரிவித்தால், பத்திரிகையின் நாணயத்துக்குக் குறைவேற்படும். வெளியூர்களிலுள்ள நிருபநேயர்கள் ஆங்காங்கு நடக்கும் ஸமாசாரங்களை எழுதியனுப்புவார்கள். இன்னும் சிலர் பொது விஷயங்களைப்பற்றிக் கடிதங்கள் எழுதுவார்கள். வேறு சிலர் துரைத்தனத்திலுள்ள குறைபாடுகளையும் உத்தியோகஸ்தர்களுடைய அநீதங்களையும் கண்டித்து எழுதுவார்கள். இன்னும் தந்திமூலமாக வெளி நாடுகளிலிருந்து ஸமாசாரங்கள் வரும். உள்ளூரிலிருந்து டெலிபோன் மூலமாகவும் ஸங்கதிகள் வரும். இவைகளை யெல்லாம் எடிட்டரும் அவருடைய உதவிக்காக நியமிக்கப்பட்டிருக்கும் ஸப் எடிட்டர்களும் கவனித்து, சுருக்கவேண்டுமானுல் சுருக்கி, தகுந்த தலைப்பெயர்கள் கொடுத்து அச்சுக் கோர்க்குமிடத்திக்கு அனுப்புவார்கள். இவ்வளவெல்லாமிருந்தும் ஒவ்வொரு ஆபீஸுக்கும் வரும் ஸமாசாரங்களை யெல்லாம் அன்றன்றே பத்திரிகையில் போடுவதற்கு இடமில்லாமல் போகின்றது. பத்திரிகைகளில் வெளிவரும்படி அனுப்பப்படும் விளம்பரங்களைக் கவனித்து தகுந்த இடங்களில் அச்சடிக்கும்படி ஏற்பாடுகள் செய்ய பிரத்தியேகமான சிப்பந்திகளுண்டு.

அச்சுக் கோர்ப்பவர்களுடைய காரியம் வெகு சிரம ஸாத்தியமானது. கைதேர்ந்த கம்பாஸிட்டர்கள் நிமிஷம் ஒன்றுக்குப் பத்து வார்த்தைகளுக்குமேல் எழுத்துக் கோர்க்க மாட்டார்கள். யந்திரங்களின் உதவியால் எழுத்துக்கோர்த்தால் நிமிஷம் ஒன்றுக்கு நாற்பது வார்த்தைகள் வரையில் கோர்க்கலாம். அம்மாதிரி இங்கிலாந்தில்தான் விசேஷமாகச்செய்கிருர்கள். நமது நாட்டில் அதற்கு அவ்வளவு அவசியம் இன்னும் உண்டாகவில்லை.

அச்சுக் கோர்த்தானவுடன், கோர்வையை வரிசையாக்கி, பக்கங்கள் போட்டு, யந்திரத்தி லிட்டு, கடுதாசியைக் கொடுத்து அச்சடிப்பார்கள். உடனே நாம் பிரித்துப் படிக்கும் பத்திரிகை வெளிவரும். இங்கிலாந்தில் சில பத்திரிகைகளை அச்சடிக்கும் யந்திரங்கள் மணி ஒன்றுக்கு, பத்திரிகையின் அளவுக்குத் தக்கபடி 48,000 அல்லது 96,000 காப்பிகள் அச்சடித்துத்தள்ளுகின்றன. ராக்ஷஸ யந்திரத்தின் ஒரு பக்கத்தில் கடுதாசுச் சுருளைவைத்து, யந்திரத்தைத் திருகிவிட்டால், மற்ரெரு பக்கத்தில் பூர்த்தியான பத்திரிகை வெளிவருவதைக் கண்டு எவர்தாம் ஆச்சரியமடையமாட்டார்? அங்கு அவ்வளவு அவஸரம் அவசியம். பத்[திரிகை] வெளியாகும் ஸமயத்தில் ஜனங்கள் [கூட்டங்க]ள்திரளாக வெளியில் ஆவலோடுநின்று [கொண்]டிருப்பார்கள். விசேஷ ஸம்பவங்கள் நிக[ழும்] காலத்தில் அவ்வாவல் பன்மடங்கு அதிகமா[கு]ம். போவர்யுத்தம் நடந்தபோதும், சக்ரவர்த்தியவர்கள் நம் நாட்டுக்கு விஜயம் செய்தபோதும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் பத்திரிகைகளை ஆவலோடு படித்தது நமக்குத் தெரியும். நமது நாட்டில் பத்திரிகாபிமானிகள் குறைவாகவிருப்பதால் அவ்வளவு ஜாஸ்தியாகப் பத்திரிகைகள் பிரசுர மாவதில்லை.

பத்திரிகை ரிபோர்ட்டர்களுடைய தொழில் எல்லாரும் விரும்பக் கூடியதன்று. போகுமிடங்களிலெல்லாம் அவர்களை நல்வரவு கூறி உபசரிப்பார்களென்பதற்கில்லை. சிலவிடங்களில் அவர்கள் உள்ளே போவதற்கும் அனுமதி கிடைப்பதில்லை. என்ருலும் அவர்களாலும் ஸப் எடிட்டர்களாலும் தான் ஒரு பத்திரிகை அபிவிருத்தியடையவேண்டும். மேற்றிசை நாடுகளில் இவ்வகையார் பலர் இருக்கிருர்கள்

நமது நாட்டில் அபூர்வமென்று சொல்லவேண்டியதில்லை.

ஞானாபிவிருத்திக்காகப் பத்திரிகைகள் ஏற்பட்டிருப்பது உண்மையாயினும், பத்திரிகைகளின் அதிபர்களும் ரூ. அ. பை. கணக்குப் பார்க்கும் தொழிலாளிகள் என்று நாம் தெரிந்துகொள்ளவேண்டும். ஜனங்களுடைய அபிப்பிராயத்தையும், விருப்பத்தையும் அறிய வேண்டியது எடிட்டருடைய முதற்காரியம். இதை அறியாததுதான் சில பத்திரிகைகள் வீழ்ந்து போனதற்குக் காரணமாம். ஆகவே பத்திரிகைகளுக்கு படிப்பவர்கள்தான் உயிர் நிலை. ஏராளமான பிரசுரமில்லாத பத்திரிகைகள் சீக்கிரத்தில் நசித்துப்போம். இங்கிலாந்தில் பிரசுரமாகும் "டைம்ஸ்", "டெயிலி டெலிகிராப்", "டெயிலி மிரர்" "டெயிலி மெயில்" [illegible]லிய சில பத்திரிகைகளில் தினமொன்[illegible]து பல்லாயிரம் காப்பிகள் செலவாகின்றன. [illegible]ட்டில் அப்படிப்பட்ட நற்காலம் வருவ[illegible]கு அநேக வருஷங்கள் செல்லவேண்டும். [illegible]சென்றாலும், வருவதுகூட ஸந்தேகந்தான். தினஸரிப் பத்திரிகைகளில் ஐயாயிரம் காப்பிகளுக்குமேல் அச்சடிக்கும் பத்திரிகை நமது நாட்டில் அபூர்வமென்றே கூறிவிடலாம். தினமொன்றுககு 7,50,000 பிரதிகளுக்குமேல் விற்பனையாகும் இங்கிலாந்து "டெயிலிமிரர்" பத்திரிகையோடு நமது நாட்டில் பத்திரிகைகளை ஒப்பிடுவது சூரியனையும் மின்மினிப் பூச்சையும் ஒப்பிடுவது போலாகும்.

லண்டனில் பிரதிதினமும் காலையில் பிரசுரமாகும் பத்திரிகைகளின் எடிட்டர்களுக்கு வருஷ மொன்றுக்கு 1000 பவுன் முதல் 2500 பவுன் வரையில் சம்பளமுண்டு. மாலைப் பத்திரிகைகளின் எடிட்டர்களுக்கு 600 பவுன் முதல் 1000 பவுன் வரையில் சம்பளம். "டைம்ஸ்" முதலிய சில பத்திரிகைகள் ஒரு வியாஸத்துக்கு இரண்டு பவுன் முதல் ஐந்து பவுன் வரையில் ஸம்மானம் செய்கின்றன. இவ்விஷயத்திலும் நம் நாடு தாழ்ந்தேயிருக்கிறது. வியாஸம் எழுதும் ஸ்ரீமான்களுக்கு நம் நாட்டுப் பத்திரிகைகளும் ஸம்மானம் செய்கின்றன வென்றாலும், அது இங்கிலாந்தில் ஏற்பட்டுள்ள உயர்ந்த தொகையை ஒருபோதும் எட்டிப்பிடிக்காது.

இனி, தற்காலப் பத்திரிகைகளில் பிரசுரமாகும் விஷயங்களைப்பற்றி இரண்டொரு வார்த்தை கூறி இவ்வியாஸத்தைப் பூர்த்தி செய்வோம். பத்திரிகைகளில் ஸமாசாரங்களைக் காட்டிலும் விளம்பரங்களே அதிகம். இதன் காரணம் இதுதான். விளம்பரக்காரர்கள் சுயநலத்தைக் கருதிப் பத்திரிகைகளின் மூலமாகத் தங்கள் தங்களுடைய தொழிலையோ ஸாமர்த்தியத்தையோ வெளிப்படுத்திக் கொள்ளவேண்டியிருப்பதால், பணம் அதிகமாகக் கொடுக்கிறார்கள். பதிவாக ஏற்பட்ட உலக வர்த்தமானங்களைத் தவிர, எடிட்டர்கள் எழுதும் பிரதான வியாஸங்கள், நிருபநேயர்கள் எழுதும் கடிதங்கள், கோர்ட்டு நடவடிக்கைகள், அயல் பத்திரிகைகளிலிருந்து பெயர்த்தெழுதும் விஷயங்கள், கல்வி, கைத்தொழில், முதலியவைகளைப்பற்றி மற்றறிந்த ஸ்ரீமான்கள் எழுதும் [illegible]ஸங்கள், பிரஸங்கங்கள், முதலியவைகள் வெளிவரும். அன்றியும், காலநிலை, சீதோஷ்ண ஸ்திதி, மார்க்கெட் நிலவரம், நாணயச்சாலை நடவடிக்கைகள், கப்பல் வரத்துப் போக்கு, சூரிய சந்திர உதயாஸ்தமனம், முதலிய பல சில்லறை விஷயங்களும் தினந்தோறும் பிரசுரமாகின்றன. விளையாட்டுகளில் ஆசையுள்ளவர்கள், உத்தியோகத்தை விரும்புவோர்கள், வட்டிக்குக் கடன் வாங்குவோர் கொடுப்போர், முதலியோர்களுக்கும் பத்திரிகைகளுக்கு நாம் செய்யும் பிரதியுபகாரம் என்னவெனில், அவைகளை ஆதரிப்பதேயாம். பத்திரிகைகள் மலிவது

நாட்டின் நாகரீகத்தின் அபிவிருத்திக்கு ஓர் அறிகுறியாம்.

ஜி. தாத்தாச்சாரி.

---

## ADVICE TO LADIES.

BY

C. V. TIRUMURTHI AIYAR.

### பெண்கள் அணிகலம்.

1. புருஷனே தெய்வம், புருஷனே பூஷணம், புருஷனே ஆஸ்தி, அவனே ஸகலமும் என்பதாக நினைத்து அவனையே கொண்டாடு.

2. உன் புருஷனுக்கு உன்பேரில் கோபமுண்டாகும்படி நடந்துகொள்ளாதே.

3. உன் புருஷனுடைய மனோபாவத்தைத் தெரிந்து அதற்குத்தகுந்த மாதிரியாக நடந்துகொள்.

4. உன் புருஷனுடைய நடவடிக்கைகள் மற்றவர்களைவிட நன்றாய். உனக்குத் தெரியுமாதலால் எந்த விதமாய் நடந்தால் அவனது கோபம் மாறுமோ அம்மாதிரி நடந்துகொள்.

5. புருஷன் களைத்துவரும்போது அவனை உன்னுடைய சிரித்த முகத்தினால் உபசரித்து அவனது சிரமம் நீங்கிய பின்பு உனக்குக் கேட்கவேண்டியதைக்கேள். அப்படிக்கில்லாவிடில் அவனுக்கு உன்பேரில் கோபமும் ஆகுரையையும் ஏற்படும்.

6. புருஷன் அவனது சிநேகிதர்களிடத்திலோ அல்லது பந்துக்களிடத்திலோ பேசிக்கொண்டிருக்கும்போது நீ பின்புறமாக நின்றுகொண்டு அவர்கள் பேசுவதைக்கேளாதே, அல்லது, நீயோ அல்லது குழந்தைகளைக் கொண்டோ, அவனைக் கூப்பிடாதே. அச்சமயத்தில் குழந்தைகளை அழுகவிடாதே, அவனிடத்திற்கு அனுப்பாதே, ஏனென்றால் குழந்தையின் சேஷ்டையினாலோ அல்லது குழந்தை அப்பா, அப்பா, என்று கூப்பிடுவதினாலோ, அவர்கள் சம்பாஷணைக்கு இடைஞ்சல் ஏற்படும். அப்போது குழந்தையின்பேரிலும் உன்பேரிலும் உன் புருஷனுக்கு கோபமுண்டாகக்கூடும்.

7. புருஷன்ஏவும் பணிவிடைகளை சிரத்தையோடும் மனப்பூர்வமாயும் செய். அவனுக்குச் செய்ய நீ கடமைப்பட்டிருக்கிறாய். அவனே உனக்குத் தெய்வம்.

8. புருஷன்வந்து உன்னைக்காணாமல் தேடும்படியாக நீ கதவைப்பூட்டிக்கொண்டு பக்கத்து வீட்டுக்குப்போகாதே.

9. புருஷனிடத்தில் அவனது ஸகோதிரர் ஸகோதரி இவர்கள்பேரில் பொய் வார்த்தைகளைச்சொல்லி அவர்கள்பேரில் கசப்புண்டாகும்படி செய்துவைக்காதே.

10. குழந்தைகளை அடிப்பது, பாத்திரங்களை சத்தமாகும்படி வைப்பது, கீழேபோடுவது, கடிந்துபேசுவது, இவைகளினால், நீ கோபமாய் இருக்கிறாயென்று உன் புருஷனுக்குக் காட்டிக்கொடுக்காதே.

11. உன் புருஷன் ஏதாவது காரியம் சொன்னால் அதைச் செய்வதற்கு முன்னாடியே எதற்காக, யார், ஏன், என்பதாகிய கேள்விகளைக் கேட்காதே.

12. உன் புருஷன் உன்னைச் செய்யக்கூடாதென்று சொல்லும் காரியங்களை மனதில் வைத்திருந்து அதைத் திருப்பவும் நீ செய்யாமல் பார்த்துக்கொள்.

13. புருஷன் முன்னிலையில் யாரிடத்திலும் உரக்கப் பேசாதே.

14. புருஷனுக்குத் தெரியாமல் நீ வியாபாரம் செய்யாதே.

இவைகளையும் இன்னும் இவைபோன்றவைகளையும் கவனித்து நீ நடப்பையேல் உன் புருஷன் நட்புக்குப் பாத்திரமாகி, ஸகலராலும் கொண்டாடப்பட்டு, ஸுகத்துடன் வாழ் நாளைக் கழிப்பாய்.

ஸி. வி. திருமூர்த்தி ஐயர்.

## STORY TELLING AND EDUCATION.

BY
S. G. S. MANYAM, M.A. L.T.

### கதை சோல்லுதலும், படிப்பித்தலும்.

குழந்தைகளுக்கு கதை கேட்பதில் மிகப் பிரியம். யாராகிலும் கதைசொல்லுவார்களானல் அவர்களிடத்தில் மிகுந்த அன்பு பாராட்டுவார்கள். மேலும் எப்பேர்ப்பட்ட பிடிவாதமுள்ள குழந்தைகளும் கதை சொல்லுபவர்களிடத்தில் அடங்கி வணக்கமாயிருப்பார்கள். சிறு குழந்தைகளுக்கெல்லாம் பாட்டிமார்களிடத்தில் பிரியம் ஜாஸ்தியாயிருப்பதற்கு இதையும் ஒரு காரணமாகச் சொல்லலாம். அவர்களுக்கு எவ்வளவு கதைகள் சொன்னுலும் மனம் சலிப்பதேயில்லை. ஓயாமல் கேட்டுக்கொண்டேயிருப்பார்கள். அநேகமாய் எல்லா வீடுகளிலும் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களை கதை சொல்லச் சொல்வது வழக்கம். கதை சொல்லத் தெரியாதவர் அநேகர். கதை சொல்லத் தெரிந்தாலும் அதை குழந்தைகளுடைய க்ரஹிக்கும் சக்திக்குத் தகுந்தபடி சொல்லக் கூடியவர் சிலரே. எவ்வளவு நாவல்களும் சரித்திரங்களும் படித்திருந்துதான் என்ன? தங்கள் குழந்தைகள் கதை சொல்லும்படி கேட்டால் எனக்குக் கதை தெரியாதென்று எவ்வளவோ பேர்கள் சொல்லுகிறுர்கள்.

இப்போது ப்ரைமெரி பாடசாலைகளில் 'கிண்டர்கார்டன்' மூலமாய் குழந்தைகளுக்கு உபாத்தியாயர் கற்பித்து வருகிறுர்கள். ஸ்கூல்களில் குறிப்பிட்ட நேரங்களில் கதை சொல்லுவதற்கு என்று 'டைம்டேபிளில்' எழுதியிருப்பதை எல்லோரும் பார்க்கலாம். இந்த கிண்டர் கார்டன் என்பதை முதல் முதல் கண்டுபிடித்த மாஹான் 'ப்ரோபல்' என்பவர். அவர்தான் முதல் முதல் கதை சொல்வதையும் ஒரு பாடமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னுர். குழந்தைகளுக்கு கதை சொல்லும் விஷயத்தில் சில முக்கியமான அம்சங்களை கவனிக்கவேண்டும்.

கதை சொல்லுவதின் முக்கியக் கருத்து என்னவென்றுல், குழந்தைகளுக்கு உத்ஸாகத்தை உண்டுபண்ண வேண்டுமென்பதேயன்றி, அவர்களுக்கு கதாரூபமாய் கற்பிக்க வேண்டுமென்பதல்ல. 'கதையானது குழந்தைகள் மனதிற்கு ஒருவிதமான அமிர்தபானம் போல்' என்று ப்ரோபல் சொல்லியிருக்கிறுர். கதை கேட்பதனுல் அவர்களுடைய மனமானது அதிலேயே மூழ்கிக்கொண்டு அவர்களுக்கு ஒருவிதமான குதூகலத்தையும், புதுமையையும் உண்டாக்குகிறது. இவை எதனுல் உண்டாகின்றனவென்றுல், இவர்களுக்கு அதுவரையிலும் தெரியாத ஸமாசாரங்களையும்,விஷயங்களையும் கேட்பதனுல் அவைகளைப் பற்றி மேல் மேலும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசை ஏற்படுவதினுல் தான். ஆகையால்தான் மற்ற பாடங்களைக் கற்பிக்கும் மாதிரியாக கதை சொல்லுவதையும் எண்ணக்கூடாது. அப்படிச்செய்தால் கதையினுடைய ரஸம் குறைந்துவிடும்.

குழந்தைகளுக்குச் சொல்லும் கதையானது முதல் முதலில் அவர்களைப்போலொத்தவர்கள் செயலாகவும், அவர்களுடைய புத்திக்கு எட்டும்படியாகவு மிருக்கவேண்டும். ஸொந்த அனுபவத்தை பொட்டிய ஸமாசாரங்களையும், விஷயங்களையும்பற்றியகதை சொல்லிய பிற்பாடு, பிறருடைய அனுபவ விஷயங்களைப் பற்றிய கதைகளைச் சொல்லவேண்டும். இதனுல் குழந்தைகளுடைய மனேபாவம் தானகவே விஸ்தாரமடைகிறது. ஆனுலும் தங்களுடைய ஸொந்த அனுபவத்தைக் கொண்டே பிறர் சொல்லும் கதையைத் தெரிந்துகொள்ளும்படியான கதைகளாகவிருக்க வேண்டும்.

ஒரு குழந்தை ஒரு கதையைக் கேழ்க்கும் போது அந்தக் கதையில் முக்கியமானவன் தன்னைப்போலவே இருக்கிறுன் என்று நினைப்பது ஸகஜமான வழக்கம். இப்படி நினைப்பது யோஜித்துச்செய்வதல்ல. தன்னை யறியாமலே வந்துவிடுகிறது. கதாநாயகன் செய்யும் செயல்களை யெல்லாம் தானும் செய்து கொள்வதாக குழந்தை பாவித்துக்கொள்ளுகிறது. அவனுக்குள்ள குணுகுணங்களெல்லாம் தன்னிடத்திலு மிருப்பதாகவே எண்ணும். கதையைக் கேட்பதனுல் அதுவரையிலும் தெரியாத சில விஷங்கள் தெரியவருகின்றன. ஸாத்தியமென்று எண்ணுத காரியங்கள் ஸாத்தியமாகும் மென்று புலப்படும். ஆகையால்தான் குழந்தைகளுக்குச் சொல்லும் கதை நல்ல விஷயங்களாகவும்எல்லாரும் சிலாகிக்கத்தக்கனவாகவுமிருக்கவேண்டும். துஷ்டசேஷ்டைகளும், மனஸுக்கு அரோசிகமுமான ஸமாசாரங்களுள்ள கதைகளைச் சொன்னுல் குழந்தைகள் மனதில் அவைகள் பதிந்துவிடும். பேய், காட்டேரி, பொம்மைக்காத்தா முதலிய கதைகளை ஒருபோதும் சொல்லக்கூடாது. நீதி விஷயமான ஸமாசாரங்கள் கதையில் இருக்கலாம். ஆனுல் அந்த விஷயங்களுக்காகத்தான் கதை சொல்லப்படுகிற தென்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படக்கூடாது.

மேலும், கதை சொல்லுவதின் ப்ரயோஜனங்களில் முக்கியமான அம்சம் ஒன்று கவனிக்கத்தக்கது. அதாவது, உபாத்தியாயருக்கும், மாணுக்கர்களுக்கும் ஒருவிதமான ஒற்றுணர்ச்சி உண்டாகிறது. இந்த மாதிரியான ஒற்றுணர்ச்சி ஏற்படுவது பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் தன்னுடைய அதிகாரத்தை நிர்வாகஞ் செய்வதில் ஒரு பெரிய உதவியாகிறது. நல்ல கதை சொல்லக்கூடிய உபாத்தியாயரிடத்தில் ஒருவிதமான அபிமான முண்டாவதோடு, அவர் சொல்லுகிற பிரகாரம் குழந்தைகள் நடப்பார்கள் என்பதற்கு ஸந்தேகமில்லை.

ஆகையால், கதை சொல்லுவதையும் ஒரு வித்தையாக பாவிக்க வேண்டியிருக்கிறது. சிறு குழந்தைகளுக்கு, கதையை வாசிப்பது நல்லதா, அல்லது வாயால் சொல்லுவது நல்லதா, என்று யோஜிக்குமிடத்து, வாயால் சொல்லுவதே உத்தமமானது என்று ஏற்படும். கதையை வாசிப்பது ராமாயண பாராயணத்துக்கு ஒப்பாகச் சொல்லலாம். கதையைச் சொல்லுவது ராமாயண அர்த்தத்தைச் சொல்வதுபோலாகும். ஒருவர் வாயால் சொல்லுவதினுல் அவருடைய திறமை நன்ருய் வெளிப்படுகிறது.

கூடுமானவரையில் கதை சொல்லும்போதெல்லாம் உபாத்தியாயர் பையன்களுக் கருகில் உட்காரவேண்டும். அப்படிச் செய்வதால் பையன்களுக்கு அவரிடத்தில் ஒருவிதமான ஸ்நேகத்துவமும் அந்தரங்க விசுவாஸமும் ஏற்படுகிறது.

பையன்களோடு பையன் களாய் உட்கார்ந்து கதை சொல்லுவதால் உபாத்தியாயருக்கும், மாணுக்கர்களுக்கும் உள்ள வித்தியாஸத்தை அந்த ஸமயத்தில் மறந்து விடுகிறுர்கள்.

கதை சொல்லும் ஸமயங்களில் ஒருவிதமான கேள்வியையும் கேட்கக்கூடாது. கற்பித்தலுங்கூடாது. அப்படிச் செய்வதால் கதையின் தொடர்ச்சி போவதன்றி, கதையின் ரஸமும் மாறிப்போய்விடும். நன்ருய்த் தெரியாத பொருள் ஒன்றைச் சொல்லவேண்டியிருந்தால் கதைக்கு முன்னுலேயே அதைப் பற்றி சொல்லிவிட வேண்டும். ஏதேனும் படம் அல்லது பொம்மை யிருந்தால், அதைப் பற்றி கதை சொல்லுவதற்கு முன்னுலேயே பேசுவதும் நல்லது. பாதிக்கதையில், குழந்களே! உங்களுக்கு இது தெரியுமா, இதை பார்த்திருக்கிறீர்களா, என்ற இவை மாதிரி

யான விஷயங்களை ஒருபோதும் கேட்கக் கூடாது.

ஏதேனும் ஒன்றை திருஷ்டாந்தப் படுத்தும் போது விவேகத்தோடு செய்யவேண்டும். சிறு குழந்தைகளுக்குச் சொல்லும் கதையானது அவர்களுடைய பஞ்சேந்திரிய உணர்ச்சியால் க்ரஹிக்கக் கூடியதாயிருக்கவேண்டும். ஆனால் கொஞ்சம் வயஸானவர்களுக்குச் சொல்லும் போது அவர்கள் அவர்களுடைய மனஸிலே யே கற்பனை செய்து கொள்ளும்படியாயிருக்க வேண்டும். கறுப்புப் பலகையில் திருஷ்டாந்தப் படுத்துவதற்காக விகாரமான ரூபங்களை எழுதுவதைக் காட்டிலும், இப்படி இப்படி யிருக்குமென்று சொல்லி, குழந்தைகள் மனஸில் கற்பனை செய்துகொள்ளும்படி செய்வது நல்லது. ஆனாலும், பெரிய குழந்தைகளுக்கு கதை சொல்லும்போது படங்களே உபயோகிக்கக்கூடாது என்பதல்ல. சில ஸமயங்களில் பழையகால விஷயங்களைப்பற்றி பேசும் போதும் அயல்நாட்டு விஷயங்களைப்பற்றிச் சொல்லும்போதும், பிரதிமைகள், பொம்மைகள், படங்கள் முதலானவைகள் ரொம்ப உபயோகம். மொத்தத்தில் படங்களை கண்டபடி உபயோகிக்கக் கூடாது என்பதே.

கதை சொல்லும் தொனியையும் கவனிக்க வேணும். தொனியை மாற்றுதலும், சில ஸமயங்களில் மெலிந்த குரலோடு சொல்லுதலும், வேகமாய்ச் சொல்லுதலும், வேகத்தைக் குறைத்துச் சொல்லுதலும், ஆகிய இவைகளை யெல்லாம் ஸமயோஜிதமாய்ச் செய்யவேண்டும். இப்படிக்கெல்லாம் செய்கிறபோது குழந்தைகள் கவனமும் மாதிரியும் என்னவிதமாய் இருக்கின்றன வென்றும், அறிந்து கொள்ளவேண்டும். சில நேரங்களில் கொஞ்சம் நடித்தலும்நல்லது, அபிநயஞ் செய்வதினால் குழந்தைகள் கதையை ஸந்தோஷமாய் கவனிப்பார்கள். ஆனால் ரொம்பவும் நடிக்கக்கூடாது. ரொம்பவும் நடித்தால் பையன்கள் நடித்தலையே பெரிதாய் எண்ணுவார்கள்.

எஸ். ஜி. எஸ். மணியம்.

---

## BACTERIA.

BY

P. K. NARAYANASAMI.

### பாக்டீரியா.

உலகில் ஸகல வியாதிகளுக்கும் ஹேதுவாயிருக்கும் பாக்டீரியா என்னும் ஜீவராசிகள் நம்முடைய ஸௌக்யத்திற்கும் மூலாதாரமாக விருக்கின்றன வென்பது நம்பக்கூடாததாய்த் தோன்றினாலும் அது உண்மையென்று ஆங்கில வைத்திய நிபுணர்கள் எல்லோரும் அறிவார்கள். உயிருடனிருக்கும் பிராணிகளை இந்த பாக்டீரியாக்கள் வியாதிகளுக்குள்ளாக்குகின்றனவென்பது மட்டும் ஸகலருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் அவைகள் நமக்கு எவ்வாறு நன்மை செய்கின்றனவென்று அனேகர் அறியார்களாகையால் அதை நாம் சற்று இங்கே விவரிப்போம்

அழுகிப்போன பாதார்த்தங்களையும், சவங்களையும், நாம் நிலத்தில் புதைத்தவுடன் இந்த ஜீவராசிகள் அவைகளை எதிர்த்து, அவைகளிலிருக்கும் ஸாராம்சங்களை பூமியில் சேர்ப்பிக்கின்றன. ஒரு மரம் பூமியில் விழுந்து நான்கு அல்லது ஐந்து மாதங்கள் வரையிலும் ஒரு மாறுதலும் அடைவதாகக் காணப்படுவதில்லை. கொஞ்சம் கொஞ்சமாக அம்மரம் காளானால் அரிக்கப்பட்டு மிருதுவாகவாகி, பிறகு மரத்தைத் துளைக்கும் புழுக்களால் பொடியாக்கப்பட்டு, கடைசியாக பாக்டீரியாவின் உதவியால் நிலத்துடன் சேர்ந்துவிடுகிறது. இதேவிதமான மாறுதல்கள் தான் சவங்களிலும் ஏற்படுகின்றன. ஆனால் இதில் ஸம்பந்தப்படும் ஜீவராசிகள் பாக்டீரியா மாத்திரமே இந்தஜீவராசிகள் இல்லாவிட்டால் உல

கம் என்ன பாடுபடும் என்று நினைக்கிறீர்கள்? சவங்கள் சவங்களாகவே யிருக்கும். பட்டுப்போன மரங்கள் பட்டுப்போன மரங்களாகவே கிடக்கும். புதிதாக புல் பூண்டு மரங்கள் முளைக்க இடமிராது. மரங்களும், செடிகளும் வளராவிட்டால் பிராணிகள் ஜீவிப்பது அஸாத்திய மென்று சொல்லவும் வேண்டுமோ?

செத்த பிராணிகளும், அழுகிய பதார்த்தங்களும் பாக்டீரியாவின் உதவியால் நிலத்துடன் சேர்ந்து விடுகின்றன வென்று முந்தியே சொன்னோமல்லவா? பட்டுப்போன மரங்களையும் சவங்களையும் பாக்டீரியாக்கள் வெவ்வேறு மூலப்பொருள்களாகப் பிரித்து, புல், பூண்டு, மரம், செடிகளுக்கு வேண்டிய மூலப்பொருள்களை மட்டும் நிலத்திற்கு அளிக்கின்றன. மரஞ்செடிகள் நிலத்திலிருந்துசில மூலப்பொருள்களை உட்கொள்ளுவதுடன், காற்றிலிருந்தும் சில வாயுக்களை க்ரஹிக்கின்றன. நிலத்திலிருந்து க்ரஹிக்கப்படும் வாயுக்களில் முக்கியமானவை நைட்ரொஜன் என்னும் வெடியுப்பு வாயுவும், அம்மோனியா என்னும் நவச்சார வாயுவுமேயாம். இவ்வாயுக்கள் நாம் உட்கொள்ளும் காய்கறி இவைகள் மூலமாய் நம்முடைய தேகத்தில் சேருகின்றன. பிறகு அவைகள் ஜீரணமாகும்போது நம்முடைய தேகத்திற்குள்ளேயே பிரிக்கப்பட்டு ஒருபாகம் மூத்திரமூலமாகவும் மற்றொருபாகம் நாம் செத்து அழுகிய பிறகும் வெளி வருகின்றன. மூத்திரத்தையும், சவங்களையும் பாக்டீரியா மூலப்பொருள்களாகப் பிரித்து, புல் பூண்டு செடிகளுக்கு வேண்டியவைகளை அளிக்கின்றன. இவ்வாறே பிராணிகள் செத்தபிறகு பயிர்களுக்கு உணவாக ஆகின்றன. பிராணிகளோ பயிர்களையும், காய்கனிகளையும் தின்று ஜீவிக்கின்றன. ஆகவே இவ்வுலகில் பிராணிகளின்றி பயிர்களும், பயிர்களின்றி பிராணிகளும் இருக்கமுடியாதென்பது நன்றாய் விளங்குகிறது.

பாக்டீரியா நமக்குச்செய்யும் நன்மைகளில் தண்ணீரை சுத்திசெய்வது முக்கியமானது. எப்படி யென்றால் தண்ணீர் பூமிக்குள் செல்லும்போது பூமியின், மேற்படைகளில் உள்ள பாக்டீரியாக்கள் தண்ணீரிலுள்ள அசுத்தத்தை க்ரகித்து சுத்தமாக்கி விடுகின்றன. இதுகாரணம் பற்றியே ஆழமுள்ள கிணறுகளின் தண்ணீர் ஆழமற்ற கிணற்றுத் தண்ணீரைவிட சுத்தமாகயிருக்கிறது. பாக்டீரியாவின் ஸூக்ஷ்மத்தை அறிந்த நமது இஞ்சினீயர்கள் அசுத்த ஜலத்தை சலங்கை மணலின் வழியாய் வடிகட்டி பானத்திற்குரிய ஜலமாக்கிவிடுகிறார்கள். தவிர நிலத்தின் மேற்படையிலிருக்கும் பாக்டீரியாக்கள், பிராணவாயுவின் உதவியினால்தான் நைட்ரொஜனை, பயிர்களுக்குவேண்டிய வெடியுப்பாய் மாற்றுகின்றன. இது காரணத்தினால்தான் நிலத்தை நன்றாயும், ஆழமாயும் இரண்டு அல்லது மூன்றுதடவை உழவேண்டுமென்கிறது. பயிர் வர்க்கங்களில் இருவகையுண்டு. நிலத்திற்கு நைட்ரொஜனைச்சேர்ப்பிப்பது ஒருவகை. நிலத்திலிருந்து நைட்ரொஜனை எடுத்து விடுவன மற்றொருவகை. பட்டாணிச்செடி, முன் சொன்னதிற்கும், கோதுமை இரண்டாவது கூறியதற்கும் உதாரணமாம். ஆகையினால் இவ்விரண்டு வகைப்பயிர்கள் நிலத்தில் மாறி மாறிப் பயிர் செய்துவந்தால் நிலத்தின் வீரம் குறையாமலேஇருக்கும்.

பி. கே. நாராயணசாமி.

## INDUSTRIAL IMPROVEMENT.

BY

S. RANGASAMI AIYAR.

### கைத்தொழி லபிவிர்த்தி.

தற்காலத்துக் கேற்றபடி சிற்சில கைத்தொழிலே விர்த்தி செய்வது எப்படி என்பதைப்

பற்றிப் பேசுமுன் முன்காலத்திருந்த கைத்தொழிலைப் பற்றிச் சில சங்கதிகள் கூறித் திரும்புவோம்.

இந்தியாவிலே ஆதிகாலந்தொட்டு விவஸாயமே நமது தொழிலாக இருந்து வருகிறது. கைத்தொழில் அவ்வளவாக இல்லையென்றே சொல்லலாம். ஏனெனில் இதற்கு வேண்டிய ஸாதனங்கள் ஸரிவர ஏற்பட்டிராமையே காரணமாகும். அப்படிச் சில ஸாதனங்களிருந்திருப்பினும் ஒரு ஜில்லாவினின்று மற்றொரு ஜில்லாவுக்கும், ஒரு மாஹாணத்தினின்று மற்றொரு மாஹாணத்துக்கும் போக்கு வரவுக்குரிய அபாயமற்ற நல்ல பாதைகள் இருக்கவில்லை. ஆகையால் அப்போதிருந்த சில கைத்தொழில்களும் ஒவ்வோர் மூலையில் இரண்டொரு ஜில்லாக்களுக் குள்ளாகவே அடைபட்டுக்கிடந்தன. அதனால் அவைகள் எங்கும் பரவி நன்மை பயக்காமல்போயின. மேலும் அப்போது இன்ன ஊரில் இன்னஸாமான் கிடைக்குமெனத் தெரிவதும் அஸாத்தியமாயிருந்தது.

ஆனால் இப்பொழுதுதோ அவ்வாறான கஷ்டங்கள் நிவர்த்தியா யிருப்பதால் நாம் கைத்தொழிலாலுங்கூட க்ஷேமமடைய ஏதுவிருக்கிறது. ஆயினும் சிற்சில தடைகள் உண்டு. அவையாவன :—

நம் தேசத்தில் பல ஐசுவரியவான்களிருந்தும் அவர்களில் பலர் பொன், வெள்ளி முதலிய உலோகங்கள் மாத்திரமே செல்வமென்றும், பணமென்றுப், திரவியமென்றும், மற்றவை யனைத்தும் செல்வமல்ல வென்றும், தப்பாகக் கருதியுளர். பொன் வெள்ளிச் சுரங்கங்கள் இல்லாத தேசத்துக்கு ஐசுவரியம் உண்டாகும் வழி இல்லையென்பது பிசகு. ஜன ஸமூகங்களில் அவரவர் தமக்கு அவசியமான பொருளைப் பெறுவதற்கு ஈடாகக் கொடுக்கத் தக்க பொருளையுடையராயின், அப்படி ஈடாகச் செல்லும் பொறுப்புடையது எதுவோ அதுவே செல்வம். மேலும், உலோகத்தால் செய்த நாணயங்கள் மற்றப் பொருள்களைப் போலவே பண்டமாற்றலுக்கு ஏற்றவிலை பொருள்களாய் உபயோகமாகத் தக்கனவேயன்றி மற்றொன்றுமல்ல. இன்னும், ஒரு நினைவு அவர்கள் மனதில் குடிகொண்டிருக்கிறது. அது நாம் பாடுபட்டுத் தேடிப் புதைத்த பணத்தை யெடுத்து கைத்தொழிலில் செலவழித்தால் மறுபடியும் அப்பணம் திரும்பி லாபத்துடன் வருமோ நஷ்டத்தை யுண்டாக்குமோ? ஆகையால் நாம் உள்ளதைக் கொண்டு திருப்தியாயிருக்கலாமென்பது வாஸ்தவமே ஆயினும், லக்ஷ்மி என்னும் தேவதை வியாபாரத்தில் குடிகொண்டிருப்பது யாவருக்குந் தெரிந்த விஷயம். அப்படியும் ஸந்தேகமுள்ள மனதுடையவர்கள் தனித்தனியாகச் செய்யாவிட்டாலும் தலைக்குக் கொஞ்சம் போட்டு, அதாவது பங்குகளாகப் பிரித்து ஒரு கைத்தொழில் ஆரம்பித்து சிலகாலஞ் சென்றபின் அதன் உபயோகத்தைப் பார்க்கலாகும். இதில் அப்படியும் நஷ்டம் முதலில் நேரிடினும் அவ்வளவாக இராது. எந்தத் தொழில் ஆரம்பிக்கலாமென்பதைப் பற்றிக் கூறுவோம்.

தற்காலத்தில் நமது தேசத்தில் முக்கியமாக எத்தொழிலை ஆரம்பித்தால் அதிக லாபம் கிடைக்குமென்று ஆராய்ந்து அறிந்து கொள்ளவேண்டும். பிறகு அதை எந்த பாகத்தில் அதாவது ஜில்லாவில் ஆரம்பித்தால் அத்தொழிலுக்கு வேண்டிய கருவிகளும் ஸாமான்களும் இலகுவாயும் விலை ஸரஸமாயும் கிடைக்கக்கூடும் என்பதைப் பார்க்கவேண்டும்.

ஆனால் ஒரு தொழில் ஆரம்பிக்கு முன் அது ஸரிவர நடத்த அதில் தேர்ந்த இரண்டொருவர் இல்லாமல் முடியாது. ஆகையால் நாம் எந்தக் கைத்தொழிலை நடத்த உத்தே

சித்திருக்கிறோமோ அந்தத் தொழிற் கல்வி பயின்று வர, சுறுசுறுப்பும் புத்திசாலியுமான சிலரை எங்கே அவர்கள் அதைக் கற்றுக் கொண்டுவர முடியுமோ, அங்கே அனுப்பி, அவர்களுக்குச் சிலகாலம் உதவிசெய்து வர வேண்டும். இவர்கள் மறுபடியும் தங்களூருக்குத் திரும்பிவந்து தொழில் ஆரம்பிக்க எளிதாகும்.

தற்போது நமது தென்னிந்தியாவிலே நிலக்கடலை ஸாகுபடி அதிகமா யிருக்கிறது. ஆயினும் அது பெரும்பான்மையாய் ஏற்றுமதி செய்யப்பட்டு பிறதேசங்களுக்குப் போய் ஸோப் முதலிய பொருள்களாய்த் திரும்பி நமக்கே பத்துமடங்கு அதிக விலைக்கு அனுப்பப் படுகிறது. நாம் கற்றுக்கொண்டு இவைகளைச் செய்தால் இத்தனை காசும் நமக்கே யன்றோ? முதலில் நாம் ஸந்தேகப்பட்டே கடைசியில் நஷ்டமடைகிறோம்.

நம்முடைய ஊரில் செய்யும் சர்க்கரைவிலை கம்மி, இறக்குமதியாகும் சர்க்கரையோ இரட்டிப்பு விலை! ஏன்? அதை வெள்ளையாகச் செய்யும் விதம் தெரியாததால்.

இவைகளையெல்லாம் பட்டண வாஸத்து ஜனங்கள் ஊக்கத்துடன் செய்தாலும் அவ்வளவு பிரயோஜன மில்லை. நமது தேசத்தில் நாட்டுப்புறத்தில் வஸிக்கும் ஜனங்களே அதிகம். அவர்கள் இதற்கு ஊக்கத்துடன் உழைக்கவேண்டும்.

கடைசியாகச் சொல்லவேண்டிய முக்யமான விஷயம் ஒன்றுண்டு, அதாவது :—

இக்காலத்தில் நம் கலாசாலைகளில் உயர்தரக் கல்விபயிலும் மாணவர்கள் அதிகமாகவே, அவர்களுக்குக் கொடுக்கும் உத்தியோக பதவியும், சம்பளமும் கம்மியாயிற்று. வாசிப்பதெல்லாம் தேசவர்த்தமானங்களைத் தெரிந்துக் கொள்வதற்கே யன்றி வேறல்ல. இதற்கு மெட்ரிகுலேஷன் பரீட்சை வரையில் படித்தால் போதும். பாஸ் செய்தாலுஞ்சரி செய்யாவிட்டாலும் ஸரி, வாசித்ததின் பிரயோஜனமாகச் சிலர் உத்தியோகஞ் செய்யட்டும், மற்றவர்கள் வியாபாரம், விவஸாயம், கைத்தொழில் முதலியவை செய்யலாம். அப்படிச் செய்யும் காலத்தே நமது தேசம் க்ஷேமமடையும். அப்படி யல்லாமல் எல்லாருமே அஷ்ட ஐசுவரியவான் முதல் பரம ஏழை ஈறாக வாசித்து உத்தியோக மென்னும் எலும்புக்கே ஆசை வைத்தல் கூடாது. ஆகையால் பிரிய சகோதர்களே! ஒவ்வொருவரும் தங்களுக் கியன்றவாறு தொழிற் கல்விகற்று ஜீவனோபாயத்தில் மற்ற ஸகோதரர்களுக்கு உதவி புரிய வேண்டுகிறேன்.

எஸ். ரெங்கஸாமி ஐயர்

---

## METHODS OF ADVERTISING.

## விளம்பரஞ்செய்யும் விதங்கள்.

சில வியாபாரிகள் ஸொந்தத்திலேயே பத்திரிகைகள் பிரசுரம் செய்து அதில் தங்கள் சரக்குகளை விளம்பரம் செய்கிறார்கள். இப்படிச் செய்வதில் என்ன விசேஷமென்றால், சரக்குகளை வாங்கக்கூடியவர்களாகப் பார்த்து அவர்களுக்கு அந்தப் பத்திரிகைகளை யனுப்பலாம். அந்தப் பத்திரிகைகளில் ஸபாசாரத்திற்கு தங்கள் ஸாமான்களைப்பற்றி சிறு உபந்யாஸங்கள் எழுதலாம். சிறுகதைகள் பிரசுரிக்கலாம்.

சிலர் நோட்டீஸ்கள் மூலமாய் பயிரங்கம் செய்கிறார்கள். அவர்கள் நோட்டீஸ்களை தபாலில் அனுப்புவார்கள். நோட்டீஸ்கள் ஜாஸ்தியாகிவிட்டபடியால், தபாலை உடைத்து நோட்டீஸ்களை பார்த்தவுடனே அதைப் படிக்காமலே கிழித்துவிடுகிறார்கள். ஆகையால், நோட்டீஸ்களை தபாலில் அனுப்புவதில் பிரயோஜனமில்லை. கடித முறையாக வெழுதினால் ஒருவேளை படித்துப் பார்க்கக்கூடும், அப்பொ

ழுதுகூட முதல் இரண்டு வரிகளை வாசித்துப் பார்த்து நோட்டீஸ்கள் என்று தெரிந்தவுடனே கிழித்துவிடுகிறார்கள். ஆகையால், ஆரம்பிக்கும்பொழுதே மேலே வாசிக்கவேண்டுமென்று ஆவல் உண்டாகும்படி எழுதியிருக்கவேண்டும். உதாரணமாக, துணியை வெளுக்கிற யந்திரம் வைத்திருந்த ஒருவர் தான் சில துணிகளை சும்மா வெளுத்துக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். சிலர் விளம்பரத்துடன் கூட ஆர்டர் பாரத்தையும் மேல்விலாசம் எழுதிய ஒரு கவரையும் வைத்து யனுப்புகிறார்கள்.

ரயில்வே பிளாட்பாரங்களிலும் ட்ராம்வண்டிகளிலும் சிறு விளம்பரங்கள் பிரசுரித்திருப்பதைப் பார்க்கிறோம். எல்லாயிடங்களிலும் ஒரே விளம்பரமாக யிருப்பதினால் பார்க்கிறவர்களுக்கு ஒரு அறுவறுப்பு உண்டாகிறது. மாஸம் ஒரு முறையாவது அந்த விளம்பரத்தை மாற்றிக்கொண்டே யிருக்கவேண்டும். தற்காலத்தில் ட்ராம்வண்டியின் வெளிப்புறத்தில் மாத்திரம் விளம்பரங்களைப் பிரசுரம் செய்கிறார்கள். உள்புரத்தில்கூட பிரசுரம் செய்யலாம். ட்ராம்வண்டிக்குள் உட்கார்ந்திருக்கும்போது ஜனங்களுக்கு வேறு வேலையில்லை. ஆகையால் வண்டியில் ஏதாகிலும் எழுதியிருந்தால் அதை அவசியம் படிப்பார்கள். மாதம் ஒருமுறை மாற்றுவதற்கு பணச் செலவாகிறதென்றால், வெவ்வேறு வண்டியில் வெவ்வேறு மாதிரியாகவாவது பிரசுரிக்கலாம். ஒவ்வொரு வண்டியில் ஒவ்வொருமுறை ஏறும்போது வெவ்வேறு பிரசுரங்களை வாசிப்பார்கள்.

பயிரங்கம் செய்வதற்கு வழிகள் அநேகமிருக்கின்றன :—பத்திரிகைகளிலும் ரெயில்வே கைட் முதலான கைட்களிலும் விளம்பர புஸ்தகங்களிலும் பிரசுரம் செய்தல், ரயில் வண்டிகளிலும் ட்ராம்வண்டிகளிலும் தெருக்களிலும் பெரிய படங்களை ஒட்டுதல், ஆட்டப்பந்தலின் படுதாக்களில் படங்களை யெழுதி வைத்தல். சில்லரை வழிகள்கூட, சில இருக்கின்றன. அவைகளில் ஒன்று ஸாமான்களை பார்ஸல் செய்து அனுப்பும்போது நோட்டீஸ்களை அதில் அடக்கம்செய்து அனுப்புதல். ஸாமான்களை வாங்க வருபவர்கள் அவைகளை எடுத்துக்கொண்டு வரும்வரையில் அல்லது கட்டிக்கொடுக்கும் வரையில் சும்மா காத்திருப்பதற்கு பதிலாக கடையில் விற்கும் ஸாமான்கள் பேர்களை அச்சிட்டகடிதம் ஒன்று கையில் கொடுத்தால் அதைப் படித்துக்கொண்டிருப்பார்கள். படிக்கும்போது தங்களுக்குத் தேவையான வேறு ஸாமான் அந்த கடையிலிருந்தால் அதையும் வாங்குவார்கள். வாங்கின சரக்குகளின் விலை மொத்தம் போடவும் அந்தக்கடிதம் உதவும், ஸாமான்களைக் கட்டிக்கொடுக்க கடையின்பேரை அச்சடித்த ஒரு வகை நாடாவை உபயோகிக்கிறார்கள். கடிதம் எழுத உபயோகப்படுத்தும் காகிதங்களில் கடையின்பேரையும், விற்கப்படும் முக்கிய சரக்குகளின் பேரையும் அச்சிட்டுவைக்கலாம்.

பெருத்த வியாபாரிகள் தங்களிடத்தில் சரக்கு வாங்குபவர்களின் நன்மைக்காக பல விதமான ஸகாயங்கள் செய்து வைத்திருக்கிறார்கள். சிலர் குடிக்க டீ காபி கொடுப்பார்கள். சிலர் பேபர்கள் வாசிக்க ரீடிங்ரூம்கள் ஏற்பாடு செய்து வைப்பார்கள். சிலர் கிராமோபோன் முதலான வாத்தியங்களை வாசித்து சந்தோஷப்படுத்துவார்கள். சிலர் ஸினமட்க்ராப் முதலான தமாஷ்களைக் காட்டுவார்கள். சிலர் குழந்தைகளை அழைத்துக்கொண்டு வருபவர்களின் ஸௌக்கியத்திற்காக குழந்தைகள் விளையாடுவதற்கு ஒரு இடம் ஏற்பாடு செய்து அதில் விளையாட்டு ஸாமான்களை வைத்திருப்பார்கள். இந்த ஏற்பாட்டை சில வைத்தியர்கள் வீடுகளில் காணலாம். சிலர் வியாபாரத்திற்கு வருபவர்களை வண்டிகளில் ஏற்றி வீடு கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள். இவைகளெல்லாம் சில்லரை வியாபாரிகளுக்கு ஸாத்தியமான காரியங்களல்ல.

# SELECTIONS.
# விசேஷத்திரட்டு.

## CARE OF CALVES.
## கன்றுகளை வளர்த்தல்.

பசுக்களும் மாடுகளும் நல்லபுஷ்டியுள்ள வைகளாய்ப் பார்க்க விரும்புவோர் அவைகளை கன்றுகளாயிருக்கும் பருவத்திலேயே ஜாக்கிரதையுடன் வளர்க்கவேண்டும். முக்கியமாய்க் கன்றுகளை, ஈன்ற 4 அல்லது 5 மாதம் வரையில் அதிகமாய்க் கவனிக்கவேண்டும். கன்றுச்குட்டிகளை ஈன்றவுடன் நன்றாய்த் துடைத்துத் தாயின் பாலைக் கொஞ்சம் ஊட்டுவித்த பிறகு, தாய்ப்பசுக்களைக் கட்டியிருக்கிற கொட்டகையிலேயே ஒரு மூலையில் விடவேண்டும். கன்றீன்றபிறகு சிலநாள் வரைக்கும் பசுக்களின் பால் மற்றக்காலத்தி லிருப்பதுபோ லிராது. அப்பொழுது அது தண்ணீர் கலந்தாற்போல மேன்மையாயிருந்துகொண்டு பேதி மருந்தின் தன்மை பொருந்தியிருக்கும். ஆகையினால் சிலநாள்வரையில் தாயின் பாலையே அடிக்கடி ஊட்டுவிக்கவேண்டும். எந்தக் காரணத்தினாலாவது கன்றுகளுக்குத் தாய்ப்பாலைக் குடிக்க முடியாத பட்சத்தில் கொஞ்சம் வெப்பமான நீரில் ஒரு கோழிமுட்டையை யடித்துக் கொடுப்பதுடன் கொஞ்சம் சிற்றாமணக்கெண்ணெயையும் நல்லபசும்பாலையும் கொடுத்துக்கொண்டு வந்தால் கன்றுகளுக்கு மலச்சிக் குண்டாகாமலும் பலம் குறையாமலுமிருக்கும். கன்றுக்குட்டிகளுக்கு பால்தான் சரியானவுணவு. அதை யளவுக்கு மிஞ்சிக் கொடுக்காமல் கன்றுகளின் வளர்ப்புக்குத் தக்கபடி சிறிது சிறிதாக அதிகரித்துக்கொண்டு வரவேண்டும். கன்றுகளுக்கு ஆறுமாதமானபிறகு கொஞ்சம் கெட்டியான ஆகாரத்தை யுண்பிக்கவேண்டும். முதலில் கொஞ்சம் வைக்கோலையும் நறுக்கின பிண்ணாக்குத் துண்டுகளையும் கொடுத்துப் பழக்கவேண்டும். பிறகு அவைகளைப் புல்லை மேயவும் விடலாம். கன்றுகளின் ஆகாரவிஷயத்தில்மட்டும் ஜாக்கிரதையாயிருப்பது போதாது. வெயிலுக்கும் மழைக்கும் அடைப்பான நல்ல கொட்டகையில் அவைகளைக்கட்டி வைக்கவேண்டும். அவைகளின் சாணம், கோநீர், முதலியவைகளை அடிக்கடி அப்புறப்படுத்திக் கொட்டகையைச் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். சந்தைகளில் கால்நடைகளை விற்கக் கொண்டுவருகிறவர்கள் கன்றுக்குட்டிகளை இரவும் பகலும் வெளிகளில் கட்டிவைக்கிறார்கள். அதனால் கன்றுகள் இளைத்துப்போகுமென்பதை யவர்கள் கவனிக்கிறதில்லை.

கன்றுகளுக்குச் சாதாரணமாய் வருகிற நோய்களைச் சிறிது ஜாக்கிரதையாயிருந்தால் சுலபமாய் விலக்கிவிடலாம். சிறு கன்றுகள் அதிகமாய்ப் பாலைக் குடிப்பதினாலாவது அல்லது கொட்டகையில் சாணம் முதலிய அசுத்தம் குவிந்திருப்பதினாலாவது அவைகளுக்கு ஒருவித பேதி காண்பதுண்டு. இது தொத்துவியாதி யாகையினால் நோயுற்ற கன்றை உடனே வேறு இடத்தில் கட்டிவைத்து, கொட்டகையைச் சுத்தஞ் செய்யவேண்டும். இதற்குக் கர்ப்பூரக்கஷாயம் (காம்ப்ரொடைன்) என்கிற திராவகத்தில் ஏழு அல்லது எட்டுப்பொட்டுகளைத் தண்ணீரிற் கலந்து கொடுத்தால் பேதி நின்றுவிடும்.

கன்றுகளுக்குச் சாதாரணமாய் மற்றொருநோய் வருவதுண்டு. அதாவது வயல்களிலும் வேறு ஈரமான விடங்களிலு மிருக்கிற ஒருவகைப் புழு கன்றுக்குட்டிகளின் கழுத்திலும் நாசித் துவாரங்களிலும் கடிப்பதினால்அவைகளுக்கு ஒருவித இருமல் உண்டாகிறது. இந்த நோய் கண்டிருப்பதற் கின்னொரு அடையாளம் கன்றுகள் ஒரு நிலைமையில் நிற்காமலும் அடிக்கடி தலையை யசைத்துக்கொண்டு மிருக்கும். அவைகளின் நாசிகளிலும் தொண்டைகளிலும் புகையூட்டினால் இந்த நோய் நீங்கும்.

மேற் கூறியவைகளைக் காட்டிலும் கன்றுகளுக்கு மிகுந்த துன்பத்தை யுண்டாக்குவதும் சீக்கிரத்தில் நிவிர்த்தியாகாததுமான வியாதி 'ரிங்குவொர்ம்' என்கிற பூச்சிக்கடி. இது அநேகமாய்க் கழுத்திலும் தலையிலும் வரும். அது முதலில் சிறு பருக்களாசக் கிளம்பிச் சிறிது சிறிதாகப்படர்ந்து மோதிரம்போலொரு வட்டமான வடிவைக்கொள்ளும். அதை, முதலிலேயே கவனிக்காமல் அசட்டையா யிருந்தால் அது வரவர அதிக இரணமாகி மிகுந்த நமைச்சலை யுண்டாக்கும். கன்றுக்குட்டிகள் அந்த நமைச்சலைப் பொறுக்கமுடியாமல் தூண் சுவர் முதலிய உரமான வஸ்துக்களில் சாய்ந்து அப்புண்களைத் தேய்த்துக் கொள்ளும். அவ்வாறு தேய்க்கும்பொழுது அந்தப் புண்களிலிருக்கும் கிருமிகள் அந்தத் தூண்களிலும்

சுவர்களிலு மொட்டிக்கொண்டு அவைகளில் அதே மாதிரி தேய்த்துக்கொள்ள வருகிற இதர மாடுகளின் சர்மங்களிலொட்டிக்கொள்ளும். இந்தவிதமாய் வெகு சீக்கிரத்தில் பல மாடுகளுக்கும் இந்த பூச்சிக்களை தொற்றும். இந்த நோய்க்கு சிகிச்சை:—புண்களை நன்றாய்ச் சுத்தப்படுத்தி 'டின்சர் ஆப் ஐயோடின் என்னும் திராவகத்தைப் பூசிக்கொண்டு வரவேண்டும். அநேகநாள் பொறுமையுடன் பிரயாசைப் பட்டாலொழிய இது முழுதும் நிவிர்த்தியாகாது. இதை யதிகமாய்ப் பரவச்செய்யாம லிருப்பதற்குவேண்டிய ஏற்பாடுகளுஞ் செய்யவேண்டும்.—ஜந்து வர்த்தமானஸராம்.

---

## PEARLS.

## முத்துக்கள்.

முத்து என்பது சிப்பிமுதலிய சில ஜந்துக்களின் ஓடுகளில் அகப்படும் பொருளேயன்றி வேறல்ல. அந்த ஜந்துக்களுடைய மெல்லிய தோலுக்கும் ஓட்டுக்கும் நடுவே ஒரு பொடிமணல் பற்றிக்கொண்டால் அந்த ஜந்துக்களுக்கு எரிச்சல் எடுக்கிறது. அதை சகிக்காமல் பூச்சி புரளுகையில், சுண்ணும்பு நீர்போன்ற ஒருவித நீர் பொசிந்து மணலை மூடுகின்றது. இதுவே கடைசியில் முத்தாகி விடுகிறது. இயற்கையாய் முத்து உற்பத்தியாகும் விதம் இதுவே. சீனதேசத்தார் வேறு பல உபாயங்களால் முத்து உண்டு பண்ணுகிறார்கள். எரிச்சல் உண்டாக்கத்தக்க அணுக்களை அந்தப் பூச்சியின் ஒட்டுக்குள் செலுத்தி, ஜந்துக்களுக்கு நோவு உண்டாக்குகிறார்கள். அவைகள் முன்போலவே புரள, முன்சொன்ன மாதிரி சுண்ணும்பு நீர் உண்டாக அதிலிருந்தும் முத்து உற்பத்தி செய்கிறார்கள். பக்குவமாகிறதற்குச் செல்லும் காலத்திற்குத் தக்கபடி முத்தின் பரிமாணம் வேறுபடும்.

எரிச்சலுக்குத் தக்கபடியும் அளவு வேறுபடுகிறதுமுண்டு. உஷ்ணதேசங்களிலகப்படும் முத்துக்கள் நேர்த்தியாயும் பெரியவையாயு மிருக்கின்றன. குளிர்ச்சியான தேசங்களிலகப்படும் முத்துக்கள் சிறியவையாயிருக்கின்றன. ஆகவே சீதோஷ்ணத்திற்குத் தக்கபடி அளவு வேறுபடுகின்றன வென்றும் சொல்ல ஞாயமிருக்கிறது. நிலத்தில் சஞ்சரிப்பதுபோல நீரிலும் இயலத்தக்க மனிதர்களே முத்துக் குளிக்கும் தொழிலுக்கு அமர்ந்திருக்கின்றனர். ஆதலில் அவர்கள் சமுத்திரத்தின் அடித் தரையிலுள்ள முத்துச்சிப்பிகளை எடுக்கும்படி தீரமாகக் கடலில் முழுகுகின்றார்கள். நீருக்குள் அவர்கள் நூறு நூற்றிருபது, இன்னம் சிலர் முன்னூறு வினாடிவரையில் இருப்பதாகத் தெரியவருகின்றது. இந்தத் தொழிலிற் பழகிய சிலர் 24 அடி முதல் 60 அடி ஆழம் வரையில் முழுகுகிறார்கள்.

தண்ணீரில் முழுகும்போது ஒரு பக்கத்தில் துவாரமுள்ள கல்லில் கயிற்றைக் கட்டி அதை வலது கால்விரலிலும், சிப்பிகளை போட்டுக் கொள்ள வலைபோன்ற பையொன்றை இடது காலிலும் மாட்டிக் கொண்டு செல்வான், படகிலிருந்து விடப்படும் கயிற்றை இரண்டு கைகளாலும் பற்றிக் கொண்டு முழுகுகிறான். கல் அவனை சீக்கிரம் கீழே செல்லவும் மரக்கலத்திலிருந்து விடப்பட்ட கயிறு சீக்கிரம் மேலே வரவும் உதவியாக விருக்கிறது.

வலைப்பை நிரம்ப முத்துக்களை வாரி வந்து அதற்கென்று தோண்டப்பட்டிருக்கிற பள்ளங்களில் கொட்டி அழுகவைத்துப் பின் முத்து எடுப்பார்கள். முத்துக்கள் சிப்பிக்குள் அழுத்தமாயிருந்தால் வேகவைத்து மெடுப்பார்கள். அழுகவைக்காமல் முத்து எடுத்தால் அவைகள் சேதபட்டுப் போகும். சிப்பிகளின் ஒட்டைத் திறந்து உள்ளிருக்கும் முத்துக்களை வெகு கருத்தாக எடுப்பார்கள்.—நல்லாசிரியனில் வி. எஸ். ஆழ்வாரய்யங்கார்.

---

## TEETH.

## தந்தங்கள்.

நமது தோல், சதை முதலியவைகளைவிடத் தந்தங்கள் மிகவும் உறுதியானவைகளே ஆயினும் அவற்றில் நோயுண்டாய் அநேகர் உபத்திரவப்படுவதை நாம் காண்கிறோமல்லவா? இந்நோய்க்குக் காரணம் நம்முடைய அஜாக்கிரதையே. வெள்ளம் வருமுன்னாலேயே அணைகோலிக் கொள்ளுவதுபோல, நோய் உண்டாவதற்கு முன் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டியது அத்தியாவசிய மாகின்றது. பல்லின் வெளிப்புறம் உறுதியும் வெண்மையுமாகியது; உட்புறம் எலும்பைப்போன்றது. பல்லின் மத்தியில் உட்புறமாய் வேர் வரையிலும் இரந்திரகுழியுமுண்டு; இவ்விரந்திரத்தில் தான் மெல்லியரத்தக் குழாய்களும் மூளைக்குச் சம்பந்தப்பட்ட நரம்புகளும்

அமைக்கப்பட்டிருக்கின்றன. பல்லின் மேற்புறமும் உட்புறமும் தேய்வடைந்து கெடும்பொழுது மேற்கூறிய சிறு நரம்புகள் தாக்குண்டு, நாம் சகிக்க முடியாத நோய்க்குள்ளாகிறோம்.

பல்லுக்கு வியாதி எவ்வாறுண்டாகிற தென்பதைப் பார்ப்போம். சிலர் வியாதியஸ்தராயும் பல வீனராயுமிருப்பதால் பல்நோய்க்குள்ளாகிறார்கள். மற்றுஞ் சிலருக்குப் பரம்பரையை யொட்டி இவ்வியாதி யுண்டாகலாம். ஆனால் சாதாரணமாய் இது நம் அஜாக்கிரதையினாலேயே உண்டாகிறது. நாம் போஜனம் செய்யும் பொழுது உணவின் சிறு துணுக்குகள் பல்லைச் சுற்றியும், பற்களுக்கு இடையிலும் தங்குகின்றன. நம் வாயில் கண்ணுக்குத் தெரியாத அநேகம் சிறு கிருமிகளிருக்கின்றன. இவைகள் பல்லைச் சுற்றியும், அவைகளுக்கு மத்தியிலும் ஒட்டிக்கொண்டிருக்கும் உணவை, முக்கியமாய் சர்க்கரை அல்லது மாப் பண்டத்தைத் தாக்க, அப்பண்டங்கள் திராவகம் போன்ற புளிப்புப் பதார்த்தங்களாக மாறிப் பல்லிலிருக்கும் உலோக பதார்த்தைத் தின்றுவிடுகின்றன. உலோக பதார்த்தம் போக, மிகுந்த ஜீவ பதார்த்தத்தை மற்றுமுள்ள பூச்சிகள் தாக்க, பல்தேய்ந்து கெடவாரம்பிக்கிறது. உடனேவயித்தியருக்குக்காட்டி சிகிக்சை செய்யாவிடில், பல்லில் சொத்தைகண்டு சிறு இரந்திரங்களுண்டாய் வியாதி உள்ளே நரம்புகளிருக்கும்வரை பரவுகின்றது. அப்பொழுது நாம் உண்ணும் உணவின் சிறு அணுக்களும் இரஸம் குழம்பு முதலானவைகள் பல்லிலுண்டாகிய துவாரங்களுக்குள் சென்று, நரம்புகளுக்கு எரிச்சலுண்டாக்குகின்றன. அதை நாம் 'பல்நோய்' என்கிறோம்.

பற்கள் உறுதியாயிருப்பதின் பிரயோசன மென்னவெனில், நாம் உண்ணும் சில கடினமான பதார்த்தங்களை நொறுக்கிப் பொடியாக்கி உமிழ் நீருடன் கலக்கச் செய்து, சுலபமாய் விழுங்கும்படியான ஏற்பாடுகளை அவைகள் செய்வதுதான். இது மாத்திரமல்ல; இதில் முக்கியாம்சமென்ன வெனில், நாம் உண்ணும் பதார்த்தங்கள் பொடியாகாமல் அப்படியே உட்சென்றால் அவைகள் ஜீரணமாகமாட்டா. அவைகள் ஜீரணமாவதற்கு உமிழ் நீருடன் சலக்கவேண்டிய தவசியம், அவைகள் பொடியாகாவிட்டால் உமிழ் நீருடன் நன்றாய்க் கலந்து வேண்டிய மாறுதலையடையா. மேலும் ஒரு பக்கத்தில் நோயுண்டானால், அப்பக்கத்தில் உணவை மென்று தின்னமுடியாது. அதனால் மற்றொரு பக்கத்தை மாத்திரந்தான் உபயோகப்படுத்தவேண்டியிருக்கிறது. அப்பொழுது நோயுண்டாகிய பக்கத்தில் சாப்பிடும் பதார்த்தங்கள் தங்கி, மேற்சொன்னபடி நன்றாயிருக்கும் பற்களும் கெட வாரம்பிக்கின்றன. உண்பதற்கு வாயின் ஒருபக்கம் மாத்திரமே இப்பொழுது உபயோகப்படுவதால், பதார்த்தங்களைச் செவ்வையாய் மெல்ல முடியாமல், அஜீரணமுண்டாய், போஜன ஸாரம் இரத்தத்தோடு கலவாமல், தேகம் வெளுத்துப் பலவீனமுண்டாகிறது. தவிரவும், பல்லுக்குள்ளிருக்கும் ஜீவபதார்த்தம் மாறுதலடைந்து அழுகி வெளிவருவதால், பேசும்பொழுது பொறுக்கமுடியாத துர்க்கந்தம் வீசுகின்றது. மேற்கூறிய அழுகின துர்க்கந்த பதார்த்தம் சாப்பிடும்பொழுது உணவுடன் கலந்து அதைக்கெடுத்து, அதன் சம்பந்தமாகிய அநேக வியாதிகளை உண்டுபண்ணுகிறது. மேலும், அந்தக் கெட்ட பதார்த்தம் உள்ளுக்குள்ளேயே பரவி தவடை எலும்பில் கட்டி கிளம்பும்படி செய்து ஆபத்தை விளைவிக்கிறது. ஆகையினாலே சிறிது அஜாக்கிரதையினால் எவ்வளவு பெருந் துன்பத்துக் காளாகிறோ மென்பதைத் தெரிந்து கொள்ளுகிறோ மல்லவா?

இனிமேல் பல்லின் ஆரோக்கியத்தைக் குறித்து நாம் கவனிக்கவேண்டிய விஷயங்கள் என்னவென்று பார்ப்போம். பல்லைச் சுற்றிலும் அவைகளுக்கிடையிலும் உண்ணும் பதார்த்தங்கள் தங்கி நிற்கவொட்டாமல் உடனுக்குடனே அவைகளை விலக்க வேண்டியது. இரவில்தான் முக்கியமாய்த் தீங்கு விளைவதெல்லாம் ; ஏனென்றால் அப்பொழுது பதார்த்தங்கள் தங்கிச் சாவகாசமாய் மாறுதலடைகின்றன. ஆகையினாலே பொழுது விடிந்த பிறகு நாம் பல்விளக்குவதுடன் படுக்கைக்குச் செல்லும்பொழுது கூட, தந்த சுத்தி செய்வது நலமென்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். மேலும் ஒவ்வொரு சாப்பாட்டிற்குப் பிறகும் பற்களுக்கிடையிலிருக்கும் பருக்கை முதலானவைகளைப் பல்குத்தியினால் ஜாக்கிரதையாய் எடுத்துவிடுவது மிக்க அவசியமாகும். இதற்காகச் சிலர் துடைப்பச்சுப்பலை உபயோகிக்கிறார்கள். சில வேளைகளில் அது ஒடிந்து பல் பதியப்பட்டிருக்கும் சதைக்குள் அகப்பட்டுக்கொண்டு இரத்தம் வரச் செய்து உபத்திரவமுண்டாக்குகிறது. அதனால் பகூி

யின் இறகுபோன்ற மிருதுவானவஸ்துக்களை உபயோகிப்பது நலமாகும். சாம்பல் மணல் முதலான கடின வஸ்துக்களால் தந்தசுத்தி செய்வது சரியல்ல. தந்தசுத்தி செய்த பிறகு "பொட்டாவியம் பெர்மாங்னேட்" என்னும் உப்பு சிறிது கரையப்பெற்ற ஜலத்தினல் வாய் கொப்பளித்து உமிழ்ந்தால் மேலே சொல்லப்பட்ட கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய பூச்சிகள் மடிந்துவிடும். மேற்கூறியதுபோன்ற "லோஷன்" களைடாக்டர்களிட மிருந்து வாங்கி வைத்துக்கொள்வது மிகவும் நல்லது. கடினமான பதார்த்தங்களைக்கடித்து மெல்லுவதனலே பல்லில் ஒட்டிக்கொண்டிருக்கும் பருக்கை கஞ்சி முதலானவை நீங்கிப் பல்லின் வெளிப்புறம் மழமழப்பாயும் பளபளப்பாயும் மாறுகிறது. அதனல் பல் உறுதி பெறுகின்றது. ஆகையினல் குழந்தைகளின் பற்களுக்கு அதிக வேலை யுண்டாகும்படி கடினமான பிஸ்கோத்து ரொட்டியின் மேற்புறம் முதலாகிய சிறிது கடின வஸ்துக்களைக் கொடுப்பது அவர்களினுடைய பற்களுக்கு உறுதியையுண்டாகும். நம்மவரிற் சிலர் குழைந்தைக்கு 4, 5 வயது வரைக்கும் பல்தேய்க்கும் வழக்கம் இல்லாமலும் தாமாவது தகுந்த முயற்சி எடுத்துக்கொள்ளாமலு மிருக்கிறார்கள். அதனல் அநேகம் குழந்தைகளுக்குச் சிறிது காலத்துக்குள்ளேயே பல் இளப்பமாய்விடுகிறது. ஆனது பற்றி, குழந்தைக்குக் கஞ்சி போட்டிய பிறகும் சாதமூட்டியபிறகும் அழுக்கில்லாதமிருதுவான ஈரவஸ்திரத்தினல் குழந்தையின் பற்களை ஜாக்கிரதையாய்த் துடைக்கும்படி தாய்மார்களுக்குப் போதிக்கவேண்டியது அவசியமாகிறது.

ஓர் பல்லானது வியாதிக்குட்பட்டு அடியோடு கெட்டுவிடும் பக்ஷத்தில் அதை டாக்கடரைக் கொண்டு நீக்கிவிட வேண்டியது. அன்றேல், அது மரண வலி யுண்டாக்குவதுடன் மற்றுமுள்ள பற்களும் இவ்வியாதியைப் பரவச்செய்யும். அப்படி யெடுத்துவிட்டபிறகு அந்த இடத்தைக் காலியாய் வைக்கலாகாது. அதற்குப் பதிலாக வேறே பல் கட்டிக்கொள்ளவேண்டியது. ஆனல் இரவில், கட்டிக்கொண்ட பல்லுடன் தூங்குவது அபாயகரமானது. ஏனென்றால் அது தளர்ச்சி யடைந்து தேய்வுற்று வயிற்றுக்குள் சென்றுவிடும். ஆகையினல் அதை நித்திரை போகுமுன் எடுத்து மிக்க ஜாக்கிரதையாய் வைக்கவேண்டியது.

கடைசியில் முக்கியமான அம்சம் ஒன்று. இக்காலத்தில் பலவிதமான பானங்கள் ஏற்பட்டுவிட்டன. லெமனேட், லைம்ஜ்யூஸ் முதலானவைகளை அடிக்கடி குடிப்பது பெருந்தவறு. அவ்விரஸம் புளிப்புள்ளதாகையால் பல்லின் உலோக பதார்த்தத்தைத் தாக்கித் தின்னுவிடுகிறது. அது காரணங்கொண்டே புளிப்புக் கிச்சிலிப்பழங்களைக் குழந்தைகளுக்குக் கொடுத்து நாமுஞ் சாப்பிடுவது அனுசிதமான காரியம். புளித்தபழையது, சோற்றுத் தண்ணீர் முதலானவைகளும் பல்லுக்குக் கெடுதியே. இதுவுமன்றி ஐஸ் சாப்பிடுவதும் ஐஸ் சோல்ட் வாட்டர் சாப்பிடுவதும் இக்கால நாகரிகமாய் விட்டன. அதிகக்குளிர்ச்சியினல் பல்லானது பலவீனமடைந்து தேய்வுற ஆரம்பிக்கிறது. லெமனெட் லைம்ஜ்யூஸ் இவைகளில் ஐஸ் கலந்து சாப்பிட்டுவிட்டால் பல் பலவீனப்படுவதற்குக் கேட்கவும் வேண்டுமோ? சாதாரணமாய்ப் பானத்திற்கும் தந்தசுத்தி செய்து வாய் கொப்பளிப்பதற்கும் சிறிது உஷ்ணமான நீர் உபயோகிப்பதே மேலாகும்.

நாம் உண்ணும் உணவு ஜீரணமாவதற்கு முக்கியமாயிருக்கும் பற்களின் அருமையும் அவைகளை அலக்ஷியம் செய்வதனல் உண்டாகுந் தீமைகளும் மேற்கூறியவைகளால் ஏதோ சிறிது தெரியலாயின. நம்போன்றவர்களுக்கு இவைகளெல்லாம் தெரிந்தவைகளே. தெரியாமையினலோ, அல்லது அஜாக்கிரதையினலோ தங்களுடைய இன்பத்தை யிழந்து, தங்கள் குழந்தைகளையும் துன்பத்துக்குள்ளாக்குபவர்களுக்கும், நம் ஸ்திரீ ஜனங்களுக்கும் இவ்விஷயத்தை யெடுத்துச் சொல்லிச் சுகம் பெறுமாறு நாம் கவனிக்க முயல்வோமாக.—சுதேசமித்திரனில் ஒரு நிரூபர்.

## AN APPEAL TO THE RYOTS.
## நமது குடித்தனக்காரருக்கோர் விண்ணப்பம்.

பழையன கழிதல் இப்பத்திரிகையின் ஓர் விசேஷக் கொள்கை யாதலா லதைப்பற்றி நான் நமது நண்பர்களுக்கு விளக்கி எழுதவேண்டிய தவசியமில்லை. ஆனலும், சிறிது நாளைக்குமுன், ஆங்கிலத்தில் வழங்கிவரும் ஓர் மாதாந்தரப் பத்திரிகையில் ஆங்கிலக் குடித்தனக்காரருக்கும் பழையன கழிவதென்பது இன்றியமையாததென்று வெகு விஸ்தாரமாய் எழுதியிருக்கிறது. இதனல் எத்தேசத்திலும் குடித்தனக்

காரர் பழையன கழிவது கஷ்ட சாத்தியமென்று காணும்.

அதிற் கண்டிருக்கும் பல அம்சங்கள் நமது நாட்டில் வழக்கத்திலிருக்கும் விவசாய முறைகளை ஒத்திருக்கின்றன. அவைகளில் நமது தேச வழக்கத்திற் கனுசரித்திருப்பவைகளில் சிலவற்றைப்பற்றி மாத்திரம் இங்கு குறித்து காட்டுகிறோம்.

பிரஸ்தாப நிரூபத்திற் கண்ட விஷயங்களில் ஒன்று மட்டும் படித்தமாத்திரத்தில் மனதைக் கவரக் கூடியதாயிருக்கிறது.

"மனிதருடைய இயற்கைக் குணத்தினாலோ, வேறெந்தக் காரணத்தினாலோ தெரியவில்லை, இத்தேசத்தி லெப்படியோ அவ்வாறே இங்கிலாந்திலும், குடித்தனக்காரனுக்கு ஏற்பட்ட நெறியாதெனில், மூத்தோர் நெறி பற்றுவதாகிய ஒன்றேயாம். மூதாதைகள் சென்ற வழியே செல்வதும், தான் பிடித்ததைக் குரங்குப்பிடி யாக்குவதும் அவனுக்கேற்பட்ட சகஜ குணம். எந்த விஷயத்திலும் தன் தந்தைக் கனுகூலமாயிருந்ததே தனக்கும் சரியாயிருக்கிறது. தன் பாட்டனுக்குச் சரியாயிருந்த தெதுவோ அதுவே தன் தந்தைக்கும் சரியாகவேயிருந்தது. இங்ஙனமே தலைமுறை தலைமுறையாயிருப்பதனால் அனாதியாய் ஏற்பட்டு மலிந்துள்ள கேவலமான அஞ்ஞான இருளைக் கொண்டே அவன் எளிதில் திருப்தி யடையக் கூடினவனா யிருக்கிறான்." ஆகவே விவஸாயம் முக்காலே மூன்று வீசமும் பழைய பதிவை குருட்டுத்தனமாக நடைபெறும் தன்மையுடையதாக ஏற்படுகிறது.

"உழுகிறவன் கணக்குப் பார்த்தால் முழக்கோலும் மிஞ்சாது." இது நமது நாட்டில் சகஜமான ஒரு பழமொழி யென்பதை அறிஞர் யாவரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் அப்பழமொழி எவ்வளவிற்கு வாஸ்தவத்தில் உண்மை யென்பதை நமது குடியானவர்க ளறிகிறார்களில்லை. சாஸ்திரத்தில் கருத்திலில்லாமற் செய்யும் கிருஷி முற்றும் பயனற்றதாம். தக்க சாமக்கிரியையுடனும், ஒத்தாசை யுடனும் நடத்தப்படும் குடித்தனத்தில் அபார லாபமேயல்லது நஷ்டம் கொஞ்சமும் கிடையாதென்பதே உண்மையாகும்.

உதாரணமாக, கோதுமை விவசாயம் அறுபது வருஷத்திற்கிப்பால்இங்கிலாந்தில் குறைந்து வருகிறதாம். நமது நாட்டிலும் அநேக இடங்களில் சாகுபடியிலிருந்த நிலங்கள் இன்றைக்குத் தருசாய் கிடைப்பது நமக்குத் தெரியும். தற்காலத்தில் நிலவளம் முன்போலில்லை யென்றும் வெள்ளாமை முன்போல் புஷ்டியில்லையென்றும் நமதுநாட்டுக் குடியானவர்களெல்லாரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். என்றாலும் சாகுபடி விஷயத்தில் பெரியோர் போன வழியே இவரும் போவதல்லாது வேறுவழி போவதுமில்லை. நிலவளத்தை விருத்தி செய்வதற்கான நூதன சாஸ்திர முறைகளை அறிய முயலுவதுமில்லை. யாராவது சிலர் உபதேசித்தாலும் அவற்றை அநுஷ்டிப்பதில்லை. என்று மட்டுமேயல்ல, அவைகளை யனுஷ்டிக்கப் பிரயத்தனப்படுவோர்களை பரிகசித்தும் வேறுவிதமாகவும் ஊக்கமற்றவர்களாகச் செய்து விடுகிறார்கள்.

உருளைக்கிழங்கு சாகுபடியு மப்படியேதானிருக்கிறது. நிலவளம் இங்கிலாந்தைவிட நமது நாட்டிற் குறைவதில்லை யென்றாலும், வேறுசில நாடுகளிற் செய்வதுபோல அதை விருத்தி செய்யவாவது, உற்பத்தியாகும் சரக்குகளை வியாபார முறைகளை யனுசரித்து எவ்வளவு விதமாக உபகரிக்க உதவலாமோ, அவ்வளவிற்குச் சம்பாதிக்க வேண்டி பிரயத்தனப்படுவதுமில்லை.

உதாரணம் வேண்டுவோர் நீலகிரியில் குடித்தனம் செய்யும் படுகரைப் பார்க்கலாம். அவர்களுக்கு மேல் நடக்கவேண்டிய காரியம்புலப்படுகிறதேயில்லை. உருளைக்கிழங்கு முதிரு முன்னமே மூட்டைக்கு இவ்வளவென்று பேசிப் பணத்தை வாங்கித்தின்று விடுகிறார்கள். கிழங்கைப் பணங்கொடுத்த ராவுத்தன் வந்து எடுத்துப்போய் விற்று, இரட்டை லாபமடைகிறான். சமீபத்தில் சர்க்கார் ஆஸ்திரேலியக் கிழங்கு தருவித்துப் பரீக்ஷித்ததில், அது நன்றாய் விளைவது ருசுவாயிற்று. என்றாலும், படுகருக்கு அந்த விதையைக் கொடுத்தால் மறு வருஷம் விதை கூடக் கிடையாமல் எங்கே போய் விடுமோ என்று பயந்து கலெக்ட்டரவர்கள் சில நிர்பந்தங்களேற்படுத்தி, ராவுத்தருக்குக் கொடுப்பதில்லை என்றவர்களுக்கு மட்டுமே விதை கொடுத்தாராம். இருதிறத்தவரும் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய தென்னவென்றால், எவ்வகை விளைபொருளும், நல்ல பிரயத்தனத்தால் கடைசியில் எவ்வளவு விளையுமோ அவ்வளவும் விளைவித்து, அதனா லடையக்கூடிய பிரயோஜனங்கள் பலவகைத் தாகும்படி பார்த்தால் மட்டும் லாபத்திற் கிடமுண்டாகு மென்பதாம்.

பாலும் பால் சம்பந்தமான சரக்குகளும் இவ்வாறே உலாந்தா முதலிய விடங்களில் விருத்தி யடைந்திருக்கு மளவிற்கு இங்கிலாந்து விருத்திக்கு வரவில்லையாம். நமது நாட்டிலோ சொல்லவேவேண்டிய தில்லை.

இதற்குக் காரணமென்னவெனில் "எண் ணுமெழுத்தும் கண்ணெனத் தகு" மென ஔவை செப்பியும் நம் நாட்டுக் குடியானவர் இன்னும் எண்ணருமை அறிந்தபாடில்லை. உலாந்தவரிலோ வென்றால், அவரவர் பட்டியிலிருக்கும் ஒவ்வொரு கறவை உருப்படிக்கும் கணக்குண்டு. அதற்குத் தீனி கொடுப்பதற்கும், அதற்குப் பர்த்தியாக அதனிடமிருந்து கிடைக்கும் சாதனங்களுக்கும் திட்டமான கணக்குண்டாம். காலிகளிடமிருந்து கிடைக்கும் சகல சாதனங்களுக்கும் கிரமமாக உள்ள பல உபயோகங்களையும் நன்றாய் அறிந்திருக்கிறார்களாம். இவ்வாறே கால்நடைகளைப் புஷ்டி யடையச்செய்த மேல், பாலதிகமாகப் பெருகப் பெருக அவற்றை வீண் போக்காமல் பன்றிகளுக்கும் கூடப்பால் கொடுத்துவந்து அவைகளை வியாபாரத்துக் கேற்றபடி போற்றி, சர்க்கார் லாபம் சம்பாதிக்கிறார்களாம்.

சுருக்கிச் சொல்லுமிடத்து இப்பொழுது நம் நாட்டில் பால் ஒன்றை மட்டுமே தக்கபடி விருத்தி செய்தால் போதுமானது. (நமது நாட்டில் பாலைப் பெருக்குவதென்றால் நீருட்டிப் பெருக்குவதல்லாது வேறுண்டோ?) அப்படிச் செய்வதில் அனேக விசேஷ பலனுண்டு. உலாந்தருள் ஒன்றைக் கவனிப்போம். பாலிலிருந்து நேர்த்தியான வெண்ணெய், பாற்கட்டி முதலானதெல்லாம் அவர்கள் எடுத்தானபிறகு, மீந்து இருக்கும் பால் பன்றிகளைப் போற்ற உபயோகப்படுகிறது. பன்றிகள் வம்சம் விருத்தியடைய நாட்டுக்கு உரம் அதிகப்படுகிறது. அதனால் நில வளம் பெருகி விளைவு பெருக்கும், செல்வப் பெருக்கும், கன்று காலிகள் விருத்தியும் வேண்டிய மட்டில் மலிய இடமுண்டாகிறது.

கொஞ்ச நாளைக்குமுன் கேவலம் தருசாயும் பரிஹாசத்துக் கிடமான மரு பூமியாயும் இருந்த பிளாண்டர்சு (உலாந்தாவின் ஓர் கண்டம்) என்னுமிடத்தில் இப்போது சற்றுகுறைய இரண்டுலக்ஷம் ஏகராவின் விளைவினால் இரண்டு லக்ஷம் ஜனங்களும், அநேக ஆயிரம் கால் நடைகளும், உபஜீவனம் செய்து வருவதுடன் இங்கிலாந்துக்கும் இதரதேசங்களுக்கும் யதேஷ்டமான வியாபாரச் சரக்குகளையும் ஏற்றுமதி செய்கிறதென்றால் அந்நாட்டின் வளத்தை என்னென்று சொல்வது? நல்ல வண்ணம் ஒருவன் ஒரு ஏகராவில் பாடுபட்டால் ஒரு குடும்பம் தண்டியாக நாள் கழிக்கலாம்.

அன்னதானத்திற்குப் புண்ணியம் அனந்தமானாலும், ஐம்புலனும் ஐம்பொறிகளிலொன்றேனும் சுவாதீனத்தில் வைத்துள்ள ஒவ்வொருவனும் பூமியில் தனக்குப் பாடு படுவதற்கு பாத்தியம் கொண்டாடுவதுடன், தானும் பாடுபட்டுத் தன்னைச் சார்ந்தவர்களையும் காப்பாற்றுவது தன் கடமையென்று அறிந்தனுஷ்டித்தால், நாட்டின் நீர்வளமும் நிலவளமும் குன்றாமல், ஈசுவர கற்பனை நிறைவேறி இகத்திலும் பரத்திலும் சுகத்தைக் கொடுக்கும்.

அந்தக் கற்பனை யிது:—"முந்தி யொருகாலத்தில் சர்வேசுவரன் மனிதரை சிருஷ்டித்து, யஞ்ஞங்களென்ற பெயருடன் பல கருமங்களையுங் கொடுத்து, 'இவற்றைச் செய்துவந்தால் உங்களுக்கு வேண்டியதெல்லாம் கிடைக்கும்' என்றாராம். ஆதலால் சிலர் பாடுபடுவதும், சிலர் உண்டு சுகிப்பதும் அன்னபூரணியாகிய எனக்குச் சம்மதமில்லை. கைகால் படைத்தவரனைவரும் பூமியைக்கிளறி, சாஸ்திரப்படி கிருஷியென்னும் யக்ஞத்தைச் செய்துவந்தால், அவர்களுக்குத்தான் நான் வாஸ்தவத்தில் அன்னபூரணியாகிறேன்."—வித்யாவிஹாரிணி

---

## WHAT SHOULD WE DO TO HELP THE RYOTS?

## விவசாயிகளுக்கு நாம் செய்யவேண்டிய உதவி என்ன?

நம் நாட்டில் முக்கியமான தொழில் விவசாயமென்பது யாவரு மறிந்தவிஷயம். நம் நாட்டில் விளைகிற நெல், கோதுமை, சோளம், கேப்பை முதலான தானியங்கள், நம் நாட்டினருக்கு உணவுக்குதவுவதும் தவிர, அந்நிய நாடுகளுக்கு எவ்வளவோ ஏற்றுமதியாகின்றன. இவைகளை சாகுபடி செய்யப்பட்டவர்கள் முற்றிலும் கிராமவாசிகள். ஆதிகாலத்தில் எவ்விதம் நம் ஜனங்கள் நிலங்களை உழுது பயிரிட்டு ஜீவனம் செய்துவந்தார்களோ அப்படியேதான் இன்றும் நடந்தேறிவருகிறது. சிற்சில விடங்களில் மாத்திரம் சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிற விவசாய உபகார

சாதனங்களை கைப்பற்றி அவ்விடங்களுக்குத் தகுந்த நவீன ஏற்பாடுகள் சிலர் செய்துக்கொண்டிருக்கிறார்களே யொழிய, மற்றெங்கும் முன்போலவே நடந்தேறி வருகின்றன வென்பது தேச சஞ்சாரம் செய்திருக்கிற ஒவ்வொரு அறிஞர்களும் நன்கறிவார்கள். நம்மை அரசாக்ஷி செய்துவருகிற ஆங்கிலேய சர்க்கார் என்னென்ன உதவிகள் நம் நாட்டு விவசாயிகளுக்கு செய்யக்கூடியதோ அவைகளை செய்தாய் விட்டனர். அப்படிக்கிருந்தும் மற்ற நாடுகளைப் போல் நவீன சருவிகளை உபயோகப் படுத்தவும் நிலத்தின் தன்மையை சாஸ்திரப்படி நன்கறிந்து, எவ்வளவு அதிகமான லாபத்தை யடையக்கூடிய வழிகளில் விவஸாயம் செய்யக்கூடுமோ அம்மார்க்கங்களை அறிந்தும், விதையை எவ்விதம் பாதுகாத்து பயிரிட்டால் அதிக தானியங் கிடைக்குமென்பதையும் தானியப் பயிர்களுக்குக் காலவேற்றுமையாலுண்டாகக்கூடிய அநேக கேடுகளுக்குத் தகுந்த பரிகாரம் அப்போதைக்கப்போது செய்துகொள்ளவும் நம் விவஸாயிகளுக்கு இவ்விதமான நானாவித அறிவும் இலகுவாய் கிடைக்க வழியின்றியிருக்கிறது. அமெரிக்காவில், விவஸாயிகளுக்கு என்னென்ன விதங்களாய் சர்க்காரும் பொதுஜனத் தலைவர்களும், மற்றுமுள்ள தனவான்களும் உதவிசெய்து வருகிறார்களென்பதை கல்கத்தாவில் பிரசுரமாகிற 'மாடர்ன் ரெவ்யூ' என்னும் ஜூன்மீ வெளிவந்த மாதாந்த சஞ்சிகையில், வங்காள நாட்டினின்றும் விவஸாய விஷயமாய் அறிவு பெற்று வர அமெரிக்காவுக்குப் போயிருக்கும் ஸ்ரீயான் எஸ். வின்னு என்பவர் எழுதியிருக்கிறார்.

வட அமெரிக்காவிலுள்ள 'யுனைடெட் ஸ்டேட்ஸ்' என்னும் ஐக்கிய மாகாண குடியரசு நாட்டில் 16 வருஷங்களுக்கு முன் தானியப்பஞ்சம் உண்டாயிற்று. அயோவா மாகாணத்து ஜனங்கள் ஒன்றுகூடி இப்பஞ்சம் உண்டானதற்குக் காரணத்தை யறிந்து, விவசாயிகளுக்கு நானாவிதத்திலும் அறிவைப் புகட்ட ஏற்பாடுகள் பின்வருமாறு செய்தார்கள். ரயில்வே அதிகாரிகளின் அநுதாபத்தைப் பெற்று, விசேஷமாக ஒரு புகை வண்டித்தொடருக்கு ஏற்பாடுகள் செய்து, விவசாய விஷயங்களில் ஆராய்ச்சி பெற்ற அநேகரை ஊர் ஊராய்ப் போய் விவசாயிகளுக்கு போதித்து வர அனுப்பினார்கள். இதில் முக்கியமாய்ப் பிரயாணஞ் செய்து ஜனங்களுக்கு அறிவையும் ஊக்கத்தையும் கொடுத்து வந்தவர்கள், விவசாய கலாசாலை போதகர்கள்தான். இதன் பிறகு அநேக மாகாணங்களில் இம்மாதிரி அநேகமாய் ஏற்பாடுகள் செய்துவிட்டார்கள். இந்த புகைவண்டித் தொடர்களுக்கு 'விவஸாய நிரூபண புகைவண்டித் தொடர்கள்' (Agricultural Demonstration Trains) என்று பெயர். இவ்வண்டிகளில் பிரயாணம் செய்வது போதகர்களும் உபந்யாஸகர்களும்தான். இவர்கள் ஒவ்வொரு ஊர்களுக்கும்போய் ரயில்வே ஸ்டேஷனில் வண்டிகள் வழக்கம்போல் நிற்கிற சமயத்தில், முன்னமே இதையறிந்து அந்தந்த ஸ்டேஷனில் வந்து ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிற விவஸாயிகளுக்கும், பொதுஜனங்களுக்கும் வேண்டியவற்றைக் கற்பித்து அடுத்த ஊருக்குப் போவார்கள். இவ்விதம் அடிக்கடி செய்வதில் அப்போதைக்கப்போது உண்டாகிற கஷ்டங்களை விவஸாயிகள் இப்போதர்களிடம் தெரியப்படுத்தி அதற்குப் பரிகாரந் தேடிக்கொள்வதால், பணமுள்ளவர்கள் விவஸாயகலாசாலையில் சட்டப்படி 3 அல்லது 4 வருஷம் படிப்பதாலுண்டாகும் அறிவு இவர்களுக்குக் சொற்பகாலத்தில் மிகவும் நன்றாய் உண்டாகிவிடுகிறது. 1909-ம் வருஷத்தில் 'மெயின்' மாகாண சர்வ காலாசாலையின் வேண்டுகோளுக்கிணங்கி, சில நவீன ஏற்பாடுகளுடன் மெயின் மாகாணத்து ரயிலதிகாரிகள் "நவீனவிவஸாய விசேஷ புகைவண்டித்தொடர்," ஒன்று ஏற்படுத்தி 1500 மைல் தூரம் போய்வர ஏற்பாடுகள் செய்தார்கள். இதில் அநேகவிதமான விதைகளையும், பயிர்க் கன்றுகளையும், நவீனகருவிகளையும் அதிகமான உபந்யாசகர்களையும்அனுப்பினர்கள். ஒவ்வொரு ஸ்டேஷனிலும், விவசாயிகளும் பொது ஜனங்களும் வண்டிகளில் ஏறி எல்லாவற்றையும் கண்ணுற்று, தெரியாதவைகளை ஒவ்வொரு வண்டியிலுள்ள போதகர்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு உபந்யாஸங்களை கேட்டு அறிவு பெற்றுச் சென்றார்கள். பெரிய பட்டணங்களில் வண்டி நிறுத்தப்பட்டபொழுது விளக்கு வெளிச்ச பிரதி பிம்பங்களினால் ஒவ்வொரு பயிரின் தன்மையையும் விளக்கிக் காட்டப்பட்டது.

1910, 1911-ம் வருஷங்களில் மற்றத் தொழில்களையும் இம்மாதிரி ஜனங்களுக்கு கற்பிக்க ஏற்பாடுகள் செய்திருக்கின்றார்கள். ஆடு, மாடு, கோழி, பக்ஷி மற்றுமுள்ள அனேக ஜீவஜந்துக்களை வளர்ப்பதற்கும், அவைகளின் ஆகாரம் சுபாவங்கள் முதலானவைகளை நீடித்த காலம் கெடாமலிருக்கச்செய்

யவும் இம்மாதிரியாக அநேக விதங்களில் ஜனங்களுக்கும் அறிவு ஏற்படும் வழிகள் உபந்யசிக்கப்பட்டன. ஒவ்வொரு ஸ்டேஷனிலும் திரளான ஜனங்கள்வந்து பார்த்துவிட்டுப் போனதையும், வயது முதிர்ந்த விவஸாயிகள்கூட வந்து தங்களுக்கு தெரியாதவைகளை கேட்டுக்கொண்டு போனதையும் கவனித்து, இம்மாதிரி ஜனங்களுக்கு அறிவுண்டாக்க வேண்டிய தவசியமெனக்கண்டு மென்மேலும் புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

நம்நாட்டில் இவ்வழிகளை பின்பற்றுவது தற்காலத்தில் அசாத்தியம். 'யுனைடெட் ஸ்டேட்ஸ்' குடியரசாயிருப்பதால் பொதுஜனங்களுக்கு நன்மையைப் பயக்கக்கூடியவைகள் இலகுவாய் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் அந்நாட்டில் குடியேறியிருப்பவர்கள் முற்றிலும் நவீன மார்க்கங்களுக்கு ஆசை கொண்டிருப்பவர்கள். மேநாட்டு ஜனங்களுக்கே நவீன வழிகளை கண்டுபிடிப்பதும், அதனை காப்பாற்றுவதும் இயற்கை குணமாயிருக்கிறது. 'பூர்வ காலவழக்கம் தான் பிரதானம்' என்றிருப்பவர்கள் நாம் தான். அரசாக்ஷியார் ஜனசமூகத்தின் நன்மையைக் கருதி முற்பட்டபோதிலும் பொது ஜனங்கள், தங்கள் நன்மைக்கென்றே அதனை அறிந்து தீவிரமாய் கைப்பற்றினலன்னியில் யாது சீர்திருத்தமும் பயன்படா. அவ்விதம் பொது ஜனங்களுக்கு அறிவுண்டாவதற்குக் காரணமாயிருப்பது கல்வி யென்பது யாருமறிந்த விஷயமாயிருந்தபோதிலும், கல்விப் பயன்பெற்றே பின்னரே, இவ்விதமான சீர்திருத்தங்கள் கையாளவேண்டுமென்பது தகாத காரியம். இப்பொழுது அங்கங்கே நம் தேசத்தில், விவஸாய கலாசாலைகள் சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தென்னிந்தியாவிற்கு கோயம்பத்தூரிலும், வடதேசங்களுக்கு பூஸாவிலும் ஏற்படுத்தியிருக்கிருர்கள். இக்கலாசாலைகளில் சிற்சில பையன்கள் மாத்திரம் 2 அல்லது 4 வருஷம் படித்துவருகிருர்கள். இதில் அதிக பணச்செலவுடன் இக்கலாசாலைகள் நடத்தப்படுவதுடன், கிராமங்களுக்கும் பட்டணங்களுக்கும் சென்று, விவஸாயிகளை நேரில் கண்டு, அவர்களுக்கு அறிவும், ஊக்கமும் உண்டாகக்கூடிய அருமையான உபந்யாசங்கள் அன்புடன் செய்தாலன்னியில் தற்கால ஸ்திதி மாறுவதில்லை. நம் தென்னிந்தியாவில் எத்தனையோ ஜமீன்தார்கள், தனவான்களிருக்கிருர்கள். வேறு கைத்தொழில் யாதொன்றும் பிரபலமாயில்லாத மாகாணத்தில் முக்கியமாயிருக்கிற விவஸாயத்திலாவது, தங்கள் கவனத்தைச் செலுத்தி, விவஸாயத்தில் தேர்ச்சியுள்ள போதர்களை வரவழைத்து கிராமந்தோறும் சுற்றிவரச் செய்தால் எவ்வளவோ நன்மையுண்டாகும். விவஸாயம் விருத்தியடையும். நம்நாட்டில், பிழைக்க வழியின்றி அந்நிய நாட்டுக்குச் செல்லும் ஜனங்களுக்கு எவ்வளவோ உபகாரமாயிருக்கும். கல்யாணங்களிலும், மற்றுமுள்ள விசேஷங்களிலும் தங்கள் சொந்த கெட்ட நடவடிக்கைகளிலும் செலவிடுவதை நிறுத்தி மேற்குறிப்பிட்டவர்கள், இம்மாதிரியான நல் வழியில் செலவிட்டால் தேசம் உன்னத ஸ்திதிக்கு வருமென்று சொல்லத் தடையுமுண்டோ?—வைசிய மித்திரன்.

---

## KING KANISHKA'S STATUE.

### காநிஷ்கா மகா ராஜாவின் சிலை

ஸ்ரீ கிருஷ்ணபகவானது வாஸஸ்தலமாயிருந்ததும் முக்திநகர் ஏழனுள் ஒன்ருனதுமான வடமதுரைக் கருகில் "மாத்" என்ற ஒரு கிராமத்தில் ஸுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் இந்தியாவின் வடபாகத்தில் அரசாண்டு பௌத்த மதத்தையும் ஹிந்து மதத்தையும் செழிப்புற்று வளரும்படி காத்துவந்த காநிஷ்கா மஹாராஜாவின் உருவ விக்ரஹம் பூமியிலிருந்து தோண்டி யெடுக்கப்பட்டது. வடமதுரைக் காட்சிச் சாலைக்கு ஆனரரி க்யூரேடராக விருந்துவரும் ராய்பகதூர் பண்டிட் ராதாகிருஷ்ணவினல் இந்த மகா முக்கியமான சிலா விக்ரஹம் கண்டெடுக்கப்பட்டது. இந்த சிலா விக்ரஹத்தின் தலையும் கைகளும் அகப்பட வில்லையாயினும் மற்ற அவயவங்கள் செம்மையாகத் தெரிகின்றன. அச்சிலையின் மேலுள்ள நீண்ட சட்டையும் காலிலுள்ள பெரும் பூட்ஸும் அவ்வரசனை அன்னிய நாடனென்று சாட்டுகின்றன அவன் தரித்திருக்கும் ஆயுதங்களிலோ சித்திரம் வரைந்திருக்கிறது. அவ்வாயுதங்கள் ஒரு பட்டாக்கத்தியும் ஒரு கோடாலியுமாம். இவையே காநிஷ்காவின் முக்கிய ஆயுதங்கள். இவ்வரசனை யுத்தவீரனக உரு வார்த்திருப்பதால் சீனர் கூறிய கதையான இவ்வரசன் காஞேஜ் அரசன் முதலியோரை வென்று ஸதா ஸர்வகாலம் சண்டைபோட்டு வந்தானென்பதை வற்புறுத்துகிறது. இவன் எப்பொழுதும் இப்படி யுத்தவெறி பிடித்தே அலைந்ததால் இவனது பிரஜைகளே இவனைக் கொன்றுவிட்டார்களென்று வழங்கும் கதைக்கும் சிறிது ஆதாரம் உண்டாகிறது. இவன் புத்த மதத்தில் ஊக்கமுள்ளவனயும் சண்டையில் ஆவேசமுடையவனுயும் காணப்படுகிருன்.

# AGRICULTURE.
## விவஸாயம்.

### Soil for Cocoanut Cultivation.

தென்னை ஸாகுபடிக்கு பூமி.—வருஷத்தில் சில நாள் நீர்நிறைந்து வண்டல்படியும் ஆற்றுப் படுகை மண்ணே பரம சிலாக்கியம். அதற்கடுத்தபடி மணல் மிகுந்த வண்டல் நிலம். இதில் முக்கால்வாசி மண லிருந்தாலும் சிலாக்கியமே. இப்பேர்ப்பட்ட நிலங்களில் தென்னை சீக்கிரமாய் வளர்வதுடன் எருப் போட்டால் கைச்குமேல் பலன் கிடைக்கிறது. இதற்கடுத்தபடி கருவடி வண்டல்மண். இதில் கூழாங்கற்களும் பெருங்கற்களும் கலந்திருந்தாலு மிருக்கலாம். களிமண் நிலங்களும், கப்பியும் களி மண்ணும் கலந்த நிலங்களும், பிரயோஜனமேயில்லை.

### Varieties of Cholam.

சோள தினுஸுகள்.—பொதுவாக நாட்டுச்சோள வகைகளை ஆனி, ஆடி மாதங்களில் ஸாகுபடியாகும் கோடைச்சோளம் என்றும், ஆவணி, புரட்டாசி மாதங்களில் ஸாகுபடியாகும் பருவச்சோளம் என்றும், இரண்டு முக்கிய பிரிவுகளாகப் பிரிப்பார்கள். சில சோள தினுஸுகளின் பேரினல் அவைகள் ஸாகுபடி செய்யவேண்டிய காலம் குறிப்பிடப்படும். உதாரணமாக, மகரச்சோளம் என்பது தைமாதத்தில் விதைப்பாகும் தினுஸு.

கோடைச் சோளத்துக்கும் பருவச்சோளத்துக்கும் உள்ள முக்கியமான பேதம் என்னவெனில், கோடைச்சோளத்தில் தாளிலிருந்து அதிகமான கத்தை வேர்களும், ஆகாசவேர்களும் உண்டாயிருக்கும். இவைகள் பூமிக்குள் இறங்கி யிருப்பதின் காரணத்தால் தட்டையை நிலத்திலிருந்து பிடுங்குவது சிரமமாயிருக்கும்.

(2) தட்டை உயரமாகவும், தடிப்பாகவும், கடினமானதாகவும் இருக்கும். இக்காரணத்தால் அது மாட்டுத்தீனிக்கு அவ்வளவு உபயோகமானதல்ல.

(3) இதன் இலைகள் எளிதில் கீழேவிழுந்து விடக்கூடியதாக இருக்கும்.

(4) இந்தத்தினுஸில் தான்ய மாஸுல் குறைந்ததாயிருக்கும்.

(5) இதன் தான்யம் எளிதில் ஜீரணிக்கக்கூடியதல்ல.

(6) இது பூச்சிகளால் மிகவும் சேதமடையக்கூடியது.

(7) பூஞ்சணம் முதலிய நோய்கள் அவ்வளவாய் இதில் உண்டாகிறதில்லை.

### Salt.

உப்பு.—உப்பு இல்லாத நிலத்தில் பயிர் தழைத்துப்போனல் 20 ராத்தல் உப்புடன் 100-ராத்தல் பொட்லுப்பைக் கலந்து எருவாக்குவதுண்டு.

2. ஸமுத்திரத்துக்கு 30 மைல் தூரத்துக்குள் உப்பு எரு அவசியமில்லை. ஏனெனில் காற்றில் உப்பு வருகிறது.

3. கறையான்கொடுமைக்கு, முக்கியமாய், தென்னை மரத்துக்கு, வயதுக்குத்தக்கபடி (1 முதல் 6 ராத்தல்) உப்பு உதவுகிறது.

4. புழுப்பூச்சிகள் அதிகப்பட்ட நிலத்துக்கு உப்பிடுவது யுக்தம்.

5. முதல் மழையில் வளரும் புல் தீவனமாகும் போது உப்பு உணவில் கொடுப்பது அவசியம். அப்போது மண்ணில் இருந்த உப்பு கரைந்துபோயிருக்கும்.

6. புல்போரில் உப்புக்கலந்து இருந்தால் அது சூடுகொள்ளாது. மடங்கியும் போகாது.

7. உப்பு ரத்தத்தை இளகலாக வைத்து ஜீரணத்தை உண்டாக்கும்.

8. அழுகிப்போம் மீன் முதலியவைகளைக் கெடாமல் பாதுகாக்கும்—தென்னிந்தியா விவஸாயம்.

### Paddy Cultivation in Madras.

சென்னையில் நெல் ஸாகுபடி.—தஞ்சாவூர், கோதாவரி, கிருஷ்ணா, மலையாளம், கன்னடம் இந்த ஜில்லாக்களில் நெல்பயிர் விசேஷமாயுண்டாகிறது. இந்த ஜில்லாக்களில் நிலமும் வளப்பமாயிருப்பதோடு பாசனவஸதிகளுமிருக்கிறன. தவிர, மழையும் குறைவில்லாமல் பெய்கிறது. சென்ற சில வருஷங்களாக இந்த ராஜதானியில் முன்னைவிட இப்போது அதிக விஸ்தீரணமுள்ள பூமியில் நெற்பயிருண்டாக்கப்படுகிறது. இந்த ராஜதானியிலுள்ள உழவு நிலத்தில் ஐந்திலொருபாகத்தில் நெல் விளைகிறதென்று மதிப்பிட்டுச் சொல்லலாம். கிருஷ்ணாஜில்லாவில் நாலிலொருபங்கு பூமியில் நெல் விதைக்கப்படுகிறது. இந்த நெல் இருவகைப்

படும். வெள்ளை நெல்லானது நாற்றுப்பாவி நடப்படுகிறது. கறுப்பு நெல் விதைக்கப்பட்டு மழையில் விளைகிறது. இந்தக்கறுப்பு நெல் அரிசி விசேஷமாக யாழ்ப்பாணத்துக்கு ஏற்றுமதியாகிறது. குண்டூர் ஜில்லாவில் தெனாலி யென்ற இடம் மிகவும் பூஸாரமுள்ளது. இந்த ராஜதானியிலேயே தெனாலியைப் போல் நில வளப்பமும் நெல் விளைச்சலுமுடைய இடமில்லை. பெல்லாரி கர்நூல் ஜில்லாக்களில் மழை குறைவாதலால் விளைச்சலும் குறைவு. மதுரை முதலிய தென்ஜில்லாக்களில் பாய்ச்சலையுடைய நன்செய்களில் நெற்பயிரே அதிகம். தென்கன்னடம் ஜில்லாவில் நிலவளப்பமும், மழை மிகுதியும், ஆற்றுக்காலுமிருப்பதால், ஜெனவரி முதல் ஏப்பிரல், மேமுதல் அக்டோபர், அக்டோபர் முதல் ஜெனவரியாகிய மூன்று பருவங்களிலும் முப்போகம் நெல் விளைகிறது. சென்னை ராஜதானியின் மற்றப்பாகங்களில் இவ்விதம் ஒழுங்காகவும் வரிசைக் கிரமமாகவும் நெல் விளைவதில்லை. நிலமும் நன்கு உரமிடப்படுவதால் விளைச்சலும் குறைவதில்லை.

**Human Excreta as Manure.**

மலமூத்திராதிகளை எருவாக உபயோகித்தல்.—நமது நாட்டில் சில பழைய வழக்கங்களும், அபிப்பிராயங்களும் நமதிடையில் வேரூன்றி வெகு உபத்திரவப்படுத்தி வருகின்றன. உதாரணமாக, மலமூத்ராதிகளைப் பற்றிப் பேச்சிலாவது, எழுத்திலாவது பிரஸ்தாபிப்பதே தப்பென்று நாமெண்ணியும் நடந்தும் வருவதாம். இப்பொழுதுதான் இங்கிலீஷில் சிலர் அபூர்வமாய் அவ்விஷயத்தைக் குறித்துப் பேசி வருகிறார்கள். ஆனால் மகாஜனங்களுடைய க்ஷேமத்தில் இது எவ்வளவு முக்கிய அம்சமென்பது யாருக்கும் எளிதில் விளங்கும். சமீபத்தில் ஒரு நண்பர் இதைக்குறித்து விதயா விஹாரிணியில் பின் வருமாறு எழுதுகிறார்.—

"முனிசிபாலிட்டிகளும் யூனியன்களும் 'கொல்லைக்கார' ரென்னும் தோட்டிகளைக் கொண்டு மல மூத்திராதிகளைத் தினம் சேகரித்துப் பட்டணங்களுக்கு அருகிலுள்ள ஓர் குழியிலோ, கட்டிடத்திலோ போட்டுவிடுகிறார்கள். அங்கேயே இந்தக் 'குப்பைகள்' சேர்ந்து கிடக்கின்றன. வருஷ மொருமுறை இவைகளை ஏலம்போட்டு ஒழிக்கிறார்கள். இப்படிச் செய்வதில் பட்டணவாசிகளுக்குப் பல வியாதிகள் இம்மூலமா யுண்டாகின்றன. மல மூத்திராதிகள் எருவாகலா மென்பது இப்பொழுது நம்மவர் அனேகருக்குத் தெரியுமாதலால், அவற்றை எருவாக்கிக் கொடுக்கவும், அவற்றால் இப்பொழுதுண்டாகிறபடி துர்வாசனை, வியாதிபீடைகள் இவற்றிற் கிடமில்லாமலாக்கவும் ஏதாவது ஏற்பாடு ஆகவேண்டியது வெகு அவசியம்.

ஜப்பான், சீனா முதலிய இடங்களில் மல மூத்திராதிகளைச் சர்மான்னியமாய் ஜனங்கள் கையாண்டு வருவதன்றி, அவை நஷ்டமாகாமலும் பார்த்துக் கொள்ளுகிறார்கள். இவ்விடத்திலோ, இவ்விஷயத்தில் ஜனங்களுக்கு ஏதோ தப்பெண்ணத்தினால் அருவையுண்டாகிறது. ஆனால் அது விவேகம் முதிருமளவிற்கு மாறிப்போகும். இப்படி விவேகம் முதிருவதற்கு விவசாய டிபார்ட்மெண்டார் முயலவேண்டும். நாளதுவரை மதிராஸில் அவர்கள் ஒன்றும் செய்யவில்லை.

பம்பாயில் விவசாய டிபார்ட்மெண்டார் முனிசிபாலிட்டிகளை உதவிசேர்த்துக்கொண்டு பலவகையாகப் பரீக்ஷைகாட்டி, ஜனங்களை வசப்படுத்தி வருகிறார்கள். கரும்பு முதலிய தோட்டசாகுபடிகளி லாகட்டும், பருத்தி முதலிய காட்டு சாகுபடிகளி லாகட்டும் மாட்டெருவைக்காட்டிலும், 'மனிதரெரு' இரட்டைப் பலன் கொடுக்கிறதென்றும், அதன் சாரம் பூமியில் தங்கிப் பல வருஷங்களுக்கு விளைச்ச லதிகரிக்கச் செய்கிறதென்றும், பரீக்ஷையினால் தெரியவருகிறது. மராட்டிய தேசத்தில் ரயித்துகளுக்கு இவ்விஷயத்தில் அனுபவம் முற்றி யிருப்பதால், அவர்கள் இதற்குப் 'போன் எரு' வென்கிறார்கள்.

சமீபத்தில் கோயமுத்தூர் அக்ரிகல்சரல் காலேஜில் மல மூத்திரங்களை எருவாக்கிப் பதப்படுத்த ஏதோ பரீக்ஷை நடந்ததாம். அதுமட்டும் போதாது. மதிராசு ராஜதானியிலுள்ள முனிசிபாலிட்டிகள், லோகல் போர்டுகள் முதலிய துரைத்தன அங்கங்களெல்லாம் சேர்ந்து, அக்கரையுடன் முயன்று, மல மூத்திராதிகளைச் சேகரிப்பது மட்டுமே யன்றி, அவற்றை எருவாகப் பக்குவப்படுத்தவும் வகைதேடிப் பரீக்ஷைகாட்டி, குடித்தனக்காரரும் சம்மதிக்கும்படி செய்தால், பட்டணங்களில் வியாதி பீடையும் குறையும், விஷமும் அமிருதமாகும்."

# COMMERCE.
## வியாபாரம்.

### Business Enterprise in India.

இந்தியாவில் வியாபார ஊக்கம்.—இந்தியாவில் சென்ற ஜூன்மீத்தில் அடியிற்கண்ட விவரப்படி 15 கம்பெனிகள் ரிஜிஸ்தர் செய்யப்பட்டன.

| | முதல் ரூ |
|---|---|
| 6 பாங்கிகளும் லேவா தேவி கம்பெனிகளும் | ... 8,60,000 |
| 3 இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் | ... 60,000 |
| 1 அச்சுவேலை, பிரசுரஞ் செய்யும் வேலை, கம்பெனி | ... 1,18,000 |
| 1 தேயிலை கம்பெனி | ... 3,00,000 |
| 1 நிலக்கரி சுரங்கம் கம்பெனி | ... 2,50,000 |
| 3 வியாபாரக்கம்பெனிகள் (மேற் சொன்னவைகளைத் தவிர) | ... 5,60,000 |
| 15 ஆகமொத்தம் ரு. | 21,48,000 |

### The Trade of India.

இந்தியாவின் வியாபாரம்.—கம்மர்ஷியல் இன்டெலிஜன்ஸ் டைரெக்டர் ஜனரலாகிய மிஸ்டர் நோயல் பேட்டன் வெளிப்படுத்திய ரிபோர்ட்டிலிருந்து 1911—12ஷூத்தில் இந்தியா தேசத்துக்குள் இறக்குமதியான பொருள்களின் பெறுமானம் 129 கோடி 39 லக்ஷத்திலிருந்து, 138 கோடி 57 லக்ஷத்துக்கு அதிகரித்த தென்றும், அதேமாதிரி இந்த தேசத்திலிருந்து ஏற்றுமதியான சரக்குகளின் பெறுமானம் 209 கோடி 88 லக்ஷத்திலிருந்து 227 கோடி $74\frac{1}{2}$-லக்ஷத்துக்கு அதிகரித்ததென்றும் தெரிகிறது. ஆக மொத்தம் 339 கோடி 24 லக்ஷத்திலிருந்து 366 கோடி $31\frac{1}{2}$ லக்ஷத்துக்கு அதிகரித்தது; அதாவது முன் வருஷத்தை விட நூற்றுக்கு 8 வீதம் அதிகமாகிறது.

இதர தேசங்களின் வியாபாரம் பின் வருமாறு. இங்கிலாந்தின் வியாபாரத்தின் பெறுமானம் 1702 கோடி 26 லக்ஷம், அதாவது, மூன்ருவது வருஷத்தை விட சென்ற வருஷத்தில் நூற்றுக்கு 2·36 வீதம் ஜாஸ்தி. அமெரிக்கா ஐக்கியமாசாணங்களின் வியாபாரத்தின் மொத்தம் 1122 கோடி 33 லக்ஷம். அதாவது, முந்திய வருஷத்தை விட நூற்றுக்கு 5·9 வீதம் அதிகம். ஜெர்மெனியின் மொத்த வியாபாரம் 1301 கோடி 43 லக்ஷம். அதாவது முந்திய வருஷத்தைவிட நூற்றுக்கு 7·6 ஜாஸ்தி. ஆஸ்ட்ரியா ஹங்கெரியின் மொத்தம் 346 கோடி $48\frac{1}{2}$ லக்ஷம். அதாவது 17 கோடி ஒரு லக்ஷம் ஜாஸ்தி. ப்ரான்ஸ் தேசத்தின் மொத்த வியாபாரம் 859 கோடி $96\frac{1}{2}$ லக்ஷம். அதாவது 55 கோடி $54\frac{1}{2}$ லக்ஷம் ஜாஸ்தி. பெல்ஜியத்தின் வியாபாரம் 429 கோடி 69 லக்ஷத்திலிருந்து 451 கோடி $54\frac{1}{2}$ லக்ஷமாயிற்று. ஆகவே இந்தியாவை மற்ற தேசங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அதன் சென்றவருஷத்து வியாபாரம் முந்திய வருஷத்து வியாபாரத்தை விட நூற்றுக்கு எட்டு வீதம் அதிகரித்ததை சௌப்பென்று சொல்ல முடியாது.

### The Indian Companies Bill.

இந்தியன் கம்பேனி மசோதா.—இந்தியாவில் கம்பெனிகள் இப்போது அதிகமாய்விட்டன. 1885-86-ம் வருஷத்தில் 757-கம்பெனிகள் 21-கோடி ரூபாய் மூலதனத்துடன் வேலை செய்தன. பிறகு 1910-11-ம் வருஷத்தில் இந்த கம்பெனிகள் 2251 ஆக அதிகமாய், அவைகளின் மூலதனமும் 64-கோடி ரூபாயாக அதிகரித்தது. ஆகையால் இந்தக் கம்பெனிகள் சரியாய் வேலை செய்து பங்குக்காரர்களின் உரிமைகளுக்கு மோசமில்லாமல் அவைகளைக் காக்க வேண்டியது அவசியம். இதற்காக இந்தியா செக்ரிடரியின் அனுமதியின்பேரில் ராஜப்பிரதிநிதி சட்டசபையில் ஒரு பில் அல்லது மசோதாவைக் கொண்டு வந்திருக்கிருர்கள். ஆனரபில் மிஸ்டர் கிளார்க் இந்த மசோதாவைப் பற்றிப் பேசுகையில், இங்கிலாந்திலுள்ள சட்டத்தின் நிபந்தனைகளைப் போலவே இந்த மசோதாவின் நிபந்தனைகள் இருக்கின்றனவென்றும், அதைவிட இரண்டொரு அம்சத்தில் இந்திய மசோதாமுந்தியிருக்கிறதென்றும், சொன்னர். முதலாவது, ஒரு கம்பெனியின் விஷயங்களைப்பற்றி கவர்ன்மெண்ட் ரெஜிஸ்டிரார் எதையேனும் தெரிந்து கொள்ள விரும்பி அது தெரியாத பட்சத்திலும், அந்தக் கம்பெனி சரியாய் நடக்கவில்லை யென்று தெரிந்தால் அப்போதும், அதை கவர்ன்மெண்டுக்கு அவர் எழுத்து மூலமாய்த் தெரிவிக்க, கவர்ன்மெண்ட் ஒரு இன்ஸ்பெக்டரை நியமித்து அதற்குத் தகுந்த நிவர்த்தியைத் தேடலாம். மற்ருெரு விஷயம்

என்னவென்ருல்,கம்பெனி ஆடிட்டரை நியமிப்பது. ஆடிட்டருடைய யோக்கியதை, சம்பளம், வெகுமதி முதலிய அம்சங்கள் இங்கிலீஷ் சட்டத்தில் தெளிவாய்க் காணப்பட்டிருக்கின்றன. ஆனல் இந்திய மசோதாவில் ஆடிட்டருடைய யோக்கியதை மட்டும் தெளிவாய்க் குறிக்கப்பட்டிருக்கின்றது. ஆட்டிடர் யோக்கியதையுள்ளவரென்று அவர் கவர்ன்மெண்டிடமிருந்து சர்டிபிகேட் பெற்றிருக்கவேண்டும்.

# INDUSTRY.

## கைத்தொழில்.

### Shipping Building in Calcutta.

கல்கத்தாவில் கப்பல் கட்டும் தொழில்.—கல்கத்தாவில் கப்பல் கட்டும் தொழில் ஆரம்பமாகி விர்த்தி யடையுமென்று சொல்லுகிருர்கள். இத்தனை நாளாக இத்தொழில் செய்வதில் இந்தியத் தச்சர்கள் தங்களுடைய ஸாமர்த்தியம் காட்டி வந்தாலும், தற்காலத்தில் எஃகு வெட்டி எடுத்தலும், இரும்பு வேலை செய்தலும், இந்தியாவில் ஆரம்பமாய்விட்டதால், இனி கல்கத்தாவில் முக்கியத்தொழில் கப்பல் கட்டுவதாயிருக்குமென்று எண்ணுகிருர்கள்.

### Machine Manufacture and Handicrafts.

கைத்தொழிலுக்கும், யந்திரத்தாலாகும் வேலைகளுக்கும் வித்தியாஸம்:—டாக்டர் ஏ. கே. குமரரசாமி என்பவர் லண்டன் நகரத்தில் கைத்தொழிலுக்கும் யந்திரத்தாலாகும் வேலைக்குமுள்ள வித்தியாஸத்தை நன்ருய் எடுத்துக் காட்டினர். கைத்தொழில் என்பது யந்திரத்தாலாவதல்ல. யந்திர விசையினலாகும் வேலைக்கும் கைத்தொழில் வேலைக்கும் வித்தியாஸமுண்டு. இதற்குக் காரணமாக ஜமக்காளம் செய்வதையெடுத்துக் கொள்வோம். முந்தி யெல்லாம் இரு கைகளினலேயும் புனைந்துகொண்டிருந்தோம்.இப்போது வேண்டுமென்ருல் கிராமாந்திரங்களுக்குப் போனல் கோரைப்பாய்கள் பின்னப்பட்டு வருவதையும் தென்னை மட்டைகளைக் காயவைத்துக் கீற்று முடைவதையும் நாம் பார்க்கலாம். அதுதான் கைத்தொழில் என்பது. முதலில் சொன்ன ஜமக்காளம் பின்னுவதோ கைத்தொழிலென்று சொல்லக்கூடுமானலும், தற்போது அது செய்யப்படுகிற மாதிரியில் அது கைத்தொழில் வேலையாகமாட்டாது. எவ்வாறென்ருல், விசையினல் இயக்கக்கூடிய நூனழிகளையும், யந்திரக் கருவிகளோடு அமைக்கக் கூடிய விசை நாடாத் தறிகளையும் கொண்ட தொழிற்சாலைகளில் நடக்கும் வேலையானது கைத்தொழிலாகமாட்டாது. மனுஷ்யன், யந்திரங்கள் செய்யும் வேலையை மேற்பார்வை பார்க்கிருனே யல்லாது தன் கையினல் அவன் யாதொரு வேலையையுஞ் செய்யவில்லை. மேலும் அணுவளவுகூட யந்திரங்களின் உதவியில்லாமல் தன் கையினலேயே முழு வேலையையும் செய்யக்கூடிய தொழிலாளியை இப்போது காண்பதரிது, ஒவ்வொரு குடும்பத்திலுமுள்ளவர்கள் உலோக வேலை, தச்சுவேலை, நெசவு முதலியனவற்றை, பிரதி தினம் தவருது தம் தினஸரி வேலைகளுள் இவைகளையுஞ் சேர்த்துச் செய்து வந்தார்கள். காலம் வர வர யந்திரவிசைகளும், கருவிகளும் பெருகலாயின. ஜனங்கள் அதிக கிராக்கி யில்லாமல் மலிவாயிருக்கக்கூடிய சரக்குகளை விரும்ப ஆரம்பித்தார்கள். கையினலே ஒரு வேலையைச் செய்து முடிக்க ஒருவாரமாவதை யந்திரங்களினலே ஒரு தினத்திலாவது அரைதினத்திலாவது செய்துமுடித்துவிட முடியும். இது காரணமாகத்தான் யந்திர விருத்தியும் வியாபார விருத்தியும் முன்னிடலாயின. எனினும், கைத்தொழிலினற் செய்யப்பட்ட வேலைக்கும் யந்திர விசையினற் செய்யப்பட்ட வேலைக்கும் வெகுவாய் தார தம்மியமுண்டு. இப்போதும் மத்திய ஆசியாவிலுள்ளவர்கள் நெய்யும் ஜமக்காளங்களைப்போல தொழிற்சாலைகளில் செய்யப்படுவதாய்த் தெரியவில்லை. கைத்தொழிலினலே செய்யப்படும் சிற்பவேலைகள் யந்திரத்தினலாகா, கிராஹ்ய ஸம்பந்தமான வேலைகளுக்கு யந்திரங்களைக் கொண்டுவர வேண்டுமென்ருலும் அதிக விலையும் கொடுக்கவேண்டி வருகிறது. கொடுத்தாலுங் கூட, யந்திரங்களிலிருந்து செய்தெடுக்கப்படும் சரக்குகள் கையினற் செய்யப்படும் வைகளைப்போல 'கச்சித' மாயிருக்கமாட்டா. உலகத்தில் எதுவேண்டுமென்ருலும் யந்திரக்கருவிகளினல் நாம் ஸாதித்துக் கொள்ள முடியுமெனினும், இல்லத் தொழிலுக்கு இது பெரிதும் குந்தகமா யிருக்கின்றதை யாவரும் உணருவரென்பது நிச்சயம்-என்ருர்.

# ECONOMICS.

# பொருளாதாரம்.

## The American Millionaire.

அமெரிக்காவிலுள்ள கோடீசுவரர்கள்.—அமெரிக்கா தேசத்தில் அநேக கோடீசுவரர்கள் இருக்கிறார்களென்பதும், அவர்களுக்கு அளவற்ற ஸொத்து இருக்கிறதென்பதும் எல்லாருக்கும் தெரிந்த ஸமாசாரம். இவர்களில் பத்துபேர்கள்மட்டும் சேர்ந்தால் கொஞ்சகாலத்தில் தேசத்திலுள்ள எல்லா ரெயில் பாதைகளையும், பெரிய ஏரிகளில் ஓடும் கப்பல்களையும், அட்லான்டிக் ஸமுத்திரத்தில் ஓடும் சில கப்பல்களையும், தந்தி, டெலிபோன் முதலியவைகளையும், வாங்கிவிட முடியும். இவை மாத்திரமல்ல. அநேகமாய் பூலோகத்திலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களையும், எண்ணெய் ஆட்டும் தொழிலையும், சர்க்கரை சுத்திசெய்கிற தொழிலையும், ஆளிவிதைத்தைலம் உண்டாக்கும் தொழிலையும், இன்னும் இவைபோன்றவைகளையும், அவர்கள் மேன்பார்வையில் நடந்துவரும்படி செய்துவிடலாம். மேலே சொன்ன மனிதர்கள் ஒருங்குகூடிதேசத்திலுள்ளஎல்லா பெரிய பாங்கிகளையும் தங்கள் ஆட்சிக்குள்ளாக்கி யிருக்கிறார்கள். தவிர, ஐரோப்பாவிலுள்ள எல்லா விதமான பெரிய பாங்கிகளிலும் இவர்களுக்கு ஸம்பந்தம் உண்டு. அவர்கள் கவர்ன்மெண்டார்களுக்கும் கடன் கொடுக்க தயாராயிருக்கிறார்கள்.

இவ்வளவு ஸம்பத்துக்கெல்லாம் முக்கிய காரணங்கள் நான்கே என்று கோடீசுவரப் பிரபுவான ஆண்ட்ரூ கார்னிஜீஎன்பவர் சொல்லுகிறார்: அவையாவன, (1) ஒவ்வொருவனும் தன்னயத்தையே கவனித்தல். (2) ஸம்பாதித்த ஸொத்தை தன்னதாகவே யெண்ணியிருத்தல். (3) தனஸம்பத்து தானாகவே பெருகுதல். (4) போட்டியினால் பிறரை வெல்லுதல்.

மனுஷ்ய ஜாதியின் ஸ்திதியை நன்கு படுத்துவது இந்நான்கே என்றார். ஆனால் மேல்சொன்ன காரணங்களால் எல்லாரும் பணக்காரர்களாகிறதில்லை. ஏதோ கொஞ்சம் பேர்கள்தான் ஐசுவரியவான்களாகிறார்கள். இப்பேர்ப்பட்ட ஐசுவரியத்தை எந்தவிதமாய் விநியோகஞ் செய்யவேண்டுமென்றால் "ஏழை மனிதர்களினுடைய க்ஷேமத்திற்காகவே" என்றார் கார்னிஜிப்பிரபு.

## Division of Labour.

வேலையைப் பங்கிட்டுச் செய்தல்.—இப்போது ஐரோப்பா அமெரிக்கா முதலிய தேசங்களில் எங்கே பார்த்தாலும் ஒரு அபிப்ராயம் இருந்துவருகிறது. அதாவது, தொழில்சாலைகளில் ஸாமான்கள் செய்வதில் ஒவ்வொருவன் ஒரு பாகத்தைச்செய்து மொத்தத்தில் ஸாமான் ஆகும்பட்சத்தில், அது மலிவாயும் லாபகரமாயும் முடிகிறது என்பது. இதுபோலவேதான் ஒருவன் தச்சுவேலைமாத்திரம் செய்வதும், இன்னுமொருவன் கொல்லத்துவேலை செய்வதும், மற்றொருவன் கசாப்புவேலை செய்வதும், இன்னும் இதைப்போன்ற ஒவ்வொருவேலையையும் ஒவ்வொருவரே செய்வதாம். இப்படி ஒவ்வொருவரும் ஒரு தினுஸுவேலையைச் செய்வதால் காரியம் ஸுலபமாயும் மலிவாயும் லாபகரமாயும் முடிகிறதென்பதில் ஸந்தேகமில்லை. ஆனால் இப்படிச்செய்வதில் சில கெடுதல்களும் இருக்கின்றன. சீமையில் நடந்துவரும் ஒவ்வொரு தொழிலையும் கவனித்தால், ஒவ்வொரு தொழிலிலும் ஒவ்வொரு பாகத்தில் வேலை செய்வதில் கைதேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். உதாரணமாக, மரவேலை செய்யும் தொழிலில், கடைசற்காரர்களென்றும், இழைப்புளிக்காரர்களென்றும்'கோர்ப்புக்காரர்களென்றும், ஒட்டுவேலைக்காரர்களென்றும், இந்தமாதிரி ஒரே தொழிலில் ஒவ்வொரு பாகத்தில் மாத்திரம் திறமையுடையவர்களிருக்கிறார்கள். இதைப்பற்றி ப்ரோபெஸர் காமன்ஸ் என்பவர் பின்வருமாறு சொல்லுகிறார்:—ஒரு கசாப்புத் தொழிற்சாலையில், முப்பது தினுஸான வேலைகள் இருக்கின்றன. அந்த வேலைகளுக்கு இருபதுவகை சம்பளங்களிருக்கின்றன. ஒரு மனிதன் முதுகு எலும்பை மாத்திரம், வெட்டுகிறான். மற்றொருவன் நாஜூக்கான பாகங்களிலுள்ள தோல்களைமாத்திரம் உரித்தெடுக்கிறான். இன்னொருவன் வேலை ஸுலபமாய் செய்யக்கூடிய இடத்தில் வெட்டுகிறான்; இந்தமாதிரியாக தலைமுதல் வால்வரையில் தோல் எடுப்பதில் மாத்திரம் ஒன்பது வகையான தொழிலாளிகள் இருக்கிறார்கள். இதேமாதிரியாக எல்லாத்தொழிலிலும் ஒவ்வொரு பாகத்தில் மாத்திரம் நிபுணரானவர்களிருக்கிறார்கள். இதனால் தொழிலாளிகள் தங்கள் தொழிலில் வேறே எந்த பாகத்தையும் செய்ய முடியாதவர்களாய் விடுகிறார்கள். மேலும் ஒரே வேலையைச் செய்து வருவதினால் அவர்களுடைய புத்தியும் மழுங்கிவிடுகிறது. புத்தி மழுங்கவே வேலையில் ரஸம் குறைகிறது. ஆகவே தங்களை உத்ஸாகப்படுத்திக் கொள்ள குடிக்கவும் சுருட்டுப்பிடிக்கவும் போகிறார்கள்.

# CO-OPERATION.
## கோவாபரேஷன்.

### Co-operative and Other Associations.

கூட்டுத் தொழில் சங்கங்கங்களும், மற்ற சங்கங்களும்.—கூட்டுத்தொழில் சங்கத்தில் மத்திய தரகரே கிடையாது; தங்கள் விளைபொருள்களையோ உழைப்பையோ அல்லது பணத்தையோ ஒன்று சேர்த்து உபயோகிப்பவர்களே இந்தக் காரிய முழுவதையும் நிர்வகிக்கிறவர்களாயும், அதன் லாபத்தை யெல்லாம் பங்காசரமாய்ப் பெறுகிறவர்களாயும் இருக்கிறார்கள். கிராமச் சங்கத்தைப்போன்ற ஒரு சிறு சங்கத்திலே சம்பளம் பெற்று வேலைசெய்யும் ஏஜெண்டுகளென்பதே கிடையாது; இந்தக் காரியத்தை நடத்துவதற்கு அவசியமான வேலை யெல்லாம் இலவசமாகவே செய்யப்படுகிறது. இப்படிப்பட்ட சங்கத்தில் இந்த தேசத்தில் நடக்கும் காரியம் பணத்தைக் கடன் வாங்குவதும் கடன் கொடுப்பதுமாகவே இருப்பதால் இதில் காரியம் நடத்துவதற்காகப் பிடிக்கும் செலவு அநேகமாய்ப் பூஜ்யமென்று ஸ்பஷ்டமாகத் தோற்றுகிறது.

### Borrowing on the Co-operative System.

கூட்டுத் தொழில் முறையில் கடன் வாங்குதல்.—கூட்டுத்தொழில் முறையில் கடன் வாங்குவதனால் உண்டாகும் அனுபவ சித்தமான அனுகூலங்கள் எவையென்றால்,—(1) வட்டி குறைவதும், (2) சிக்கனம் விருத்தியாகும்படி உற்சாகப்படுத்துவதுமேயாம். கூட்டுத்தொழில் முறைப்படியான கடனின் முக்கியமான ஓர் அம்சம் விவஸாய ஸம்பந்தமான கடனாகும்; விவஸாய ஸம்பந்தமான கடனென்பது விவஸாயக்காரர்களுக்கு ஸொந்தமான நிலம் அல்லது ஸொத்தின்பேரில் பணம் கடன் கொடுப்பதென்று அர்த்தமாகும்; இப்படிக் கடன் கொடுப்பதனால் கடும் வட்டி வாங்கி ஜீவிக்கவேண்டிய ஸாவ்கார் இந்த விவகாரத்தில் இல்லையாகையால், கடன் கொடுக்கும் சங்கத்தார் செலுத்தவேண்டிய தெல்லாம் பணத்தை உபயோகிப்பதற்காகக் கொடுக்கும் தொகையேயாகும்.

கூட்டுத்தொழில் முறையில் கடன் வாங்குவதனாலுண்டாகும் பிரயோசனம் இது மாத்திரமே அல்ல. அநீதவட்டி என்பது இருபக்கத்திலும் கூர்மையாயுள்ள ஒருவாளுக்கு ஒப்பாகும்; ஏனென்றால், கடன் வாங்குபவருடைய ஈடு தகுதியானதாயிருந்தாலும் இராவிட்டாலும் அவரைக் கெடுத்து விடுவதே அதன் ஸ்வபாவமாயிருக்கிறது. அவருடைய ஈடு பீடானதாயிருக்கிற பட்சத்திலே, அப்படிப்பட்ட அதர்ம வட்டி கொடுக்கிறதனால் அவர் மூழ்கிப் போகிறார்; அவருடைய ஈடு தகுதியானதாயிருக்கிற பட்சத்திலே, அவருடைய ஸொத்து முழுமையும் முழுகிப் போகிறவரையில் கடன் கொடுத்தவர் பொறுமையாய்க் காத்துக்கொண்டிருக்கிறார். பணத்தை யாரிடத்திலிருந்து திரும்பப் பெறுவது ஸந்தேகமாயிருக்கிறதோ அவரை மாத்திரமே காலம் தவறாமல் பணம் செலுத்தி வரும்படி அதர்மவட்டி வாங்குகிறவர் கட்டாயப்படுத்துவார்; அப்படிப்பட்ட ஸந்தேகம் எதுவும் இராதபட்சத்திலே, அவர் தவணை கடந்து போகும் வரையில் கடன்வாங்கினவர் பணம் செலுத்தாமலே இருக்கும்படி பார்த்துக்கொள்வார். ஆனால், கடன் கொடுப்பதற்கான ஒரு ஐக்கிய நாணயக் கிராம சங்கத்தாரோ ஸகல விஷயங்களிலும் காலம் தவறாமல் பணம் செலுத்தி வரும்படி கட்டாயப்படுத்துகிறார்கள். இவ்விஷயத்தில் அவர்கள் தங்களாலான முயற்சிகளெல்லாம் செய்கிறார்கள்; ஆகவே, காலம் தவறாமல் பணம் செலுத்திவரும் வழக்கத்தை யுடையவர்களும் மெதுவாய்ப் பணம் செலுத்தும் வழக்கத்தையுடைவர்களும் தங்களுடைய கடன்களை சீக்கிரத்தில் திருப்பிச் செலுத்தி, கடனிலிருந்து மீளும்படி அவ்விருவர்களையும் ஒரேமாதிரி கட்டாயப்படுத்துகிறார்கள். இன்னொரு பிரயோசனமும் உண்டாகிறது. அதர்ம வட்டி வாங்குகிறவர் தாங்கள் கொடுத்த கடன் தொகைகளை நிஷ்கரிஷையான தவணைகளாக வாங்குவார்களேயொழிய மற்றப்படி வாங்கிக்கொள்ளமாட்டார்கள்; கடன் கொடுக்கும் ஐக்கிய நாணய சங்கத்தாரோ, கடன் கொடுத்த தொகையை சில்லறை சில்லறையாகத் திருப்பிச் செலுத்தினாலும் அதை வாங்கிக்கொண்டு, அதற்கு எதிர்வட்டி கழித்துக்கொடுக்கிறார்கள்; ஆகவே, ஸ்வல்ப விவஸாயிகள் தாங்கள் ஏதாவது தனித்தனியாய், ரூபாய் மிகுத்தக் கூடியபோதெல்லாம் அதைச் செலுத்தி, அதி தயாளுவான ஒரு ஸாவ்காரிடத்தில் தாங்கள் எவ்வளவு காலத்துக்குள் பணம் திருப்பிக் கொடுத்துக் கடனைத் தீர்த்துக்கொள்ள முடியுமோ, அதைவிட இன்னும் ஸ்வல்ப காலத்திற்குள்ளாகவே தங்களுடைய கணக்கைத் தீர்த்துக்கொள்ளலாம்.

# BANKING.
## பாங்கி வியாபாரம்.

### The Largest Banking Account in the World.

பூலோகத்தில் பெரிதான பாங்கிக் கணக்கு.— இப்போது எல்லா தேசங்களிலும் அநேகவிதமான வரிகள் வஸூல் செய்து வருகிறார்கள். இப்படி வஸூலாகும் பணங்களை ஜனங்களுடைய யோக க்ஷேமங்களுக்காக அநேக விதங்களில் செலவு செய்கிறார்கள். இந்த வஸூல் பணமும் செலவுப்பணமும் என்ன விதமாய், யார்கணக்கில், எப்படி வைக்கப்பட்டும், செலவிடப்பட்டும், வருகிறதென்று அநேகர் தெரிந்துகொள்ள விரும்பக்கூடும். உதாரணமாக இங்கிலாந்து தேசத்தை எடுத்துக்கொள்வோம்.

இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் தங்களுடைய வரவு செலவுக் கணக்கை ஒரு பாங்கியில் செய்து வருகிறார்கள். இந்தக் கணக்கானது 'பாங்க் ஆப் இங்லாண்ட்' என்னும் பாங்கியில் வைக்கப்பட்டிருக்கிறது. கணக்குகள், "லார்ட்ஸ் ஆப் தி ட்ரெஷரி" என்னும் கஜானா அதிகாரிகள் பேரில் இருக்கின்றன. அவர்களில் இரண்டுபேர் சேர்ந்து செக்குகளில் கையெழுத்துபோட்டால்தான் பாங்கிக்காரர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள். இந்த பூலோகத்திலே பாங்கிக் கணக்குகளில் பெரிதானது இதுவென்றே சொல்லலாம். ஏனென்றால் இங்கிலீஷ் கவர்ன்மெண்டாரினுடைய வருமானம் இதரதேசங்களின் வருமானத்தைப் பார்க்கிலும் அதிகம். இவர்களுடைய வருமானம் முழுமையும் பாங்கிக் கணக்குக்குள் கொண்டுவரப்பட்டு விடுகிறது.

ஒவ்வொரு டிபார்ட்டு மெண்டாலும் வஸூல் செய்யப்படுகிற தீர்வைகளெல்லாம் மூன்று மாதத்திற் கொருதரம் ஸர்க்காரின் பேரில் பாங்கியில் வைக்கப்படுகிறது. போஸ்ட்டாபீஸ்களிலிருந்து வரும் லாபங்களெல்லாம் லண்டன்நகரத்திலுள்ள பெரிய போஸ்டாபீஸின் மூலமாய் பாங்கியில் கொடுபடுகிறது.

ஸர்க்கார் பாங்கிக் கணக்கில் எவ்வளவோகோடிகள் வரவுவைக்கப்படுகின்றன. அதேமாதிரி எவ்வளவோ கோடிகள் எடுபடுகின்றன. குறிப்பிட்ட காலங்களில், ஸர்க்கார் பாங்கிக் கணக்கிலிருந்து கோடிக் கணக்கான பணம், சண்டை ஆபீஸ், கப்பல் பாதுகாப்பு ஆபீஸ், ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்கள், ஆகிய இவைகள் போன்ற செலவு செய்யும் வெவ்வேறு டிபார்ட்டு மெண்டார்களின் பத்தில், கொடுபடுகிறது. மேலும் ஸர்க்கார் கடன் வாங்கியிருக்கும் தொகைக்கு வட்டி செல்லவேண்டிய தினத்தில் வட்டி கொடுக்கப் பணம் வேண்டும்.

இந்தமாதிரியாக ராஜாங்க நிர்வாகத்திற்காக செலவிடவேண்டிய பணம் ஒருநாள்கூட தட்டில்லாமல் வந்துக்கொண்டிருக்கவேண்டும். ஆனால் ஜனங்கள் வரியை சடுதியில் செலுத்துவதில்லை. அவர்கள் ரொம்ப தாமதமாகவே செலுத்துகிறார்கள்.

இதனால் என்ன ஆகிறது, ஸர்க்காருக்கும் பாங்கியிலுள்ள பணமெல்லாம் எடுபட்டுப்போய் பணத்தட்டு ஏற்படுகிறது. அப்பொழுது ஸாமான்ய ஜனங்களைப்போல் கவர்ன்மெண்டும் கடன்வாங்க ஏற்படுகிறது. ஆனால், ஸாமான்ய மனிதனைப் போல் கஷ்டப்படாமல் ஸர்க்காருக்கு கடன் ரொம்ப ஸுலபமாகக் கிடைக்கிறது. பாங்கிக்காரர்களும், தனவான்களும் ஸர்க்காருக்குக் கடன் கொடுக்க முன் விழுகிறார்கள்.

இப்படி தேசத்துக்கு அத்யாவசியமான காரியங்களை நடத்தவேண்டிய ஸமயங்களில் பணத்தட்டிருந்தால் மேற்சொன்ன "லார்ட்ஸ் ஆப் தி ட்ரெஷரி" என்னும் கஜானா அதிகாரிகள் 'ட்ரெஷரி பில்' என்று சொல்லப்படும் ப்ராமிஸரி நோட்டைப் போன்ற ஒரு தஸ்தவேஜை, ஒரு மாசமோ மூன்றுமாசமோ, வேண்டிய கெடுப் போட்டு எழுதிக் கொடுக்கிறார்கள். இந்த ட்ரெஷரி பில்களை பாங்கிக்காரர்களும் தனவான்களும் ஸராஸரியில் நூற்றுக்கு மூன்றுவீதம் தள்ளி பணங்கொடுத்து வாங்கிக் கொள்ளுகிறார்கள். குறித்த கெடுவில் ஸர்க்கார் பணம் கொடுக்க முடியாமல் போனால் மறுபடியும் முன்மாதிரியே ட்ரெஷரி பில்களை எழுதிக்கொடுத்து கடனைப் புதுப்பித்துக் கொள்ளுகிறார்கள்.

பார்க்கப்போனால் இந்த பில்லுகளின் தள்ளுபடிப் பணமே (வட்டி) ஐந்து லக்ஷம் பவுன் ஆகிறது. வரி செலுத்துகிறவர்கள் ஸரிவர காலக்கிரமப்படி செலுத்திவந்தால் ஸர்க்காருக்கு இந்த நஷ்டமிராது.

இந்த பில்களினால் கடன்வாங்கும் பணமானது தேசத்தினுடைய பாங்கி வரவில் வைக்கப்படுகிறது. ஆகவே கஜானா அதிகாரிகள் பாங்கிக்கு தாராளமாய் செக்குகள் அனுப்பி வேண்டிய பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

தேசத்து பாங்கி கணக்கை பார்த்துவர ஆறு கிளார்க்குகள் வேண்டியிருக்கிறது. வாரத்துக்கு வாரம் கணக்கைக் கூடுதல் பார்த்து வருகிறார்கள்.

# INSURANCE.
# இன்ஷியூரென்ஸ்.

## Age, if Living.

வயது, உயிரோடிருந்தால்.—தன்னுடைய ஆயுளை இன்ஷ்யூர் செய்யவேண்டுமென்ற வொருவர் அதற்கு வேண்டிய கடுதாசு பாரத்தை வாங்கிக்கொண்டு, தன்னுடைய பெயர், குலம், கோத்திரமெல்லாவற்றை யுமெழுதிவிட்டு, "தகப்பனுர் வயது, தாயார் வயது, உயிரோடிருந்தால் சொல்லவும்" என்ற தலைப்பெயரின் கீழ் முறையே 112, 120 என்று எழுதினர்.

இதைப்பார்த்து இன்ஷ்யூர் செய்யும் கம்பெனியின் ஸெக்ரிடெரி ஆச்சரியப்பட்டு அவ்வளவு வருஷம் தங்கள் பெற்றோர்கள் உயிரோடிருந்தார்களா என்று அவரைக் கேட்க, அதற்கு அவர் "இல்லை, இல்லை; ஆனல் உயிரோடு இருந்திருக்கும் பக்ஷத்தில் இவ்வளவு வயது தான் அவர்களுக்கு ஆயிருக்கும்" என்றார்.

## Investment of Insurance Funds.

இன்ஷ்யூரென்ஸ் பணத்தை வட்டிக்கிடுதல்.—ஒரு ஜர்மெனி தேசத்து இன்ஷ்யூரென்ஸ் கம்பெனியார் தங்களுடைய பண்டுத்தொகையில் ஒரு பாகத்தை அயல் நாடுகளில் தகுந்த ஜாமின் மேல் வட்டிக்குக் கொடுக்கலாமா வென்றும், ஸர்க்காரால் ஜாமின் சொச்கப்பட்ட கடன் சீட்டின் மேல் பணம் வட்டிச்கு கொடுக்கலாமாவென்றும், தங்களுடைய கவர்ன்மென்டாரின் அனுமதியை கேட்டார்கள். அதற்கு கவர்ன்மெண்டார் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனித் தொகைகளை வட்டிச்கிடும் விஷயத்தில் சில கோட்பாடுகளுக்குள் பட்டம், ஜாமின் விஷயத்தில் தகுந்த ஜாக்கிரதையும் எடுத்துக்கொண்டால், தாங்கள் அனுமதி கொடுக்கத் தயார்தான் என்றார்கள். இந்த மாதிரியாக அயல் நாட்டு ஜாமின்களின்மேல் கடன் கொடுப்பதின் உசிதத்தைப்பற்றி கவர்ன்மென்டார் பர்லின் பட்டணத்து சேம்பர் ஆப் காமர்ஸ் மெம்பர்களின் அபிப்பிராயத்தை கேட்டிருக்கிறார்கள். இதற்காக அவர்கள் ஆலோசனை போர்டு ஒன்று நியமித்திருக்கிறார்கள். இன்ஷ்யூரென்ஸ் தொகையை வட்டிக்கிடுவது அதிக வட்டி கிடைக்க வேண்டியதற்காக வல்ல; ஆனல் எப்போதாயினும் நாட்டில் பொருளாதார விஷயமாய் கஷ்டம் நேர்ந்தாலும் ஸரி, திடீரென்று ஒரு சண்டை நேர்ந்தாலும் ஸரி, இந்த காலங்களில் நஷ்டப்படாமல் தொகைகளை சீக்கிரம் வஸூலிக்கக் கூடிய இடங்களாயிருப்பதே முக்கியமான விஷயம்.

## Insurance as Co-operative Protection.

இன்ஷ்யூரென்ஸ் என்பது கூட்டுறவினுலுண்டாகும் பாதுகாப்பு.—இன்ஷ்யூரென்ஸ் என்பது கூட்டுறவினுலுண்டாகிற பாது காப்பு என்று ஒருவர் சொல்லுகிறார் இதனல் ஏகதேசத்தில் ஒவ்வொரு கம்பெனியும் லாபம் ஸம்பாதிக்கிறது என்பது வாஸ்தவமாயினும், அது ஜனங்களுக்கு நன்மையைப் பயச்கி வருகிறது என்பதில் ஸந்தேகமேயில்லை. லைப் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகளெல்லாம் அந்தந்த கவர்ன்மெண்டுகளால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் கீழ்ப்பட்டிருக்கின்றன. ஆகையால் லைப் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் இஷ்டப்படி செய்ய இடமில்லை. இந்தக் கம்பெனிகளுக்குள்ள ஸ்வதந்திரங்களெல்லாம் பார்க்கப்போனல் கொஞ்சந்தான். லைப் இன்ஷ்யூரென்ஸைப் போன்ற ஜனோபகாரமான காரியம் கிடையாது. ஒருவருடைய ஆயுளை இன்ஷ்யூர் செய்வதினுலுண்டாகும் நன்மையை லகுவில் மதிக்க முடியாது. உலகத்தில் எவ்வளவோ ஜனங்கள் இன்ஷ்யூர் செய்து வருகிறார்கள். அதனல் எவ்வளவோ ஜனங்கள் காப்பாற்றப் பட்டிருக்கிறார்கள். இன்னும் எத்தனையோபேர்கள் இன்ஷ்யூரென்ஸ் செய்திருந்ததினுலுண்டான லாபத்தின் நிமித்தம் பிழைத்துவருகிறார்கள். எவ்வளவோகுடும்பங்களுக்கு லைப் இன்ஷ்யூர் செய்திருந்ததனல் கிடைத்த பணமே ஆஸ்தி. இந்தப்பணம் கிடைத்திராவிட்டால் அநேகம்பேர்கள் சோற்றிற்குத் திண்டாடவேண்டியதாக விருந்திருக்கும், மேலும் லைப் இன்ஷ்யூர் செய்தால் அதன் பிரயோஜனம் தனச்குப் பிற்காலந்தான் என்று யோஜிக்கவேண்டியதில்லை. ஒருவன் எந்தவயதில் வேண்டுமானுலும் அதன் பயனை யடையலாம். எல்லாவேலைகளிலும் பென்ஷன் கிடையாது. ஆகையால் உயிரோடு மாத்திரம் இருந்தால் வேலை செய்யமுடியாதகாலத்தில் தனக்கும் தன்னுடைய குடும்பத்திற்கும் ஒரு பெரும் பென்ஷன்போல் லைப் இன்ஷ்யூ ரென்ஸால் கிடைக்கப் பெறலாம்.

# EDUCATION.
# வித்யா விஷயம்.

## Indian Students in England.

இங்கிலாந்தில் இந்திய மாணுக்கர்கள்.—க்ரேட் ப்ரிட்டனில் இந்தியமாணுக்கர்கள் இப்போது ஸுமார் 1700 பேர் வரையில் இருக்கிறுர்கள். இவர்களில் லண்டன் நகரத்தில் மட்டும் 1000 பேர் இருக்கிறுர்கள். இவர்களுடைய நடவடிக்கைகளை கவனித்துக் கொண்டு வருவதற்காகவே "இந்திய மாணுக்கர்களின் உதவிக்கமிட்டி" என்று ஒரு கமிட்டி இங்கிலாந்தில் ஏற்பாடாயிருக்கிறது. சென்ற வருஷம் மேற்படி மாணுக்கர்களில் ஐந்துபேர் இங்கிலாந்தில் இனி இருப்பது உசிதமல்லவென்று இந்தியாவுக்கு மேற்படி கமிட்டியார் திருப்பி அனுப்பிவிட்டார்கள். இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு கல்விப் பயிற்சியின் பொருட்டு அனுப்பப்படும் மாணுக்கர்கள் ஒவ்வொருவருக்கும் 666 பவுன் முதல் 1000 பவுன் வரைக்கும் செலவு பிடிக்குமென்றும், இந்தத் தொகையைக் கொடுத்து அனுப்புவதற்கு சக்தியற்ற பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இங்கிலாந்துக்கு அனுப்பக்கூடாதென்றும், மேற்படி கமிட்டியார் கடித மூலியமாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறுர்கள்.

## Gift of Seven Lakhs.

7 லட்சம் ரூபாய் நன்கொடை.—கல்கட்டா கனவான் மிஸ்டர் தாரகநாத் பாலித் கல்கட்டா யூனிவர்ஸிடியில் ரஸாயன போதகரொருவர், ஜடதத்துவ சாஸ்திர போதகரொருவர், ஆக இரண்டு போதகர்களின் ஸ்தானங்கள் ஏற்படுத்தவும், ஒரு சாஸ்திர ஆராய்ச்சி சாலை ஏற்படுத்தவும் 7 லட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறுர். அதை கல்கட்டா யூனிவர்ஸிடியார் வந்தனத்துடன் ஏற்றுக்கொண்டிருக்கிறுர்கள்.

## The Madura Technical Institute.

மதுரையில் தொழில் வித்யாசாலை.—மதுரையில் இருக்கும் கவர்ன்மெண்ட் தொழில் வித்யாசாலைக் கட்டிடம் மதுரையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மதராஸ் பாங்கியின் கிளை பாங்கிக்காக விற்கப்பட்டது. இந்தத்தொழில் வித்தியாசாலை கட்டுவதற்காக, விசாலமான இடம் வாங்கப்பட்டிருக்கிறது. 6000 ரூபாய் செலவு செய்து இந்தப் புதிய ஸ்தலத்தில் டெம்பரெரி கட்டிடம் கட்டுவதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மதுரைப் பட்டணத்தில் ஐரோப்பியர்கள் குடியிருந்து வரும் பாகத்தில் 10 ஏக்கரா நிலம் வாங்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் நெசவுத் தொழிலில் கைதேர்ந்த நிபுணரான ஐரோப்பிய உத்தியோகஸ்தர் ஒருவர், சாயத்தொழிலில் கைதேர்ந்த நிபுணரான ஐரோப்பிய உத்தியோகஸ்தர் ஒருவர், ஆகிய இவ்விரண்டு உத்தியோகஸ்தர்களுக்கும் ஸௌகரியமாய்க் குடியிருப்பதற்குத் தனித்தனி வீடுகள் கட்டப்படும்.

## An Agriculutral School in Mysore.

மைஸூரில் ஒரு விவஸாய ஸ்கூல்.—மைஸூரில் விவஸாய ஸ்கூல்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டியது அவசியம் என்றும், 25,000 ரூபாயை 1912-13-வது வருஷத்திய பட்ஜட்டில் எடுத்துவைத்து சிறந்த கட்டிடம் கட்டி விவஸாய ஸ்கூல்கள் ஸ்தாபிக்கப்படும் என்றும், மைஸூர் கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். அவ்வித ஸ்கூல்களை ஸ்தாபனஞ்செய்து, அவைகளை ஸரிவர நடத்தி மேல் விசாரணை பார்த்துவரும்படி அந்த ஸமஸ்தானத்து விவஸாய இலாகாத் தலைவராகிய டாக்டர் கோல்மனை கவர்ன்மெண்டார் கேட்டுக்கொண்டிருக்கிறுர்கள். அப்பேர்ப்பட்ட ஸ்கூல்களில் மிருக வைத்திய சாஸ்திரத்தைக் கற்பித்துவரும்படி மிஸ்டர் நரஸிம்ம அய்யங்காருக்கு உத்தரவு அளித்திருக்கிறுர்கள்.

## The Malabar Elementary Education League.

மலையாளம் எலிமெண்டேரி எடுகேஷன் லீக்.

மலையாளத்தில் கீழ்த்தரப் படிப்பை அபிவிருத்தி செய்வதின் பொருட்டு, தென்மலையாளம் மனகடாவிலுள்ள மிஸ்டர் கிருஷ்ணவர்ம ராஜா, அந்த ஜில்லாவிலுள்ள மற்ற ராஜாக்களின் ஸகாயத்தைக் கொண்டு மலையாளம் எலிமெண்டெரி எடுகேஷன் லீக் என்ற பெயருடன் ஓர் லீகை ஸ்தாபனஞ்செய்ய முயன்று வருகிறுர். ஷேர் ஒன்றுக்கு 10 ரூபாய் வீதம் 50,000 ஷேர்கள் சேர்த்து அவ்விதம் வஸூலாகும் 5-லட்சம் ரூபாயே அந்த லீகின் மூலதனமாம். அந்த லீக் இந்திய கம்பெனி ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப்படும். இப் பெருந்தொகையைக் கொண்டு, ஜில்லா முழுவதும் எலிமெண்டரி பாடசாலைகள் ஸ்தாபிக்கப்படும். ஜாதி, மதம் முதலிய வித்யாஸங்களைப் பாராட்டாது பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்த்து அவர்களுக்குப் படிப்பைக் கொடுத்துக்கொண்டு வருவார்கள்.

# ECONOMIC PRODUCTS.
## விலையுள்ள பொருள்கள்.

**Maize.**

சோளம்.—ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி தேசங்களில் மக்காச்சோளக்கதிர்களின் புறவிதழ்களைக் கொண்டு அதிக பலமுள்ளதும் நேர்த்தியானதுமான ஒருவகைக் காகிதம் செய்யப்படுகிறது. அந்தக் காகிதத்தில் பாங்கி நோட்டுகள் கூட அச்சடிக்கிறார்கள். கால்நடைகளுக்குத் தீவனமாக உபயோகப்படுத்த உதவாத காய்ந்த தட்டையை வீட்டுக் கூரைகள் வேயவும், அடுப்பெரிக்கவும் உபயோகிக்கிறார்கள். நம்மிராஜதானியில் அநேக இடங்களில் குடிகள் மக்காச்சோளத்தைத் தோட்டப்பயிர்களுக்கு ஊடே ஊடே ஒவ்வொரு விதையாகப் போட்டு வைப்பது வழக்கம் என்று கிருஷிகன் பத்திரிகை எழுதுகிறது.

**Cigarette Paper.**

சுருட்டுக் காகிதம்.—புகைச்சுருட்டு செய்வதில், புகையிலையின் மத்தியில்உள்ள நரம்புகள் பிரயோஜனப்படாமல் ஒதுக்கப்படுகின்றன. இப்போது, அப்படி யொதுக்கும் நரம்புகளை காரமான ஸோடா ஜலத்தில் ஊரவைத்து, மெல்லியவைகளாக ஆக்கி, பின்பு அறைத்துக் கூழ்போலசெய்து, காகிதங்களை உண்டு பண்ணும் யந்திரங்கள் மூலமாய், காகிதங்களாகச் செய்கிறார்கள். பூராக் காகிதமும் புகையிலை ஸத்தாக இருக்கிறதால், புகையிலைச் சுருட்டாக இக்காகிதங்களைச் சுருட்டுகிறார்கள். புகையிலை ஸ்தானத்தில் இக் காகிதங்கள் உபயோகமாகின்றன.

**Plantain Honey.**

வாழைப்பழத் தேன்.—வாழைப்பழத்தைச் சாமான்னியமாய்த் தின்பதும், வரட்டித் தின்பதும், பஞ்சாமிர்தம்போன்ற சில வகைகளாக்கித் தின்பதும், நமக்குச் சாதாரணமாய்த் தெரிந்த விஷயம். அத்திப் பட்டை முதலிய 'முறிவு' களைச்சேர்த்து ரஸாயனமாக்கிச் சேர்ப்பது கொஞ்சம் அபூர்வம். ஆதலால் இப்பொழுது சமீபத்தில் பங்காளக்கம்பெனி ஏஜெண்டு ஒருவர் மதிராசில் வந்து, 'வாழைப்பழத்தேன் என்று பொருள் கொள்ளும், 'கலாமது' என்ற பெயருடன் ஒரு புதுச்சரக்கு விற்பனைக்கு வைத்திருக்கிறாராம். அதை உபயோகிப்பவருக்கு மலச்சிக்கு விடுவதுடன், கைகால்களுக்கும் திடம் கூடுகிறதாம். பங்காளாமருந்து வகைக் கம்பெனியார் இதைப் பரீக்ஷித்து நற்சாக்ஷிப் பத்திரம் கொடுத்திருக்கிறார்களாம்.

நம்முள் படித்துப் பிரக்கியாதி பெற்றவர் அனேகர் 'மலச்சிக்கு' என்னும் உபத்திரவம் வெகுதூரம் கூடித் தபித்து, 'காஸ்காரா' முதலிய விஷங்களை உட்கொண்டு காலங் கழிப்பதால், அவர்கள், இதை வாங்கிச் சாப்பிட்டுப் பார்க்கலாம் என்று வித்யாவிஹாரிணிப் பத்திரிகை சொல்லுகிறது. ஆசாரத்திற்கு ஆசாரம், சுகத்திற்குச் சுகம்,' 'பாலுமாயிற்று, மருந்துமாயிற்று,' என்றபடி இரட்டை நியாயம் பலிக்கும், தடையில்லை.

**Pine-apple.**

அனாஸ்ப்பழம்.—அனாஸ் பொலபொலத்த மண்ணுள்ள பூமியில் நன்றாய்ப் பயிராகும். நல்லவடிகால் வஸதியுள்ளதாயிருக்கவேண்டும்.

அனாஸ்குறுத்துச்கிழங்கை ஒன்றரை அடி இரண்டு அடிக்கொன்றாக நடவேண்டும். ப்ளாரிடா தேசத்தில் ஒரு ஏகர் நிலத்தில் 20,000 செடிகள் பயிர் செய்யப்படுகின்றனவாம்.

இந்தியாவில் மலையாளம், வட பங்காளம், அஸ்ஸாம் முதலிய நாடுகளில் அனாஸ் பயிர் செய்யப்பட்டு வந்தாலும் அந்தப் பழங்கள் ஜனங்கள் தேவைக்குப் போதுமான வரையில் பயிர் செய்யப்படவில்லை. இதனால் கொழும்பு மோரிஸ் முதலான இடங்களிலிருந்து உபயோகமற்ற பழங்கள் வந்து, பழம் ஒன்று 2 அணா 4 அணா என்று விலையாகிறது. பங்காளத்தில் பயிராகும் பழம் கொஞ்சம் நல்லதாக இருப்பதால் பழம் ஒன்று 8 அணா வாகும்.

ப்ளாரிடா தேசத்தில் ஸுமார் 50 வருஷத்துக்கு முந்தி அனாஸ் ஸாகுபடியே கிடையாது. இப்போது கீழ்க்கரை யோரங்களில் அனாஸ்பயிராகாத இடமே கிடையாது. வருஷம் ஒன்றுக்கு ஸுமார் ஒண்ணே முக்கால் கோடி பழங்கள் இத்தேசத்தில் விளைகின்றனவாம்.

சிங்கப்பூரில் அனாஸ் அபரிமிதமாய் ஸாகுபடியாகிறது. இவ்விடத்தில் இந்தப் பழங்களை பக்குவமாய் டப்பிகளில் அடைத்து யூனைடெட் ஸ்டேட்ஸ் முதலான இடங்களுக்கு அனுப்பி வருகிறார்கள்.

அனாஸ் மடலிலிருந்து நேர்த்தியான நார் எடுக்கலாம். இந்த நாரினால் நேர்த்தியான வஸ்திரம், பட்டு முதலியவை நெய்யப்படுகின்றன.

அனாஸ் பட்டையிலிருந்து சார்வடித்து அதை பிராந்தியாகவும், ஷர்பத்தாகவும் காய்ச்சுகிறார்கள்.

# BUSINESS METHODS.
# வியாபார முறைகள்.

## Advertising Ability.

விளம்பரஞ் செய்யும் சக்தி.—மார்ரே ஆல்லிஸீன் என்பவர் இதைப்பற்றி டைம்ஸ் பத்திரிகையில் பின் வருமாறு கூறுகிருர். வியாபாரத்தில் முதலாளியா யிருக்கப்பட்டவர் தன்னுடைய தொழிலேப்பற்றிய ஒவ்வொரு ஸங்கதியைப்பற்றியும் கட்டாயம் தெரிந்துகொள்ளவேண்டும். இந்த வேலே நமக்கு என்னத்திற்குத் தெரியவேணும், நாம்தாம் முதலாளியாயிற்றே, என்று இருக்கக்கூடாது. பிற்பாடு தக்க மனிதர்களே நியமிக்கவேண்டும். "ஒவ்வொரு கிருஷிகருக்கும் இந்த இந்த விதமாய் உழவேண்டுமென்று தெரிந்திருக்கவேணும், ஆனுல் அவர்கள் தாங்களே உழவேண்டியது அவசியமில்லே".

விளம்பரஞ் செய்வதில் திறமையுடையவனுக வேண்டுமானுல் "சிறந்த மொழிகளில் உயர்ந்த விதமாக எழுதும் சக்தியோடு இயற்கையறிவும், விற்பனே ஞானமும், அதாவது என்னவிதமாய் நடந்துகொண்டால் வந்தவர்களே வாங்கசெய்யலாமென்ற ஞானமும்" வேண்டும்.

## Retail business.

சில்லரை வியாபாரம்.—ஒவ்வொரு சில்லரைக் கடைக்காரர்களுக்கும் அநேகம் வாடிக்கைக்காரர்கள் உண்டு. ஒரே கடையில்தான் ஒரு வாடிக்கைக்காரன் ஸாமான் வாங்குவது வழக்கம். அந்தக் கடைக்காரன் தன்னுடைய வாடிக்கைக்காரர்கள் பக்கத்துக் கடைகளுக்குப்போவதில் மனங்கொள்ளமாட்டான். ஏனென்ருல் ஒரு வாடிக்கைக்காரர் ஒரு கடையைவிட்டு மற்றொரு கடைக்குப்போனுல், அந்தக் கடைக்காரன் இவன் இன்னுன் வாடிக்கைக்காரன், இவனே நம்முடைய வாடிக்கைக்காரனுக்கி விடவேண்டுமென்று எண்ணங்கொண்டு, புதிதாய் சரக்கு வாங்கவந்தவரை தன்னுடைய கடையைப்பற்றி நல்ல அபிப்பிராயங் கொள்ளும்படி செய்துவிடுவான். ஆகையால் சில்லரை வியாபாரிகள் தங்கள் வாடிக்கைக்காரர்கள் கேட்கக்கூடிய புது தினுஸு சரக்குகளேக்கூட தங்களுடைய கடைகளில் வைத்துக்கொள்வது உசிதமாகும். பக்கத்துக்கடைக்காரன் வைத்திருக்கும் தினுஸுகளேக் கட்டாயம் வைத்திருக்க வேண்டியதென்று சொல்லவேண்டியதில்லே.

## Business Forecasts.

வியாபாரத்தில் முன்யோஜனே.—வியாபாரிகளோ, அல்லது தொழிலாளிகளோ, அல்லது, இவர்கள் போன்றவர்களோ ஏதேனும் புதிதான காரியத்தைச்செய்ய விருப்பங்கொண்டால், அந்தக் காரியத்திற்கு எவ்வளவு பணம் முதல் முதலில் போடவேண்டும் என்றும், அதிலிருந்துவரும் லாபம் நஷ்டங்கள் இவ்வளவாகுமென்றும் திட்டமாய்க் கணக்கிடுவது வழக்கம். ஆனுல் ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாதது போல், இவர்கள்போட்ட கணக்குப்படி நிறைவேறுவதில்லே. முக்கியமாய் நாம் ஏதேனும் ஒன்றைச் செய்ய விரும்பினுல் அதற்கு எவ்வளவோ தடங்கல்கள் ஏற்படுகின்றன. அந்த ஸந்தர்ப்பங்களில் முணுமுணுத்தாலும் ஸரி, கோபங்கொண்டாலும் ஸரி, ஏதேனும் காரியத்தில் பிரயோஜனமுண்டா? தடங்கல்களெல்லாம் இவைகளுக்கு பயந்து விடுமா? நாம் செய்யவேண்டியதென்னவென்ருல், வேலே செய்வதில் ஊக்கமும், விடா முயற்சியும், தடங்கல்களே மீறி நடக்கும் சக்தியும், நமக்குக் கருவிகளாகும்படி அவைகளே கைக்கொள்ளவேணும். இப்படிச் செய்வது தான் வியாபாரத்தில் முன்னுக்கு வரும்வழி.

## Petty Savings.

சில்லரை மிச்சங்கள்.—வியாபார முறைகளில் ஸ்வல்ப லாபந்தானே, ஸ்வல்ப நஷ்டந்தானே என்று ஒருபோதும் இருக்கக்கூடாது. காணியாய்த்தான் கோடியாகவேணும். காணிலாபம், காணி நஷ்டமாயிருந்தாலும், பொருளாதார விஷயமாய் கவனிக்கும்போது காணிலாபமானுலும் ஸரியே, கோடிலாபமானுலும் ஸரியே.

எப்படியென்ருல், ஒரு கம்பெனி நடத்துவதில் ஒரு ரூபாய் மீத்தால், அந்தக் கம்பெனிக்கு ஒரு ரூபாய் லாபமாகிறது. கம்பெனி வரும்படியில் ஒரு ரூபாய் ஜாஸ்தியானுல் போட்டமுதலுக்கு நூற்றுக்கு ஐந்து வீதம் வரும்படியாக எண்ணிக் கணக்குப்பார்த்தால் அந்த ஒரு ரூபாயானது இருபது ரூபாய் நடை முதல் போலாகிறது. இந்த மாதிரியாக நாம் கவனித்து மீத்துக்கொண்டேபோனுல், ஒரு கம்பெனிக்கு ஏற்படும் மூலதனம் வெகு அதிகமாகும். கொஞ்சமுதல் வைத்துக்கொண்டு வியாபாரம் செய்கிற விடங்களில் தான் முக்கியமாய் சில்லரை விஷயங்களே கவனிக்க வேண்டும். 'சிறுதுரும்பும் பல்லுக்குத்தஉதவும்' என்பதை யறியவேணும்.

# FRAUDS AND FAKES.
## மோசங்களும் பித்தலாட்டங்களும்.

### A Clever Fellow will Always Succeed.

எத்தன் எவ்விதத்திலும் பிழைப்பான்.—ஓர் இங்கிலீஷ்காரனும் ஓர் ஐரிஷ்காரனும் தங்களில் எவன் நீந்துவதில் கெட்டிக்காரனென்று வாக்குவாதம் செய்துகொண்டிருந்தார்கள். கடைசியாய் எவன் ஜலத்தில் அதிக நேரம் இருப்பானோ அவனுக்கு மற்றவன் இத்தனை பவுன் கொடுத்து விடுகிறது என்று பந்தயம் போட்டுக்கொண்டார்கள். அந்தப் படியே குறித்த நாளில் இருவரும் ஆற்றங்கரைக்கு வந்தார்கள். ஐரிஷ்காரன் முதுகில் ஓர் பெரிய சாக்கு கட்டப்பட்டிருக்கிறதை இங்கிலீஷ்காரன் கண்டு "அதென்ன முதுகில் சாக்கு?" என்று கேட்டான். "மூன்று நாளைக்குத் தேவையான ஆகார வஸ்துக்கள்" என்று வெகு அமெரிக்கையாய் ஐரிஷ்காரன் பதில் கொடுத்தான். "அப்படியானால் பந்தயத்தை நீ தான் கெலித்துக்கொண்டாய், இதோ பணம் வாங்கிக்கொள்" என்று இங்கிலீஷ்காரன் பணத்தைக் கொட்டிக் கொடுத்துவிட்டு பேசாமல் வீட்டுக்குத் திரும்பிப்போனான். சில தினங்களுக்குப்பின் ஐரிஷ்காரனுக்கு நீச்சல் என்பது இன்னதென்று தெரியாதென இங்கிலீஷ்காரன் கேள்விப்பட்டான். இந்தவிதமாகத்தான் இவ்வுலகத்தில் பலர் உருட்டாபுரட்டாவினால் பிறரை மோசம்பண்ணித் தங்கள் காரியத்தைக் கொண்டுபோகிறார்கள்.

### Adulteration of Tea.

டீயோடு கலப்படம் செய்தல்.—தற்காலத்தில் டீ காபி முதலிய பலவித "குடி"கள் ஏற்பட்டிருக்கின்ற வாதலால், ஏழை ஜனங்கள் கூட டீயாவது காப்பியாவது சாப்பிட்டு வருகிறார்கள். இவர்கள் டீ சாப்பிட்ட போதிலும் அதிகவிலை கொடுத்து வாங்க அசக்தர்களாயிருக்கிறார்கள். ஆகவே மலிவான டீ தினுஸுகளை வாங்குகிறார்கள். இப்படிப்பட்ட டீ தினுஸுகளில் பலவித மோசங்கள் நடக்கின்றன. தேயிலையை நனைத்து வறுத்துபொடி செய்து, அந்தப் பொடியில் நீலம், மஞ்சள் முதலிய சாயங்களை ஏற்றி விற்பனை செய்கிறார்கள். இவை எல்லாம் டீ ரங்கு கொடுப்பதற்காக. இப்படிப்பட்ட டீ தினுஸுகளைப் பரிசோதிக்க, அவைகளை பச்சை தண்ணீரில் போட்டுக் கலக்கி சுருக்க வேறொரு பாத்திரத்தில் வடிக்கட்டி கஷாயத்தைப் பார்த்தால் ஸ்வய டீ என்றும் "ரங்கு" ஏற்றிய டீ என்றும், சுலபமாய்க் கண்டு பிடித்துக் கொள்ளலாம். எப்படி என்றால் 'ரங்கு' ஏற்றிய டீயாயிருந்தால் கஷாயத்தில் சாயம் இரங்கிவிடும், சில ஸமயங்களில் கஷாயம் இறக்கி எறிந்துவிடப்பட்ட தேயிலைச் சக்கையையும் நல்ல டீ இலையோடு சேர்த்து விற்பதுண்டு.

### Adulteration of Leather.

தோலோடு கலப்படஞ் செய்தல்.—தோலோடும் கலப்படம் செய்யலாமென்றால் என்னத்தைக் கொண்டு கலப்படம் செய்ய முடியும் என்று சிலர் கேட்கலாம். ஆனால் உலகத்தில் உபயோகப்பட்டு வரும் ஜோடுகள், பூட்ஸ்கள், குதிரை ஜேணங்கள், இன்னும் இவைபோலொத்த பலவித தோல்ஸாமான்களில் பாதிக்குமேல் கலப்படம்செய்த தோலே உபயோகப்பட்டு வருகிறதாம்.

தோலை நிறுத்து விற்கிறார்கள். ஆகையால் தோல் எவ்வளவுக்கெவ்வளவு கனமாயிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதிகலாபம் கிடைக்க ஹேதுவுண்டு. ஆகையால் தோலோடு மாபதார்த்தங்களிலிருந்து எடுக்கப்பட்ட க்ளூகோஸ் என்று சொல்லப்படும் ஒருவித பாகை உபயோகிக்கிறார்கள். இந்தப்பாகை ஒரு புருஷால் எடுத்து தோலின்மேல் தடவுவதுமுண்டு; இல்லாவிட்டால் தோலையும் மேற்சொன்ன பாகையும் சேர்த்து ஒரு ட்ரம் அதாவது பிதிலியில் போட்டு மூடி, ட்ரம்மைச் சுற்றினால் பாகுதோலோடு சேர்ந்து விடுகிறது. இதனால் தோலின் எடை ஜாஸ்தியாய் விடுகிறது. ஆனால் இப்படிப்பட்ட தோல்களைக் கொண்டு செய்யும் ஜோடு, பூட்ஸ்களில், ஈரம் தங்குவதற்கு இடமுண்டாகி அவைகள் ரொம்பநாள் தாங்காமல் சீக்கிரத்தில் கிழிந்து விடுகின்றன.

தோலோடு எப்ஸம் ஸால்ட் என்னும் ஒருவித உப்பையும் சேர்ப்பதுண்டு. இதனால் தோலுக்கு ஓர்வித ரங்கு ஏற்படுகிறதாம். இப்படிச் செய்வதால் தோலின் ஈரம் தாங்கும் சக்தி குறைந்து விடுகிறது. எப்ஸம் ஸால்ட் சேர்ப்பதால் தோலின் எடையை 100-க்கு 10, 12 வீதம் அதிகமாக்கி விடலாம்.

பதனிடுவதற்காக உபயோகிக்கும் சரக்குகளை ஏராளமாய் உபயோகித்து அதனால் 100-க்கு 20 வீதம் நிறையை அதிகப்படுத்தி விடுகிறார்கள். இப்படிச் செய்வதால் தோல் முதலில் அவ்வளவாக ஈரம்பிடிப்பதில்லை. ஆனால் வெகு சீக்கிரத்தில் அதிக எடை ஏற்படுத்துவதற்காக உபயோகப்படுத்தப்பட்ட பதனிடும் சரக்குகளெல்லாம் கழன்றுபோய் தோல் முரடாகவும் வளைந்தால் முறிந்தும் போகிறது.

# MACHINERY AND INVENTION.
## யந்திரங்களும் நூதன கற்பிதமும்.

### Paper Comb.

காகிதத்தால் சீப்பு.—அமெரிக்காவில் காகிதத்தால் சீப்பு செய்யப்பட்டு உபயோகிக்கப் படுகிறது. அது உறுதியாகவும், வாருவதற்கனுகூலமாகவு மிருச்கிறதாம். ஆனாலது ஒருமுறை சீவியதற்குப்பின்பு உபயோகத்திற்கு வருவதில்லையாம்.

### A Cigarette Making Machine.

சுருட்டு செய்யும் யந்திரம்.—இப்போது விகரெட் குடிப்பது யாவருள்ளும் ஸர்வ ஸாதாரணமாய்ப்போய் விட்டது. செலவிற்கேற்க வருமானம் வரவேண்டியது அவசிய மாதலால் விகரெட் அபரிமிதமாய் செலவழிவதற் கேற்ப உற்பத்தி செய்யவும் யந்திரம் கண்டுபிடித்துவிட்டார்கள். இந்த யந்திரம் ஒரு அமெரிக்க கனவானால் கண்டு பிடிக்கப்பட்டு ஸவித்ஸர்லாந்தில் ஸ்தாபிக்சப்பட்டிருக்கிறது. இது நிமிஷத்திற்கு 150 விசெரட் செய்கிறதாம்.

### Pocket Telephones.

ஜேப்பில் போட்டுக்கொள்ளக்கூடிய டெலிபோன்கள்.—சட்டை ஜேப்பில் போட்டுக் கொள்ளக்கூடிய டெலிபோன் கருவி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு, அது ஜெர்மனி தேசத்து முக்கிய பட்டணமாகிய பர்லின் நகரத்தில் உபயோகப்பட்டு வருகிறது. இதை விசேஷமாய் அந்த நகரத்து போலீஸாரே உபயோகித்து வருகிறார்கள். ஒவ்வொரு போலீஸ்காரனுக்கும் மேல் சொன்ன டெலிபோன் கருவியைக் கொடுத்திருக்கிறார்கள். அதை உபயோகித்து பட்டணத்தில் வேறு இடங்களிலுள்ள போலீஸ் காரர்களோடும் இன்னும் சில அதிகாரிகளோடும் அவன் பேசிக்கொள்ளலாம். இதற்காக ஒவ்வொரு தெருவிலும் அங்கங்கே இந்த டெலிபோனை மாட்டிப் பேசத்தக்க கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கருவிகளை சுவருகள், கதவுகள், மரங்கள், விளக்கு ஸ்தம்பங்கள், ஆகிய ஸௌகரியமான இடங்களிலெல்லாம் வைத்திருக்கிறார்கள். அவைகளுக்கு காற்று மழையால், சேதம் நேரிடாமல் செய்திருக்கிறார்கள். மேற்சொன்ன டெலிபோனின் எடை 7 அவுன்ஸாம், ஆகவே ஸுலபமாய் சிரமமன்னியில் ஜேப்பில் போட்டுக்கொண்டு எங்கே வேண்டுமானாலும் போகலாம்.

### Powdered Milk.

பால் போடி.—ந்யூ வீலேண்ட் என்னும் தேசத்தில் செய்யப்படும் பால் பொடிக்கு வரவர பேர் கிளம்பி வருகிறது. அது புஷ்டியுள்ளதாயும் வெகு காலம் வைத்திருந்தால் கெட்டுப்போகாமலு மிருப்பதால், 'கன்டென்ஸ்டு மில்க்' என்று சொல்லப்படும் புட்டிப் பால்சளுக்குப் பெரிய போட்டியாகிக் கொண்டுவருகிறது. டப்பிப் பாலைவிட ந்யூவீலெண்ட் பால் பொடி சீக்கிரம் ஜீரணிக்கக் கூடியதாயிருக்கிறதாம். ஏனென்றால் விஷக்கிருமிகளற்றும் கரும்பிலிருந்து செய்யப்பட்ட சர்க்கரை சேராமலு மிருக்கிறது. ந்யூவீலெண்ட் பால் பொடியில் நூற்றுக்கு 26 பங்கு வெண்ணெயும், 22·9 பங்கு ப்ரொட்டீன் ஸத்தும், 42·3 பங்கு பாலுக்குரிய சர்க்கரையும், 5·6 பங்கு தாதுப் பொருள்களும் இருக்கின்றன. பசுவிலிருந்து பால்கறந்த இரண்டு மணி நேரத்துக்குள் பாலைக் காய வைத்து விடுகிறார்கள். பால்கறப்பதற்கு முன்னால் பாத்திரத்தை சுண்ணம்பு ஜலத்தால் ஒரு தடவை கழுவி, மறுபடியும். சுத்த ஜலத்தால் கழுவி, பிறகு நீராவியைப் பாய்ச்சுவதால் பாத்திரம் வெகு சுத்தமாகிவிடுகிறது. இப்படி, பாத்திரங்களை சுத்தப்படுத்துவதனாலும், பசுக்களை மிருக வைத்தியர்களைக் கொண்டு சோதிப்பதனாலும் 'ட்யூபர்குலோஸிஸ்' என்னும் காசநோய் வருவதற் கிடமில்லை. இந்த பால்பொடி குழந்தைகளுக்கு ஆகாரமாகவும், டீ காபி, இவைகள் செய்யவும் உபயோகப்படுகிறது. இது டப்பிப் பாலைவிட நல்லதென்று வைத்தியர்களும் சொல்லுகிறார்களாம்.

தவிர, பாலிலிருந்து வெண்ணெயை எடுத்துவிட்டு, இன்னொருவித பால் பொடியையும் செய்கிறார்கள். இந்தப் பொடி பிஸ்கோத்து செய்வதற்கும், 'ச்சாக்கொலேட்' என்னும் மிட்டாய் செய்வதற்கும் உபயோகப்படுகிறது. அதற்காக அது இங்கிலாத்துக்கு ஏற்றுமதியாகிறது. இந்த பால் பொடியை உபயோகிப்பதால் பிஸ்கோத்துக்கு ஒருவித வாஸனை ஏற்படுவதோடு, இதைச் சேர்க்காவிட்டால் ஒருபவுன் மாவுக்கு எவ்வளவு பிஸ்கோத்து காணுமோ அதைவிட மேற்சொன்ன பால்பொடியைச் சேர்த்தால் 15 பிஸ்கோத்து கூடக் காண்கிறதாம்.

# LAW.

## சட்டம்.

### Alienation by Widow.

விதவை செய்த பராதீனம்.—ஒரு விதவையினுடைய அநந்தரவார்ஸ் ஒருவன் அவளுடைய பந்துக்களில் ஒருவனுக்கு உதவி செய்ததில் ஏதோ நஷ்டமடைந்தபடியால் அதை உத்தேசித்து அந்த விதவை அவனுடைய அநந்தர வார்ஸுக்கு உதவி செய்ய சில ஸொத்தை விற்ருள். அவள் பிறகு 15 வருஷத்துக்கு அப்புறம் ஒரு பிள்ளையை ஸ்வீகாரஞ் செய்து கொண்டாள். இந்தப்பிள்ளை தன் ஸ்வீகாரத் தாயார் செய்தது தகாது என்று வியாஜ்ம் கொண்டு வந்தான். விதவை செய்த விற்பனைக்குஅநந்தர வார்ஸ் ஸம்மதம் கொடுத்திருந்தபோதிலும் அதுமட்டும் போதாதென்று தீர்மானிக்கப்பட்டது.

### Hindu Law and Marriage Expense.

இந்து லாவும் கலியாணச் செலவும்.—திருச்சினுப்பள்ளி ஜில்லா, குளித்தலை தாலுக்காவைச் சேர்ந்த ஒரு ஹிந்துக் குடும்பத்தில் பிறந்த ஒரு மைனருக்காக அவனுடைய கார்டியன் ஆஜராகி குளித்தலை முனிஸீப் கோர்ட்டில் ஒரு தாவாக் கொண்டு வந்தான். இந்த தாவாவில் தனக்கும் (மைனருக்கும்) தன் தமையனுக்கும் குடும்ப ஸொத்தில் பாசம் கிடைக்க வேண்டியதென்றும், தன் உபநயனம் விவாகம் முதலியவற்றின் செலவுகளுச்குக் கிடைக்கவேண்டியதென்றும், தன் தாயாருக்குப் பிரத்யேகமான ஜீவனும்சம் கிடைக்க வேண்டியதென்றும், தன் தங்கையின் கலியாணச் செலவுக்குக் கிடைச்கவேண்டியதென்றும், குடும்பத்தில் தனச்கு ஸரிபாகம் கிடைக்க வேண்டியதென்றும், சில வருஷங்களின் மத்யகால வரும்படிக்குக் கணக்குக் கொடுக்கவேண்டியதென்றும் கண்டிருந்தது. இதில் தாயாரும், தங்கையும் பிரதிவாதிகளாகச் சேர்க்கப்பட்டார்கள்.

அதன் பேரில் டிஸ்டிரிக்ட் முன்ஸீப் வாதி கேட்டுக் கொண்டபடி, மைனர் உபநயனம், விவாகம் இவற்றின் செலவுகளையும், மத்யகால வரும்படியின் கணக்குகளையும், பிரதிவாதி கொடுக்க வேண்டுமென்று டிக்ரி செய்து, தாயாருக்கு மாத்திரம் குடும்பத்தில் பிரத்யேகமான ஜீவனும்சம் கொடுக்கப்படமாட்டாதென்று தீர்ப்பளித்தார்.

இதன்மேல் இந்த வியாஜ்யம் திருச்சி ஸப் கோர்ட்டுச்கு வந்ததில், ஸப் ஜட்ஜ், முன்ஸீப் செய்த எல்லா அம்சங்களையும் ஒத்துக்கொண்டு அவர் தீர்மானத்தை உறுதி செய்துவிட்டார்.

பிறகு ஹைகோர்ட்டில் அப்பீலுக்கு வந்தது. இந்த அப்பீலில், குடும்ப ஸொத்திலிருந்து மைனர் விலக்கப்படாததால், அவனுக்குக் குடும்பத்தின் மத்ய கால வரும்படியைப்பற்றிக் கீழ்க்கோர்ட்டார் செய்த தீர்மானம் தப்பென்றும், மைனருக்குச் செய்யவேண்டிய உபநயனம், விவாகம் முதலிய செலவுகள், மைனருக்குக் கிடைக்கும் பாகத்திலிருந்து செலவுசெய்து கொள்ளவேண்டியதே தவிர, குடும்ப ஸொத்திலிருந்து கிடைக்கமாட்டாதென்றும் வாதிக்கப்பட்டது. தாயாருக்குப் பிரத்தியேகமான ஜீவனும்சம் கிடைக்க வேண்டுமென்று ஆக்ஷேப மனு கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது. மைனர் பங்காளி குடும்பத்தை விட்டு வேறே தனியாய் இருந்துகொண்டிருந்தாலும், அந்த குடும்பத்தினுடைய மத்யகால வரும்படியில் அவனுக்குக் கிடைக்கவேண்டிய பாத்திய மிருக்கிறதென்றும், அவனுக்கு சாஸ்திர விதிப்படி செய்ய வேண்டிய ஸகல ஸமஸ்காரங்களுக்கும் குடும்ப ஸொத்திலிருந்து செலவிடவேண்டியது கிரமமெனறும், வாதிக்கப்பட்டது.

பிறகு இரண்டு ஜட்ஜிகளும் உபநயனச் செலவு, தாயார் பிரத்தியேகமான ஜீவனும்சம், மத்தியகால வரும்படியில் பாத்தியமின்மை, இவைகளை ஒத்துக்கொண்டு விவாகச் செலவைப்பற்றி மட்டும் வெவ்வேருன அபிப்பிராயம் கொண்டார்கள்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தர அய்யர் பாக காலத்தில் ஆண் மைனர் கலியாணத்தின் செலவுகளுக்காக இவ்வளவென்று ஓர் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார்; ஏனெனில், விவாகமானது சாஸ்த்திரோக்தமான ஒரு ஸமஸ்காரமானபடியால் அப்படிச் செய்யவேண்டியது அவசியமென்பதே.

மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸதாசிவ அய்யர், விவாக காலத்தில் வரனுக்கும் வரதக்ஷிணை அதாவது எதிர் ஜாமின் கிடைக்கிறபடியாலும், பால்ய விவாகத்தை அதிகப்படுத்தக் கூடியதாகையாலும், கலியாணத்துக்கென்று குடும்பத்திலிருந்து முன்பணம் பிரத்தியேகமாக எடுத்து வைப்பது அனுவசியமென்று அபிப்பிராயப்பட்டார்.

இதன்பேரில், கலியாணச் செலவுக்காக முன்பணம் குடும்ப ஸொத்திலிருந்து பிரத்தியேகமாய் பாக காலத்தில் எடுத்துவைக்க வேண்டியது அவசியமா, இல்லையா, என்ற விஷயம் ஹைக்கோர்ட் 3-வது ஜட்ஜுக்கு ரெபர் செய்யப்பட்டிருக்கிறது.

# MEDICINE.

## வைத்தியம்.

**Kala Azar.**

காலா அஜார்.—பம்பாய் முதலிய விடங்களில் பரவிப் பல்லாயிரம் ஜனங்களைக் கவளீகரித்து வரும் மலேரியா ஜ்வரமானது கொசுக்கடியால் உண்டாகிறது என்று சாஸ்திர விற்பன்னர் கண்டுபிடித்திருப்பதுபோல், சென்னை முத்தியாலுபேட்டை முதலிய இடங்களில் பரவியிருக்கும் கறுப்பு ஜுரம் (காலா அஜார்) என்ற விஷநோய் படுக்கைகளிலுள்ள மூட்டுப்பூச்சிக் கடியால் உண்டாகிறதென்று காப்டன் டப்ள்யூ. எஸ். பர்ட்டன் கண்டுபிடித்திருக்கிறார்.

**Health Hints.**

ஆரோக்கியக் குறிப்புகள்.—ஒவ்வொரு வரும் செய்துகொள்ளவேண்டிய பிரதிக்ஞைகளாவன:—

1. பிரதிதினமும் எனது நித்ய கர்மானுஷ்டானங்களை குறித்த நேரத்தில் செய்து முடிப்பேன். குறித்த நேரத்தில் படுக்கைக்குப் போய், குறித்த நேரத்தில் எழுந்திருந்து, குறித்த நேரங்களில் போஜனஞ்செய்வேன்.

2. ஒரு ஜன்னலாவது திரந்திராத அறையில் நித்திரை செய்யமாட்டேன்.

3. போஷிப்பைக் கொடுக்கக்கூடிய சுத்தமான போஜனத்தை மிதமிஞ்சாமல் புசிப்பேன்.

4. நடக்கும்பொழுதும் உட்கார்ந்திருக்கும்பொழுதும் எனது விரஸையும் புயங்களையும் நேராய் நிமிர்த்தி, மார்பை விரித்து வைத்துக்கொள்வேன்.

5. பிரதிதினமும் போஜனஞ்செய்யுமுன் சிறிது நேரம் ஸ்வாஸாப்யாஸஞ்செய்து என் நுரையீரலை சுத்த ஆகாயத்தால் நிறப்புவேன்.

6. சூரியகாந்தி என்மேல் வீசத்தக்கதாக ஒவ்வொருநாளும் என்னல் கூடிய அளவு வெளியில் நடந்து திரிவேன்.

7. லாகிரி வஸ்துக்களால் என் சரீரத்தைக் கெடுத்துக்கொள்ள மாட்டேன்

8. தேகத்தின் தன்மையையும் காலத்தின் தன்மையையும் அனுஸரித்து உணவுகளையும் உடைகளையும் கவனித்து வருவேன்.

9. என் தேகத்திலுள்ள கழிவு பதார்த்தங்கள் வெளியாகும் சரும துவாரங்கள் அழுக்கினல் அடைபடாதபடி பிரதிதினமும் ஸ்நாநஞ்செய்து தேசத்தை சுத்தமாக வைத்துக்கொள்வேன்.

10 படுக்கைச்குப் போகும்போது பற்பல சிந்தனைகளையும் கவலைகளையும் நீக்கி ஸர்வஜீவ தயாபரக்கடவுளின் பாதுகாப்புக்கு என்னை ஒப்பிவித்து நிர்மல நெஞ்சுடன் நித்திரை செய்வேன்.

**Goats Milk.**

வெள்ளாட்டுப்பால்.—செம்மறி ஆட்டுப் பாலைவிட வெள்ளாட்டுப்பால் மிகவும் சிலாக்கியமானது. பசும்பாலுக்கும் எருமைப்பாலுக்கும், எவ்வளவு வித்யாஸம் உண்டோ அவ்வளவு வித்யாஸம் வெள்ளாட்டுப்பாலுக்கும் செம்மறியாட்டுப்பாலுக்கும் உண்டு. 1. வெள்ளாட்டுப்பால் ருசியாய் இருப்பதோடு தேகத்திற்கு புஷ்டியும் தரக்கூடியது. 2. சுதேச வைத்தியத்தில் வெள்ளாட்டுப்பால் மிகவும் கையாளப்படுகிறது. 3. காலை 7-மணிக்கு இந்த ஆட்டின் பாலைக்கறந்து, அதைச் சுத்தமான வெள்ளைத்துணியால் வடிக்கட்டி முப்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் கால்படிபாலும், அதற்குக் கீழ்ப்பட்டவர்கள் அரைக்கால்படி பாலும் கொஞ்சம் பத்தியத்துடன் எழுநாளைக்குச் சாப்பிட்டு வந்தால், தேக சம்பந்தமான வியாதி ஒன்றும் வராது. ஆறு மாதத்திற் கொருதரம் இப்படிச் சாப்பிட்டுவந்தால் மிகவும் நல்லது. 4. தேகத்திலுள்ள சொரிகள், துர்நீர், இவைகளுக்கும், சொரிந்தால் தடிப்பதற்கும், இந்த ஆட்டின்பாலை ஒருவாரம் காலையில் மேலே சொல்லியபடி சாப்பிடவேண்டும். 5. நீர்க்கடுப்பு, மூத்திர துவாரத்தில் உண்டாகும் எரிச்சல், நீரழிவு முதலான வியாதிகளுக்கு மேற்சொன்னபடி 12-நாள் சாப்பிடவேண்டும். 6. உடம்பில் நீர் ஏற்றத்துக்கு மண்டூரத்தை வெள்ளாட்டின்பாலில் தேய்த்துக்கொடுக்கவும். 7. மலச்சிக்கலை வெள்ளாட்டின்பால் எழுநாளில் கண்டிக்கும்.

இதற்குப் பத்தியங்களாவன.—புளி, நல்லெண்ணெய், உளுந்து, சேரக்கூடாது. காப்பிக்கு பதிலாய் சோடா சாப்பிடலாம். நல்லெண்ணெய்க்கு பதில் தைலம்தடவித் தலையைச் சீவிக்கொள்ளலாம். பசுமோர் சேர்த்துக்கொள்ளலாம், பழைய சாதமும் சம்போகமும் கூடாது. ஒத்துக்கொண்டால் வெந்நீரில் ஸ்நானம் செய்யலாம். எண்ணெய்க்குப்பதில் பால்மிளகு தேய்த்து ஸ்நானம் செய்யலாம். உஷ்ண தேசத்திலிருப்பவர்களும், காங்கை சரீரமுள்ளவர்களும் மனம்போனபடி இந்தப்பாலைச் சாப்பிட்டால் வயிற்றில் கட்டிகள் உண்டாயினும் உண்டாகலாம். ஆதலால் மேற்சொன்னவைகளை அனுஸரித்துச் சாப்பிடவேண்டும்.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### An Old friend.

ஒரு பழைய சிநேகிதன்.—பெரிய உத்தியோகத்தில் இருக்கும் தன் பால்ய சிநேகிதனை ஒருவன் பார்க்கப்போனபொழுது "நீ யார்? இங்கு எதற்காக வந்தாய்?" என்று அவர் கேட்டார். பார்க்கப்போன சிநேகிதன் "நீ யென்னை யறியாயா? நான் உனது பால்ய சிநேகிதன். உனக்குக் கண்திருஷ்டி குறைந்ததென்று கேட்டு உன்னைப் பார்க்கவந்தேன் என்று பதில் சொன்னான்.

### Nambudri Ladies Travelled in Train.

நம்பூதிரி ஸ்திரீ ரெயில் பிரயாணம் செய்தது.—மலையாளப் பிராமணரான நம்பூதிரி கனவானொருவர் இல்லத்து ஸ்திரீகளையும் தன்னுடன்கூட அழைத்துக்கொண்டு ரெயில் பிரயாணஞ்செய்ததற்காக, அந்த ஜாதியைச் சேர்ந்தவர்களெல்லோரும் ஒன்றுகூடி, ரெயில் பிரயாணஞ்செய்த நம்பூதிரியையும் ஸ்திரீகளையும் பிராயச்சித்தம்செய்து கொள்ளும்படி, வற்புறுத்த வேண்டுமென்றும், இல்லாதுபோனால் அவர்களை ஜாதிப்பிரஷ்டம் செய்துவிட வேண்டுமென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். பிராயச்சித்தம்செய்து கொள்வதற்கு ஏராளமான பணம் செலவாகுமாகையால் ரெயில் பிரயாணஞ்செய்த நம்பூதிரி ரெயில் பிரயாணஞ்செய்த குற்றத்திற்காக கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை தம்போன்ற பிராமணர்களுக்குப் பங்கிட்டுக்கொடுத்துவிடுகிறதா என்ற எண்ணத்துடன் பணச்செலவுள்ள பிராயச்சித்தம் வேண்டாமென்று ஆக்ஷேபித்து வருவதாகத் தெரிகிறது. நம்பூதிரிமார்கள் தாராளமாய் ரெயில் பிரயாணம் செய்கிறார்கள். ஆனால் நம்பூதிரி ஸ்திரீகள் ரெயில் பிரயாணம் செய்தது இதுதான் முதல் தடவையாகும்.

### Rama's Exile.

ராமர் வனவாஸம்.—வனவாஸத்தில் ஸ்ரீராமர் சீதாதேவியைப்பார்த்து பெண்ணே! நீ என்னைக் கலியாணம் செய்ததினாலல்லவா உன் உற்றார், பெற்றார், உறவின்முறையார், இனஜனத்தார், பந்துமித்திரர், அரண்மனை, ஆஸ்தானம், ஸுக ஸௌகரியம் முதலான ஸகல நன்மைகளையும் இழந்து இந்தக் கானகத்திலே கல்லிலும் முள்ளிலும், புல்லிலும், புதரிலும், மண்ணிலும், மணலிலும், வெயிலிலும், பசியிலும், பனியிலும் வருந்தி, கந்த மூலாதிகளைப் புசித்து, அடவிநீர் அருந்தி, மரவுரிதரித்து, மிருகங்களிடையில் வஸிக்கும்படி வாய்த்ததே யென அங்கலாய்க்கலானார். அப்போதந்த பெருமாட்டி பெருமான் முகம் நோக்கி என் பிராண நாயகரே, அப்படியல்ல. நான் சொல்லவேண்டியதை நீங்கள் சொல்லுகிறீர்கள். தாங்கள் என்னைக் கலியாணம் செய்ததினாலே தான் தங்களுக்கு இப்பேர்ப்பட்ட கதி வாய்த்தது. மேலும் நீங்களில்லாத விடம் நாடாயிருந்தாலும் அதுதான் எனக்குக்காடு. உங்களுடன் கூடி வாழும் இக்காடே எனக்கு நாடென்று சொன்னாள்.

### Fun about Horse.

குதிரைக்கூத்து.—ஒரு வித்வானுக்கு ஒரு ஸமயம் குதிரை யொன்று பரிசு கிடைத்தது. அவர் அதைப் பெற்றுக்கொண்டு அகமகிழ்ச்சியுடன் தனது அகத்துக்கு வந்தார். அப்போது அவரின் மனையாள் வழக்கம்போல் வெளியே போய்வந்த காரியம் சுபமாவெனக் கேட்டாள். அவர் அஸ்வமென்றார். அஸ்வமென்னும் வார்த்தை சந்தர்ப்பத்தை யனுஸரித்து அவளுக்கு அசுபமென்று பட்டது. அசுபமென்றால் ஆகாதகாரியம். ஆகவேஅவள் அஞ்சினாள். அதற்குள் வித்வான் கோரமென்றார். அந்த ஆகாத காரியம் கோரத்தைப் பொருத்ததாயிருக்கலாமென்று அந்தம்மாள் மயங்கினாள். பின்னுமவர் தன் மனையாளுக்கு நன்கு விளக்கும்பொருட்டு மா, என்னும் வார்த்தையை இருமுறை மா, மா வென்று வற்புறுத்திக் கூறினார். புருஷனுக்கு மாமா வென்றால் பெண் ஜாதிக்குத் தகப்பன்தானே. ஆகவே அந்தம்மாள் தன் தகப்பனாருக்கு ஏதெனும் ஆபத்து நேரிட்டிருக்கலாமென்றெண்ணி ஐயோ, அப்பா! வென்றடித்துக்கொண்டு ஒப்பாரிவிட்டழுதாள். அக்கம்பக்க வீட்டுக்காரர் உடனே கூட்டங்கூடினார்கள். வித்வான் விழித்துக்கொண்டு வாசி யென்றார். வாசியெனவே தன் தகப்பனார் சுகமாய்விட்டாரென்றெண்ணி அந்தம்மாள் அழுகையை நிறுத்தலானாள். இறுதியில் வித்துவான் தன் மனைவியைப்பார்த்து, அடி பைத்தியக்காரி! இதுவரை நான் சொல்லிவந்த அஸ்வம், கோரம், மா, வாசியென்னும் வார்த்தைகளெல்லாம் குதிரைக்குரிய பெயர்களாகும். நீ, ஒரு வித்வானுடைய பெண்ஜாதியாயிருந்தும் இதன் தாத்பரியம் உனக்கு விளங்கவில்லை யல்லவாவென்று கோபித்துக்கொண்டாராம். அவளும் நாணமடைந்தாளாம்.

# CURIOSITIES.
## விநோதங்கள்.

### A Two and a Half Year Old Passenger.

இரண்டரை வயதுள்ள ஓர் பிரயாணி.—அமெரிக்காவிலிருந்து லண்டனுக்கு வந்த ஒரு கப்பலில் இரண்டரை வயதுள்ள ஓர் ஆண் குழந்தை பிரயாணஞ்செய்தது. அதன் தாய் தந்தையர் அக்குழந்தையை லண்டனிலுள்ள தமது தாய் தந்தையரிடம் கொடுத்து விடும்படிக்குக் கப்பல் சீட்டு வாங்கிக்கொடுத்தார்களாம். குழந்தை குறித்த இடத்திற்கு ஸுகமாய் வந்து சேர்ந்ததாம். அதன் பெயர் ஜானிஸ் டார்க்லி என்று சொல்லப்படுகிறது.

### A Curious Palmyra Tree.

ஆச்சரிய மான ஒரு பனை.—நாங்குனேரி தாலுகா மூலேக்கரைப்பட்டி என்ற ஊருக்கு இரண்டு மயிலுக்கு வடபாகத்தில் ஸுமார் 40 அடி உயரமுள்ள பனை ஒன்றில் அதின் நடுமத்தியிலிருந்து 9 கவர்கள் பிரிந்துபோயிருக்கின்றன. ஒவ்வொன்றும் தனித்தனியே ஸுமார் 20 அடி உயரமிருக்கும். இப்பேர்ப்பட்ட கவர்களுள்ள பனைகள் அநேக இடங்களில் இருந்தாலும் அவைகளிலிருந்து கள்ளாவது பதினியாவது இறக்க லாயக்கில்லை. ஆனல் இந்த மரத்திலோ ஏறக்குறைய எல்லாக் கவர்களிலும் பதனீர் இறக்குகிறார்கள். இதில் முன் 22 கவர்கள் இருந்ததாகவும், மிகவும் அடர்த்தியாயிருந்ததால் சிலவற்றைத் தறித்து விட்டதாகவும் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

### A Cat Suckling Dogs.

பூனைத்தாயும் நாய்க்குட்டிகளும்.—லண்டன் லோஸ்ட்ரீட்டில் வாஸஞ் செய்துவரும் மிஸ்டர் ஆல்ப்ரட் ஸ்டான் என்பவருக்கு சொந்தமான பூனையானது 3 நாய்க்குட்டிகளுக்குப் பால்கொடுத்து வளர்த்துவருகிறதாம். நாய்க்குட்டிகள் வெகு அழகாகவும் மாற்ருந் தாயாகிய பூனையிடத்தில் வெகு அன்பாகவும் வளர்ந்து வருகின்றனவாம்.

### The Mud Fish.

மண் மீன்.—ஆபிரிக்காவில் 'மண் மீன்' என்று 6 அடி நீளமுள்ள ஒருவித மீனிருக்கிறதாம். கோடைகாலங்களில் அவை மண்ணிற் புகுந்து, கோடை ஆகஸ்டு ஸெப்டம்பர் மாதம்வரை யிருந்தபோதிலும் ஜீவனுடனிருக்குமாம். மழைகாலத்தில் வெளிவந்து தண்ணீரிலிருக்குமாம். மழைகாலத்தில் கொழுப்பு வளர்ந்து கோடைகாலத்தில் மண்ணில் புகுந்து வாஸஞ்செய்யும் பொழுது, அக்கொழுப்பை ஜீரணித்து ஜீவித்து வருகிறதாம். தண்ணீரில் அதிக வேகத்துடன் செல்லுமென்றும் சொல்லப்படுகிறது.

### An Expert Eye Doctor.

நிபுண நேத்திர வைத்தியர்.— மாமித்தோ என்ற ப்ரான்ஸ்தேசத்து கண்வைத்தியர் ஒருவர் சுண்ணும்பினல் வெந்து பார்வை யற்றுப்போன ஒருவனுடைய கறுப்பு விழயின் ஒரு பாகத்தை எடுத்துப் போட்டுவிட்டு, மற்ருெருவனுடைய கண்ணிலிருந்து நல்லதாயிருந்த ஒரு பாகத்தையெடுத்து முதற்பேர்வழியினுடைய கண்ணில் வைத்துச் சிகிச்சை செய்திருக்கிருர். இரண்டாவது பேர்வழிக்கு அப்பாகத்தை யெடுத்துப் போடவேண்டியதா யிருந்ததாம். முற்றும் குருடனயிருந்த முதல் மனிதன் இப்போது இலேசான பார்வையடைந்திருந்திருக்கிருன். இந்தச் சிகிச்சை நடந்து இப்போது ஏழு மாதம் ஆய்விட்ட போதிலும் இருவரும் பார்வை கெட்டுப்போகாமலிருக்கிருர்கள்.

### A Lucky Dog.

ஒரு அதிர்ஷ்டமுள்ள நாய்.—புடாபெஸ்த் நகரத்தில் ஒரு மகம்மதீய ஸ்திரீ பணக்காரியாயிருந்தாள். இவள் மரணமடையும்முன் தான் வளர்த்த நாய்க்கு 1000 பவுன் உயில் எழுதி வைத்தாள். உயிருடனிருந்த காலத்தில் சுவானத்துக்கு ஒரு ஸுந்தர மந்திரம் கட்டி அதில் படுதா ஜரிகை மெத்தைகளை ஏற்படுத்தி சிங்காரித்திருந்தாள். நாய் வஸிக்கும் அறைக்குள் அவள் அனுமதியின்றி யாரும் பிரவேசிக்கக் கூடாதென்று கட்டளையிட்டிருந்தாளாம்.

### A Woman Who does not Sleep.

ஒரு தூங்கர்ஸ்திரீ.—ஒரு டாக்டர் தெரிவிப்பதாவது, புடாபெஸ்த் பட்டணத்தில் 17 வருஷங்களாக நித்திரை செய்யாமல் ஒரு ஸ்திரீ யிருக்கிருள். தூங்காததற்குக் காரணம் விசாரித்ததில் அடியிற்கண்ட விஷயம் வெளிப்பட்டது. 17 வருஷங்களுக்கு முன் தனது அருமைக் குமாரியை சில திருடர்கள் களவாடப் பிரயத்தனப் பட்டதாகவும், அதுமுதல் தூக்கத்தை ஒழித்துவிட்டதாகவும் சொன்னளாம்.

# HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### How a Thief was Caught.

திருடனைப் பிடித்த வழி.—சல்கத்தா மெடிகல் காலேஜில் படித்துக்கொண்டிருக்கும் நான்கு பையன்கள் சேர்ந்து மெடிகல் காலேஜ் தெருவிலுள்ள ஒரு வீட்டில் வெகுநாட்களாயிருந்து வந்தார்கள். இவர்கள் அடிக்கடி தமது ஸாமான்களில் சிலவற்றை யிழந்து வந்தார்கள். இவ்விதம் தாங்கள் மோசம் போவதற்குக் காரணமென்னவென்றும், தம் ஸொத்தைத் திருடுபவர்கள் யாரென்று கண்டுபிடிக்கவேண்டுமென்றும் யோஜித்து வருகையில் ஒருநாள் திரும்பவும் ஜன்னலில் கட்டியிருந்த துணி காணாமல்போயிற்று. பிறகு இம்மாணுக்கருள் ஒருவன் திருடனைக் கண்டு பிடிப்பதன் நிமித்தம் நல்ல சட்டை ஒன்றை ஜன்னல் வழியாய் வெளியே தொங்கவிட்டு அச்சட்டையின் ஒரு கோடியில் கெட்டியான ஒரு நூலைக் கட்டித் தன் காலில் கட்டிக்கொண்டு படுத்துக்கொண்டான். இவ்விதமிருக்கையில் திருடன் வழக்கப் பிரகாரம் அவ்விடம் வந்து சட்டையைப் பிடித்திழுக்க, சட்டைக்கும் காலுக்கும் நூல் பிணைக்கப் பட்டிருந்ததனல் காலும் இழுக்கப்பட்டது. உடனே அப்பையன் தன் சிநேகிதர்களை மெதுவாயெழுப்பித் திருடனைப் பிடிக்கவேண்டினன். அவ்விதமே கூட இருந்த மாணுக்கர்கள் வெளியே யோடித் திருடனை சிந்தாமணிதாஸைப் பிடித்துப் போலீஸார் வசம் ஒப்புவித்தார்கள்.

### Lemon Juice.

எலுமிச்சை ரஸம்.—உடம்பு ஸ்தூலித்திருக்கப்பட்ட ஸ்திரீகள் ஒவ்வொரு வேளையும் சாப்பிட்டு அரைமணி நேரத்துக்குப் பிறகு எலுமிச்சம் பழ ரஸத்தை ஒரு டம்ளர் குளிர்ந்த ஜலத்தில் பிழிந்து ஒரு நாளைக்கு மூன்றுவேளை வீதம் ஒருநாள் விட்டொருநாள் குடித்து வரவேண்டும். இடைவிட்டநாள்களில் அதேமாதிரியாக சாப்பிட்டானபிறகு மூன்று வேளையும் நல்ல தண்ணீரில் ஸ்பிரிட்ஸ் அம்மோனியா 10, 15 துளிகள் விட்டு குடித்து வரவும். இப்படி கொஞ்சகாலம் அனுஷ்டித்து வந்தால் தேகத்திலுள்ள ஊழல்ச் சதை மாறிவிடும்.

எலுமிச்சம்பழ ரஸம், தேகத்திலும், கைகால்களிலும், நகங்களிலும் இருக்கப்பட்ட அழுக்குகளையும் துணி மணிகளிலுள்ள கறைகளையும் போக்கடிக்கும்.

### Secrets of Toast Making.

ரொட்டி சுடுவதில் ரகஸ்யம்.—'டோஸ்ட்' என்று சொல்லப்படும் சுட்ட ரொட்டி கரகரப்பா யிருக்க வேண்டுமானல் ரொட்டியை முதல் நாள் ராத்திரியே அறுத்துவைத்து விடவேண்டும். இப்படிச்செய்வதால் ரொட்டித் துண்டுகள் சுடுவதற்குமுன் நாலாபக்கத்திலும் நன்ருய்க் காய்ந்திருக்கும். இன்னென்று ரொட்டித்துண்டங்களை சுட்ட பிறகு தலைகீழாக, அதாவது, ஒட்டுப்பக்கம் கீழாக, இருக்கும்படி சூடானஇடத்தில் வைக்கவேண்டும். ஏனென்ருல் அறுத்துச் சுட்ட துண்டங்களை ஒன்றின்மேல் ஒன்ருக வைத்தால் ஒன்ரோடொன்று ஒட்டிக்கொண்டுவிடும்.

### To Extract a Damaged Screw.

ஒடிந்துபோன ஸ்க்ரூ ஆணியைக் கழற்ற.—ஜன்னல் முதலிய மரவேலைகளில் சில ஸமயங்களில் தலையில் முறிந்துபோன ஸ்க்ரூ ஆணிகளைக் கழற்றும்படி நேரிடுகிறது. இப்படிப்பட்ட ஆணிகளை ஸாதாரணமாக ஸ்க்ரூட்ரைவரைக்கொண்டு கழற்ற முடியாது. இதற்கு பின்வருமாறு செய்யவும்:—ஸ்க்ரூ ஆணியின் முறியாத பக்கத்திற்கு கடுத்தாற்போல வழக்கம்போல் ஸ்க்ரூ ட்ரைவரை வைத்து தலைமுறிந்த பக்கத்தில் ஒரு சின்ன மரக்கட்டையை வைக்கவும். இந்தக்கட்டையை ஸ்க்ரூட்ரைவரோடு சேர்த்து அழுத்தி, கட்டை, ஸ்க்ரூ ட்ரைவர், இரண்டையும் திருப்பவும். ஸ்க்ரூ ஆணி வழக்கம்போல் கழன்றுவிடும்.

### Making Coffee.

காப்பி காய்ச்சுதல்.—காப்பிப் பொடியை தண்ணீரில் போட்டுக் கொதிக்கவிடவும். கொதித்த பிறகு அதை எடுத்து, அடித்தட்டில் ரொம்பவும் சிறிய த்வாரங்களையுடைய பாத்திரத்தில் கொட்டி கஷாயம் இறங்கும்படி 6 நிமிஷம் வைக்கவும். காப்பிக்கசண்டெல்லாம் த்வாரமுள்ள தட்டில் தங்கிவிடும். பிறகு கஷாயத்தை எடுத்து கசண்டு தங்கிய தட்டின் மேலேயே ஊற்றவும். இப்படிச் செய்வதால் கஷாயத்தில் உள்ள சிறு பொடிகள்கூட கசண்டுகளோடு மேலே தங்கி விடும். இந்தப்பிரகாரம் காப்பி காய்ச்சினல் காப்பி வாஸனை ஜாஸ்தியாயிருப்பதோடு நிறையவும் காண்கிறதாம். இந்தமாதிரி டர்க்கி, ருமேனியா, முதலிய தேசங்களில் காப்பி காய்ச்சுகிருர்கள்.

# ECONOMIC LITERATURE.
# பொருளாதார ஸம்பந்தமான பிரசுரங்கள்.

**Village Panchayets.**

கிராமப் பஞ்சாயத்துகள்.—ஸமீபத்தில் காலஞ்சென்ற கனம் திவான் பஹதூர் ரகுநாத ராயரவர்கள் பஞ்சாயத்தைக் குறித்து இவ்வாறெழுதி யிருக்கிறார்கள் :—"ஒவ்வொரு கிராமத்திலும் ஆகவேண்டிய முக்கிய காரியங்கள் மூன்று. அவையாவன:-போலீஸ் பந்தோபஸ்து, விவசாயத்தில் தேர்ச்சி, சுகமுறை, ரோட்டு முதலிய காரியங்கள். இவைகள் நேராக நடந்து மகாஜனங்கள் சுகப்பட வேண்டுமானால், உத்தியோகஸ்தருடைய உபத்திரவமின்றி, கிராம க்ஷேமத்தை நாடியே யுழைக்கக்கூடிய பஞ்சாயத்து ஒன்று ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்படவேண்டும். அதில் அவ்விடத்திய பெரியதனக்காரர் முகாமையா யிருக்கவேண்டும்.

இந்தப் பஞ்சாயத்து மூலமாகக் கிருஷி சம்பந்தமான பரீக்ஷைகள் நடக்கவேண்டும். இப்பொழுதிருப்பதைவிடத் திறமான விளைச்சலோ, புதுப்பொருள்களோ, பலான கிராமத்திலாகுமாவென்பதை விஷயந் தெரிந்தவருதவியைக்கொண்டு விவேகிகளான குடிகளுடைய பூமிகளில் சாகுபடிசெய்து பார்க்கவேண்டியதும், அவ்வாறு கண்டறிந்ததைப் பிறருக்கு உதவும்படி செய்வதும், இப்பஞ்சாயத்தவருடைய நோக்கமாகவேண்டும். இம்மாதிரிப் பரிக்ஷைகள் சிறுகச்செய்து அனுபவத்தை யனுசரித்துப் பெருகவேண்டும்.

கிராமச் சந்தைகள் பஞ்சாயத்தார் மாரிபத்தாகவே நடக்கவேண்டும். தவிர, தாலுக்கா விவஸாயச் சங்கமிருந்தால், அதற்கு யாராவது ஒருவர் மெம்பராகி அம்மூலமாகவும், வேறு மூலமாகவும் விவசாய விஷயமாய்ப் பிரசுரமாகிவரும் துண்டுக் காகிதங்கள், பத்திரிகைகள் முதலியவற்றைத் தருவித்து, ஸ்கூல் மாஸ்டரைக்கொண்டு படிப்பித்து, அறிவு விசாலமாகும்படி பார்க்கவேண்டும்.

இப்படி விசாரித்து வந்தால், தழை எரு, வேலி, சாகுபடி தினுசுகள், பழவகைகள், காய்கறி வகைகள், அவையெல்லாம் சீக்கிரத்தில் வெகுதூரம் பெருகிவிடும். கிணறு வகைகளுக்கு நீர் வேண்டியமட்டில் கிட்டும். பாசனவகைகள் மலியும். கன்றுகாலிகள் முதல்தரமாகும். குடிகள் உத்தியோகஸ்தரை இதுவேண்டும், அதுவேண்டுமென்று கெஞ்ச வேண்டியதில்லை. நியாயமாய்க் கிடைக்கக் கூடியதையெல்லாம் பஞ்தாயத்தார் கேட்டு வாங்கிக்கொள்ளலாம். சட்ட விஷயமான சந்தேகங்களைக் கோர்ட்டு உத்தியோகஸ்தருக் கெழுதித் தீர்த்துக் கொள்ளலாம் சர்க்காரும் நம்மை இப்படித் தான் செய்யச் சொல்லுகிறார்கள்.

விவஸாயமன்றிவேறு யாதேனும் தொழில் நடக்குமென்று கண்டால் பஞ்சாயத்தார் அதற்கு வேண்டிய முயற்சிசெய்து, 'சிறுசக்கட்டிப் பெருக வாழலாம்'. கிராமத்தைச் சுற்றியிருக்கும் புறம்போக்கை மாடு மேய்க்க இடமில்லாமல் யாரும் அபகரிக்காதபடி பார்த்துக்கொள்ளலாம். கோயில் குளங்களையும் சிதஸ்தாகாமல் பார்வையிடலாம். கிராமத்தவருக்குள் காணும் எவ்வகைத் தகரார்களையும் அவர்களே பைசல் செய்து விடவேண்டும். இதுதான் கிராமத்துக்கு வெகுதூரம் க்ஷேமகரமாகக்கூடிய சங்கதி.''

# TAMIL LITERATURE.
# தமிழ்க் கல்வி.

**Advice to Young Men.**

பால போத மாலிகை.—

(ககரவர்க்கம்.)

கடன்படுவோர்க் குடன்பட நில்லேல்,
காலன்முன் போகினுஞ் சூலமுன் போகேல்,
கிரியைகள் யாவுஞ் சரியாய் நடத்து,
கீழ்மையோரிடத்துந் தாழ்மையாய்ப் பேசு,
குருடரைச் சேரினுந் திருடரைச் சேரேல்,
கூடா நட்பைத் தேடா தொழி,
கெடுநிலை நேரினும் நடுநிலை தவறேல்,
கேட்ட நன்னெறியை நாட்டமாய்க் கடைப்பிடி,
கைப்பொருடன்னை யெப்பவும் போற்று,
கொலைபொய்களவைத் தொலையிலகற்று,
கோதுரையாடித் தீதுகொள்ளாதே,
கௌரவத்துடனே பௌருஷம் நடத்து,

(சகரவர்க்கம்.)

சண்டையைக்கண்டால் அண்டையில் நில்லேல்,
சாக்ஷியஞ் சொல்லிற் காக்ஷியைக்கூறு,
சினந்துரையாடிக் கனங்குறையாதே,
சீக்கிரப்புத்தியை நீக்கி நிதானி,
சுத்தமாயிருந்து நித்தமுமுணவுண்,
சூதினை விரும்பி வாதனை கொள்ளேல்,
செல்வமிருக்கினுங் கல்வியுங் கைக்கொள்,
சேட்டன் சொல்லைக் கேட்டு நட,
சையென்றெவரையும் வைதுவருத்தேல்,
சொற்பபொருளறியும் விற்பனந்தேடு,
சோரமியற்றுந் தாரமகற்று,
சௌகரியத்தைச் செவ்வையாய்ப் பேண்,

# MISCELLANEOUS NEWS.
## நாநா ஸங்கதி.

### The Late Mr. A. O. Hume.

காலஞ்சென்ற மிஸ்டர் ஏ. ஒ. ஹ்யூம்.—இந்தியா கவர்ன்மெண்டில் ஸெக்ரெடெரியாயிருந்து இந்தியர்களிடத்தில் அபார அன்பைக்காட்டி அவர்கள் ஸ்திதி மேன்மேலும் உயர்ந்து அவர்களுக்கும் இங்கிலீஷ்காரர்களுக்குமுள்ள நேசம் விருத்தியாக வேண்டுமென்று உழைத்துவந்த மிஸ்டர் ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம் சென்ற ஜுலைமாஸம் 31-ம் தேதியன்று இறந்துபோனாரென்று கேட்க அதிக துக்கமாயிருக்கிறது. இவருக்கு இந்திய விவஸாயிகளுடைய நிலைமையை சீர்திருத்த வேண்டுமென்ற எண்ணம் மிகவும் உண்டு. அதற்காக எவ்வளவோ பாடுபட்டிருக்கிறார். இங்கிலாந்திலுள்ளவர்களுக்கு ஒரு தடவை எழுதும்போது அவர் இந்திய விவஸாயங்களைப் பற்றி பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—நன்றாய்த் தின்றுவிட்டுக் கும்மாள மடிக்கிற ஜனங்களே; இந்தக் கோடிக்கணக்கான ஜனங்கள் படும் கஷ்டங்கள் உங்களுக்குத் தெரியுமா. பிறந்ததுமுதல் இறக்கிற வரையில் எத்தனை தடவை ஸந்தோஷப்பட்டிருப்பார்களென்று எண்ணுகிறீர்கள்? பொழுதுவிடிந்தது முதல் அஸ்தமனம் வரையில் ஒரே உழைப்புத்தான். எப்போதும் பசிதான். "வியாதியும் வருத்தமுந்தான்". இது தான் அவர்கள் கதி என்றெழுதி யிருக்கிறார்.

### The New Governor of Madras.

சென்னைப் புதுக்கவர்னர்.—இப்போது சென்னை ராஜாதானிக்குக் கவர்னராக நியமிக்கப்பட்டுள்ள லார்ட் பெண்ட்லண்ட் அவர்கள் தமது பத்தினியாருடனும், இரண்டு குழந்தைகளுடனும் செப்டம்பர் மாதம் 28-ந்தேதி லண்டனிலிருந்து புறப்பட்டு அக்டோபர் மாதம் 28-ந் தேதி சென்னை வந்து சேருவார்.

### Increase of Pay to Revenue Servants.

ரெவினியூ கீழ்தர உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளம் உயர்த்தல்.—1. ராஜதானியிலுள்ள தாசில்தார், டிப்டி தாசில்தார், ஸப் மாஜிஸ்ட்ரேட் இவர்களது கச்சேரிகளில் ஒரு கிளர்க்கு அதிகமாய் நியமித்தல்.

2. தாலூகா எட்குமாஸ்தாக்களுக்கு ரூ 30-லிருந்து 35-க்கு சம்பளம் உயர்த்தல்.

3. தாலூகா எட் அக்கவுன்டெண்டுகளுக்கு ரூ 50-லிருந்து 70-க்கு சம்பளம் உயர்த்தல்.

4. தாலூகா சிரஸ்ததார்களுக்கு ரூ 60-லிருந்து 80-க்கு சம்பள முயர்த்தல்.

5. ஷை கச்சேரிகளில் கடைசி குமாஸ்தாக்களுக்கு ரூ 15-சம்பளத்தை அடியோடு எடுத்துவிட்டு ரூ 20 சம்பளமாகச் செய்தல்.

6. ஷை கச்சேரிகளில் தஸ்தரபந்துகளுக்கு ரூ 7-லிருந்து 8-க்கு சம்பள முயர்த்தல்.

7. ஸேவகர்களுக்கு ரூ 6-லிருந்து 7-க்கு சம்பள முயர்த்தல்.

ஜுலைமீ 1வ-முதல் அமுலுக்குக்கொண்டுவரும்படி இந்தியா ஸெக்ரட்டெரியவர்கள் உத்தரவு செய்திருக்கிறார்கள். உயர்த்தியதால் வருஷவாரி ரூ 3,31,026 செலவு அதிகமாகிறது.

### The All India Vaishnavite Conference.

ஸர்வ இந்திய வைஷ்ணவ மஹா ஸமாஜம்.—இப் பெயர்கொண்ட ஸபையாரின் 2-வது ஸங்கம் ஜுலை மாஸத்தின் ஆரம்பத்தில் பூரி என்னும் ஜகன்னாதத்தில் வெகு விமர்சையாய் நடந்தேரியதாம். ஆயிரம் பேயருக்குமேல் ப்ரதி நிதிகளும் ஸுமார் மூவாயிரம் பேர்கள் அன்னியர்களும் வந்திருந்தார்களாம். காஞ்சிபுரம் வித்வான் ஸ்ரீமாந். ப்ரதிவாதி பயங்கரம் அநந்தாசார்யஸ்வாமி அக்ராஸநம் வகித்தார். ஜகன்னாதத்தில் ஒருஸ்ரீ வைஷ்ணவ மகா வித்யாலயம் என்று பேருள்ள பாடசாலை ஏற்படுத்துவதாய்த் தீர்மானம்செய்து, ரூபாய் 8000 வரையில் அங்கே வஸுலாயிற்றாம். இன்னும் பல தொகைகள் கொடுப்பதாய் பலர் ஒப்புக்கொண்டிருக்கிறார்களாம். வைதீக ஸர்வஸ்வம் என்று ஒரு பத்திரிகையும் இந்த ஸபையாரால் வாரத்துக்கு ஒருமுறை வெளிப்படுத்தப்படும் என்று தெரிகிறது. அனேக ராஜாக்களும், கனவான்களும் இந்த ஸபைக்கு ஆதரவைச் செய்ய வித்தமாயிருக்கிறார்கள். நம் தேசத்திலும் இந்த ஸபையின் பிரிவுகள் ஏற்பட்டு, வித்தையும் பகவத் பக்தியும் விருத்திசெய்யப்படுமென்று நம்புகிறோம்.

### The Late General Booth.

ஜனரல் பூத் மாண்டுபோனார்.—நம் தேசத்தில் பல விடங்களில் சில கிறிஸ்தவர்கள், ஐரோப்பியராணுவம், ஸால்வேஷன் ஆர்மி அல்லது ரக்ஷணசைனியம் என்று பெயர் வைத்துக்கொண்டு, இந்துக்

கள் மாதிரி காஷாய உடுப்புக ளுடுத்தி ஸங்கீத கோஷத்துடன் மத ப்ரஸங்கம் செய்து, உற்சவங்கள் முதலானவை நடக்கிற இடங்களில் துண்டுப் பத்திரிகைகளைக்கொடுத்துத் தங்கள் கிறிஸ்தவ மதத்திற்காகப் பாடுபடுகிறதைப் பார்த்திருக்கிறோ மல்லவா? இவர்களை ஒரு ஸைனியம் போலக் கட்டுப்பாட்டுக் குட்படுத்தி, இந்தியாவில் மாத்திரமில்லாமல் இங்கிலாந்து, அமெரிக்கா, ப்ரான்ஸ், ஜெர்மெனி, ஆஸ்திரேலியா முதலிய தேசங்களிலும் இம்மாதிரி ஸைனிய மேற்படுத்தி மதாபிமானத்தை யுண்டுபண்ணியும், பாபக்கிருத்தியம் செய்துவரும் மூடஜனங்களை மீட்டும், பிரமாதமான காரியம் செய்து, உலகமெங்கும் பெயர் வாங்கின மகா ஸாமர்த்தியமும், சுறுசுறுப்பும், ஜீவகாருண்ணியமுமுள்ள ஜனரல் பூத் இறந்துபோனாரென்றறிந்து விஸனக்கிறோம். இவருக்கு வயது 83 ஆகிறது. எட்வர்டு சக்ரவர்த்தியும், அலக்ஸாண்டிரா சக்ரவர்தினியும் இவரிடத்தி லபிமான முள்ளவர்கள். இந்தியாவில் பஞ்சமர்களும், கள்வர் முதலிய குற்றத் தொழிலை செய்யும் வகுப்பாரும், கதியற்ற ஏழை ஜனங்களும், ஜனரல் பூத் ஏற்பாட்டின்படி ஸால்வேஷன் ஆர்மியன் முயற்சியால்மிகுந்த நன்மை யடைந்து வருகிறார்கள். ஜனரல் பூத் செய்த வேலை கிறிஸ்து மதத்தைச் சேராதவர்களை அம்மதத்திற் சேரும்படி செய்தது அவ்வளவாயில்லை. ஏழைகளாயிருந்து வறுமையினால் பாவத்தொழில் செய்யும் வகுப்பாருக்கு நல்ல தொழிலைக் கற்பித்து அவர்கள் ஒழுங்காய் ஜீவனம் செய்யவும், நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்யும்படியாய் ஆஸ்பிடல்கள் ஸ்தாபிக்கவும், இவை போன்ற நற்காரியங்களில் முயன்றதே விசேஷம். பூத் இப்போது மாண்டுபோனபடியால் அவர்செய்த வேலைகளை அவர் பிள்ளைகள் செய்வார்கள்.

**The Public Service Commission.**

கவர்ன்மெண்ட உத்யோக விசாரணை கமிஷன்.—இந்தியர்களுக்குப் பெரிய உத்தியோகங்கள் கொடுப்பதில்லை என்னும் புகாரை விசாரித்து நியாஞ் சொல்லும்படி 'ப்ளிக் ஸர்விஸ்' (கவர்ன்மெண்டு உத்தியோகங்கள்) கமிஷன் என்பதாக ஒருகமிட்டியை நம்முடைய சக்ரவர்த்தி நியமித்திருக்கிறார்.

இந்தக் கமிஷன் என்னென்ன விஷயங்களைப்பற்றி விசாரணை செய்யுமென்றால்.—

1. இந்தியாவில் கவர்ன்மெண்டு உத்யோகங்களுக்கு நியமனம்செய்யும் விதம். நியமன மானவர்களைப் பயிற்சிசெய்விப்பதும், அவர்கள் ப்ரோபேஷன் அல்லது உமேதிவாரா யிருப்பதும், சம்பளம், லீவ், பென்ஷன் இவைகள் ஸம்பந்தமான விஷயங்கள். 2 ஐரோப்பிய ரல்லாதவர்களை நியமிப்பதில் தற்காலமுள்ள நிர்பந்தங்கள், உத்யோகங்களை இம்பீரியல் என்றும் ப்ரொவின்ஷியல் என்றும் பிரித்திருப்பது எப்படி யிருக்கின்றது. 3. கவர்ன்மெண்ட் உத்யோகங்களுக்கு வேண்டியவை இன்னவையென்பதும், இன்னும் பொதுவாய் என்ன சிபார்சுகள் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்வதும். இந்தக் கமிஷனைக் சேர்ந்தவர்கள்.—லார்டு ஐலிங்க்டன் (சேர்மன்), மெம்பர்கள், லார்டு ரோனால்ட்ஷே, ஸர்மர்ரே ஹாமிக்கு, ஸர் தியடோர் மாரிஸன், ஸர் வாலண்டின் சிரோல், மிஸ்டர் எப். ஜி. ஸ்லை, மிஸ்டர் மகாதேவ பாஸ்கார் சௌபல், மிஸ்டர் கோகலே, மிஸ்டர் மாட்ஜி, மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துல் ரஹிம், மிஸ்டர் ராம்ஸே மெக்டானல்டு, மிஸ்டர் லாரன்ஸ் பிஷர், இந்த பன்னிரண்டுபேரும் ராயல் கமிஷனர்களாக இருந்து இந்தியருக்குப் பெரிய உத்தியோகங்கள் கொடுப்பதில் என்ன தடைகளிருக்கின்றனவோ அவைகளை நீக்கி, அவ்வுத்தியோகங்கள் நியாயமாய் கிடைக்கும்படியாய் சிபார்சுகள் செய்வார்கள்.

**Honorary Deputy Collectors.**

ஆனரரி டிப்டி கலெக்டர்கள்.—சென்னை கவர்ன்மெண்டார் சென்னை ராஜதானியின் ரிவினியூ இலாகா ஸம்பந்தமாய் ஒரு புதிய கவர்ன்மெண்டு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதாவது, ரிவினியூ உத்தியோகஸ்தர்களின் வேலையைச் சிறிது ஸுலபமாக்கும் நோக்கத்துடன் சம்பளமில்லாமல் கௌரவ முறையில் சிலரை உதவியாக நியமித்தல் வேண்டு மென்பதாம். சென்னை ராஜதானியில் ரிவினியூ இலாகாவில் அளவுக்கு மிஞ்சிய வேலைகள் எப்போதும் இருந்துக் கொண்டிருக்கின்றன. இவைகளை அப்போதப்போது கவனித்துப் பட்டுவாடா செய்வது ரிவினியூ அதிகாரிகளுக்கு மிகவும் கடினமாயிருக்கிறது. இந்தக்கஷ்டத்தை நிவர்த்தி செய்வதற்குச் சிலரைச் சம்பளமின்றி வேலை பார்க்கும்படி ஏற்பாடு செய்வித்தால் நலமென்பது கவர்ன்மெண்டாருடைய நோக்கத்துடனேயே மேற்கண்ட கவர்ன்மெண்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இவ்விதம் சம்பளமின்றி வேலே பார்க்கும் உத்த யோகஸ்தர்கள் "ஆனரி டிப்டி கலெக்டர்கள்" என்று அழைக்கப்படுவார்களாம். முதல் முதல் இவர்கள் நியமிக்கப்படும்போது மூன்று வருஷ காலங்களுக்கு இவர்கள் வேலே பார்க்கலாம் என்று நியமிக்கப்படு வார்கள். இந்த மூன்று வருஷ காலத்தில் இவர்கள் செய்து வந்திருக்கும் வேலே திருப்திகரமாயிருந்தால் மறுபடியும் இவர்களேயே நியமித்தல் கூடும். முதல் முதல் இவர்கள் கையில் விடப்படும் வேலே, 'சென்னே எஸ்டேஸ்ட் லாண்டு ஆக்டுப்படி' வரக் கூடிய மனுக்களேப் பட்டுவாடா செய்தலும், அந்த ஆக்டுக்கு உட்பட்டு வரக்கூடிய வியாஜ்யங்களே விசா ரித்து முடிவு செய்தலுமாம். அந்த ஆக்டு ஸம்பந்தமாய் இந்தக் கௌரவ உத்தியோகஸ்தர்களுக்கு எவ்வளவு தூரம் அதிகாரம் கொடுக்கலாம் என்பதை திட்டமா யறிந்து சொல்லும்படி சென்னே கவர்ன்மெண்டார் ரிவினியூ போர்டாரைக் கேட்டுக்கொண்டிருக்கிறுர் கள். தவிர முதல் முதல் எந்தெந்த ஜில்லாக்களில் ஆனரரி டிப்டி கலெக்டர்கள் நியமிக்கப்படலாமென்று ரிவினியூ போர்ட்டாரைக் கவர்ன்மெண்டார் யோ சனே கேட்டிருப்பதுடன், அந்த உத்தியோகத்துக்கு ஏற்ற வயதும், அறிவும், அந்தஸ்தும் உடைய சிலரு டைய பெயர்களே அந்தந்த ஜில்லா கலெக்டர்களின் மூலமாய் அறிந்து பிரேரேபிக்கும்படி கேட்டுக்கொண் டிருக்கிறுர்கள். ஏற்கனவே ரிடையராகிப் பென் ஷன் பெற்றுவரும் டிஸ்ட்ரிக்டு ஜட்ஜிகள், ஸப் ஜட்ஜி கள், டிஸ்ட்ரிக்ட்டு முன்ஸீப்கள், டிப்டி கலெக்டர்கள் தாசில்தார்கள் முதலானவர்கள் இந்தக் கௌரவ உத்தி யோகத்துக்குப் பாத்தியமுடையவர்க ளாகலாம்என்று கவர்ன்மெண்டார் கருதுகிறுர்கள். ஆனுலும் இவ் விஷயமாய் அதிகமாய் வற்புறுத்துரைக்கக் கவர்ன் மெண்டார் விரும்புகின்றுர்களில்லே. ஆனல் பெரும் எஸ்டேட்டுகளுக்கு அதிபதிகளாயுள்ள ஜமீன்தார்கள், மிராசுதார்கள் முதலானுேர் இவ்வுத்தியோகத்துக்கு அருகராகார்கள் என்றும், அவர்களுடைய பெயர்களே சிபார்சு செய்யக் கூடாதென்றும், கவர்ன்மெண்டார் வற்புறுத்தி மேற்படி உத்தரவில் கூறுகிறுர்கள்.

## A Dead Man Revived.

பிரேதக் குழியினின்றும் மீண்டவன்.—ஸ்பெயின் தேசத்து மாகாணங்களில் ஒன்ருகிய கெலீஷியாவி லுள்ள ஜூராவிக்காவில் மாஸ்னி என்ற மிராசுதார், மூன்று நாட்களுக்கு முந்தி வலிப்பு நோய் கண்டு அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தார். பக்கத்தில் வை த்தியர் ஒருவரும் இல்லாததிஞல் மிருக வைத்தியர் ஒருவரை வரவழைத்துப் பார்க்கச்சொல்ல, அவர் வந்து பார்த்து நோயாளி ஜன்னியால் இறந்துபோய் விட்டார் என்று சொல்லிவிட்டார். சுற்றத்தார் கள் பலர் வந்து இறந்துபோனவரை கல்லறைத் தோட்டத்திற்குக் கொண்டுபோய், பிரேதக்குழியில் வைத்து, செய்யவேண்டிய சடங்குகளேச் செய்த பிறகு, பிரேதக் குழியை மூடுவதற்கு முந்தி வழக்கப் படி மண்வெட்டியால் மண்ணே வாறிப் பிரேதத்தின் பேரில் கொட்டிஞர்கள். பிரேதக் குழியிலிருந்து ஒருவிதமான தீனஸ்வரம் உண்டாயிற்று. அதை உற் றுக் கவனிக்கையில் அது செத்துப்போனுன் என்று உறுதியாக்கப்பட்டிருந்த மனிதனுடைய குரலாக இருந்தது. இதைக் கேட்டவுடனே அங்குவந்தவர்க ளுள் சிலர் பயந்து ஓடிப்போனுர்கள். தைரியமுள்ள வர்கள், பிரேதக் குழியிலிருந்த பிரேதப் பெட்டி யைத் திறந்து பார்க்கையில் மாஸ்னி உயிரோடிருக்கக் கண்டார்கள். அவனேப் பிரேதப் பெட்டியிலிருந்து வெளியே எடுத்து அவனுக்கு ஒரு அங்கி கொடுத்தார் கள். அந்த அங்கியைத் தரித்துக்கொண்டு அவன் வீட்டிற்கு நடந்துவந்தான் என்று ஆங்கிலப் பத்திரி கை ஒன்று கூறுகிறது.

## Railway between England and India.

இங்கிலாண்டுக்கும் இந்தியாவிற்கும் ரெயில் மார்க்கம்.—ஜலமார்க்கமாக இப்போது லண்டன் நகருக்குப் போவதற்குப் பதிலாக கரைமார்க்கமாக வே போகும்படியாக நம் தேசத்திலுள்ள கராச்சி பட்டணத்திலிருந்து பர்ஷியா தேசத்தின் வழியாய் ஒரு ரெயில்வண்டிப்பாதை ஏற்படுத்துவதாக உத்தே சித்திருக்கிறுர்கள். அந்த ரெயில்வண்டிப்பாதை ஐரோப்பாக் கண்டத்திலுள்ள முக்கியமான ரெயில்பா தைகளுடன் நேரான ஸம்பந்தம் பெறுகின்றது. இது ஏற்படும் பக்ஷத்தில் ப்ரான்ஸ் தேசத்திலுள்ள கலெய் நகரம்வரை ஜலத்தைத் தொடாமல் நம்மவர் நிலமார் க்கமாய்ப் பிரயாணம் செய்யலாம். கலேய் நகருக்கும் லண்டன் நகரத்திற்கும் மத்தியிலுள்ள ப்ரிட்டிஷ் சானெல் சொற்ப நேரத்திற்குள் தாண்டத்தக்கது. அவ்வாய்க்காலின் அடியில் இருப்புக்குழாய் பாலம் போடுவதாக முன் உத்தேசமிருந்தது. அவ்வுத்தேசம்

திரும்பவும் ஊர்ஜிதத்திற்குக் கொண்டுவரப்பட்டு நிறைவேறுமாகில் ஜல ஸம்பந்தமன்றி நம்மிந்தியா தேசத்திலிருக்கிறவர்கள் லண்டன் நகருக்குப் போகலாம். ரெயில்வண்டியும் இருப்புக்குழாய்ப் பாலமும் ஸ்திரப்படுமாகில் ஒரு வாரத்திற்குள் கராச்சியிலிருந்து லண்டன் நகரத்திற்குப் போகலாமென்று இஞ்ஜினியர்கள் மதிக்கிறார்கள்.

**Mr. Gokhale's Advice.**

**கோகலேயின் எச்சரிக்கை.**—ஆனரெபில் மிஸ்டர் கோகலே இங்கிலாந்துக்குச் செல்லும்போது சட்டஸபைகளிலுள்ள பிரதிநிதி மெம்பர்களுக்கு ஒரு அவசியமான எச்சரிக்கை செய்துவிட்டுப் போனார். பிரதிநிதி மெம்பர்கள் கவர்ன்மெண்ட் விவகாரங்களில் ஆயுளெல்லாம் செலவு செய்த நிபுணர்களுடன் சட்டஸபையில் வாதாடவேண்டி யிருக்கிறதென்றும், அந்த நிபுணர்களைப்போல் இவர்களும் நிபுணர்களாயிருந்தாலொழிய இவர்கள் வெறும் பேச்சுகள் செல்லாவென்றும் எச்சரிக்கை செய்தார். மிஸ்டர் கோகலே இப்படி எச்சரித்தது மிகவும் ஸரி.

**An Old Jew.**

**ஓர் வயது சென்ற யூதன்.**—வார்ஸா என்னும் ஊரில் 113 வயதுள்ள ஒரு யூதன் ஸமீபத்தில் இறந்துபோனதாக "ஜியுயிஷ்கிரானிக்கில்" என்னும் யூத பத்திரிகை தெரிவிக்கின்றது. இந்த யூதன் முதல் நெப்போலிய சக்ரவர்த்தியைக் கண்டதாகவும் ஐந்தாம் தலைமுறை வரைக்கும் ஸந்ததிகளிருப்பதாயும் சொல்லப்படுகிறது. ஐந்தாந் தலைமுறை யென்றால் இவன் தன் பெயரனுடைய மகளின் மகனைக் கண்டான் எனக் கொள்க.

**The Word's Languages.**

**உலக பாஷைகள்.**—உலகத்திலுள்ள பாஷைகளின் தொகை 3424. அமெரிக்காவில் 1624, ஆசியாவில் 937, ஐரோப்பாவில் 587, ஆபிரிக்காவில் 276. உலக முழுவதும் ஆங்கிலேயபாஷை பேசும் ஜனங்களின் தொகை 15 கோடி, ஆங்கிலபாஷையின் சொற்களின் தொகை 6 லக்ஷம்.

## OPENINGS FOR BUSINESS.
## வியாபாரம் நடக்கக்கூடிய இடங்கள்.

[அடியில்கண்ட வியாபாரங்களில் அக்கரையுள்ளவர்கள் "பிழைக்கும் வழி" யையும் அந்தந்த நம்பரையும் குறிப்பிட்டு வேண்டிய விவரங்களுக்கு கல்கத்தாவில் டைரெக்டர் ஜெனரல் ஆப் கம்மர்ஷியல் இண்டெலிஜென்ஸ் என்னும் அதிகாரிக்கு எழுதவும். தக்க வியாபாரி என்பதற்கு அடையாளமாக தாம் பத்து வரவு செய்யும் பாங்கிக்காரர்களைக் குறிப்பிட்டு எழுதினால் சீக்கிரத்தில் பதில் கிடைக்கும்.

**Electro-plate.**

**எலக்ட்ரோ ப்ளேட்.**—இந்தியாவில் எலக்ட்ரோ ப்ளேட் ஸாமான்கள் வியாபாரஞ் செய்பவர்களின் பேர்கள் ஒரு பர்மிங்காம் கம்பெனியாருக்கு வேணுமாம். [B. 59.]

**Tin Boxes.**

**தகரடப்பிகள்.**—பஞ்சாபிலுள்ள ஒரு வியாபாரிக்கு பற்பொடி அடைப்பதற்கான தகரடப்பிகள் செய்பவருடைய விலாஸம் தேவையாம். (B. 69.)

**Indent Business.**

**இன்டேண்ட் வியாபாரம்.**—பர்மிங்ஹாமிலுள்ள ஒரு லிமிடெட் கம்பெனிக்கு, இரும்பு ஸாமான்கள், உலோகங்கள், இதர ஸாமான்கள் முதலியவைகளுக்கு ஆர்டர்கள் வாங்கி அனுப்பக் கூடியவர்களுடைய விலாஸங்கள் தேவையாம். (B. 71.)

**Sheep Skins.**

**ஆட்டுத்தோல்.**—ஹாங்காங் பட்டணத்திலுள்ள ஒரு வியாபாரிக்கு பதனிட்ட ஆட்டுத்தோல் ஏற்றுபவர்களுடைய விலாஸம் தேவையாம். (B. 72.)

**Rice, Jute Bags and Tea.**

**அரிசி, கோணிச்சாக்கு, தேயிலை.**—ட்ரெபிஸாண்டில் ஒரு வியாபாரிக்கு அரிசி, கோணிச்சாக்கு, தேயிலை, இவைகள் ஏற்றுமதி செய்பவர்களுடைய விலாஸம் தேவையாம். (B. 73.)

**Butter.**

**வெண்ணெய்.**—ஸெயின்ட் பீடர்ஸ்பர்க் நகரத்திலுள்ள ஒரு வியாபாரிக்கு கல்கத்தாவில் டப்பியில் அடைத்த வெண்ணெய் வியாபாரம் செய்பவர்களுடைய விலாஸம் தேவையாம். (B. 74.)

## MADRAS MARKET REPORTS.

## மதராஸ் மார்க்கெட் நிலைவரங்கள்.

தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்படும் வர்த்தகச் சங்கத்தாரின் ஆகஸ்டுமாஸம் 14-ம் ௳ ரிப்போர்ட்டுப்படி

**Produce Market**.--விளைபொருள்கள்

| | | ரூ. |
|---|---|---|
| ஆவாரம்பட்டைபாரம் 1-க்கு | ... | 16 முதல் 23 |
| கொன்னைப்பட்டை ஷை | ... | 14 முதல் 15 |
| கடப்பை கடுக்காய் ஷை | ... | 10 முதல் 12 |
| சேலம் ஷை ஷை | ... | 20 முதல் 22 |
| நல்லெண்ணெய் ஷை | ... | 100 முதல் 110 |
| புங்கம் எண்ணெய் ஷை | ... | 90 முதல் 93 |
| எட்டிக்கொட்டை ஷை | ... | 14 முதல் 17 |
| விளக்கெண்ணெய் ஷை | ... | 76 முதல் 77 |
| கொட்டை முத்து 164 ராத்தல் | | 10½-11-0-0 |
| | | ரூ. அ. பை. |
| பந்தர் பச்சை அரிசி 44 படி | ... | 8 முதல் 9½ |
| நெல்லூர் அரிசி 31 படி | ... | 7 12 முதல் 8 |
| | | |
| வெங்காயம் (கடப்பை) பாரம் | ... | 25 0 0 |
| ஷை (பல்லாரி) ஷை | ... | 30 0 0 |
| நீலகிரி உருளைக்கிழங்கு | ... | 21—22 |

**Metals.**—உலோகங்கள்.

| | | ரூ. |
|---|---|---|
| பித்தளைத் தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷ-ம் பாரம் | ... | 240 |
| செப்புத் தகடுகள் பாரம் | ... | 307 |
| செப்புக்கட்டி ஷை | ... | 270 |
| நாகம் ஷை | ... | 95 |
| ஷை (உள்ளூர்) ஷை | ... | 82 |
| ஈயம் ஷை | ... | 75 |
| காரீயம் ஷை | ... | 70 |
| வெள்ளீயம் ஷை | .. | 206 வராகன் |

**Iron.**—இரும்பு.

| | | |
|---|---|---|
| மருச்கி சட்டம் 2 செ. பாரம் | ரூ. | 25 முதல் 26 |
| சீமை | ... | 42 முதல் 45 |
| மருக்கி தகடு | 6--9, 12—13, | 26—40 |
| பீப்பாய்க் கட்டு | ... | 32—35 |
| 8 பட்டை எஃகு | ... | 26—27 |
| எஃகு வில்கட்டு | ... | 27—30 |
| திரணைக் கம்பி மருக்கி 2 செ. | ... | 27 |
| சீமை | ... | 42—49 |

## SEASON.

## காலஸ்திதி.

**Rainfall**.

மழை.—1912௵ எப்ரல்௴ 1௳யிலிருந்து 1912௵ ஆகஸ்டு௴ 30௳வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம், ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 21·19 | 23·15 |
| வால்டேர் | 17·29 | 17·12 |
| காக்கிஞடா | 16·00 | 17·54 |
| மசூலிப்பட்டணம் | 24·31 | 19·17 |
| நெல்லூர் | 10·54 | 8·53 |
| மதராஸ் | 9·39 | 12·44 |
| கூடலூர் | 11·98 | 11·10 |
| நாகப்பட்டணம் | 4·57 | 9·36 |
| பாம்பன் | 2·20 | 4·09 |
| கொழும்பு | 55·41 | 37·14 |
| திருவநந்தபுரம் | 53·18 | 37·51 |
| கொச்சி | 103·56 | 80·44 |
| கள்ளிக்கோட்டை | 115·63 | 92·85 |
| மங்களூர் | 121·04 | 105·40 |
| மெர்க்காரா | 108·76 | 102·16 |
| ஐதராபாத் | 17·12 | 18·80 |
| ரெய்ச்சூர் | ... | ... |
| பல்லாரி | 7·63 | 8·91 |
| கர்நூல் | 11·13 | 15·11 |
| கடப்பை | 7·42 | 15·14 |
| ஹாஸ்ஸான் | 17·45 | 20·88 |
| பெங்களூர் | 15·24 | 18·11 |
| கொடைக்கானல் | 28·44 | 26·19 |
| உதகமண்டலம் | 26·67 | 31·94 |
| கோயம்புத்தூர் | 5·47 | 8·25 |
| வேலூர் | 8·42 | 19·22 |
| சேலம் | 11·32 | 20·98 |
| திருச்சிஞப்பள்ளி | 12·19 | 11·90 |
| புதுக்கோட்டை | 8·41 | 15·41 |
| மதுரை | 13·23 | 12 41 |
| திருநெல்வேலி | 5·36 | 5·94 |